உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உயிரிளங்குமரன்

## நாடகம்

இது,

நவாலியூர்

திரு. க. சோமசுந்தரப் புலவர் அவர்களால்

இயற்றப்பட்டு

திரு. க. வேலுப்பிள்ளை அவர்களால்

வெளியிடப்பட்டது.

1936

*Copy-right RESERVED,*

5069a

PRINTED AT
THE THIRUMAKAL PRESS
CHUNNAKAM.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பதிப்புரை | .... | ௧ |
| 2. | முன்னுரை | .... | ௮ |
| 3. | அணிந்துரை | .... | ௯ |
| 4. | சிறப்புப்பாயிரம் | .... | ௩௩ |
| 5. | கதைச்சுருக்கம் | .... | ௪௭ |
| 6. | நாடக உறுப்பினர் | .... | ௫௪ |
| 7. | நூல் | .... | 1—128 |
| 8. | அனுபந்தம் | .... | 129 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 1 | 5 | மொழி | மொளி |
| ,, | 11 | கிரியாழ் | கிரிவாழ் |
| ,, | 16 | தரு கரம் | தருங்கரம் |
| 3 | 2 | பொருட் | பொருள் |
| ,, | 27 | மலர்த் | மலத் |
| 4 | 19 | அங்ஙங்கங்க | அங்கங்க |
| 6 | 4 | இப்பொழுது இந்த | இப்பொழுது |
| ,, | 7 | தொண்டுக்கு | தொண்டுக்குட் |
| ,, | 19 | தூக்கிஞெரு | தூக்கிலொரு |
| ,, | 21 | திகணிள்று | திகளின்று |
| 7 | 3 | தங்குந்தண் | தங்குதண் |
| 8 | 23 | பேரி | பெரி |
| 23 | 22 | நெறியாளை | நெறி |
| 24 | 22 | திருக்கண் | திருக்கண் |
| 38 | 9 | சாத்தான் | சாத்தன் |
| ,, | 13 | முகமென | முகமெனச் |
| 50 | 3 | தனது | தமது |
| ,, | 5 | தமது | தனது |
| ,, | 12 | வாயிற் | வாயில் |
| 51 | 1 | பொருட் | பொருள் |
| 38 | 7 | விருண்ட | விருண்ட |
| 39 | 14 | காப்பியங் | காப்பியக் |
| ,, | 25 | கனிபல | கனிப்பல |
| 41 | 24 | வெங்நா | வென்று |
| 50 | 10 | தளை. | தழை |
| 52 | 9 | முன்றுற் | முன்றுள் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 53 | 14 | துளவுமேவான் | துழவுமேவாள் |
| ,, | 17 | பெண்டீர்க் | பெண்டிர்க் |
| 56 | 13 | முன்றா | முன்று |
| 69 | 24 | கொழுத்து | கொளுத்து |
| 73 | 11 | முடியாது | முசியாது |
| 74 | 23 | துர்வாய்ச் | துவர்வாய்ச் |
| 93 | 11 | நயக்குந்நா | நயக்கு நா |
| ,, | 13 | சாருந்நா | சாருநா |
| 94 | 2 | சிக்கறுத்த | சிக்கறுத்து |
| 95 | 12 | பொருந்த | பொருந்தா |
| 96 | 13 | நாழுலந்து | நாளுலந்து |
| 100 | 22 | கிணற்றரு | கிணற்றறு |
| 103 | 22 | நட்மன்னை | நம்பன்னை |
| 111 | 15 | ,, | ,, |
| 119 | 19 | கேட்க்க | கேட்க |
| 121 | 17 | குடிமகள் | குடிமகன் |
| 122 | 19 | நந்நீர் | நன்னீர் |
| 123 | 23 | விதுப்புறை | விதுப்பிறை |
| 126 | 15 | எய்திநல் | எய்தியநல் |
| 132 | 7 | கிகின்றருள் | கிகின்ற |

உ

சிவமுருகா

# பதிப்புரை

கண்மணியைக் கண்மணியி னொளியா னானைக்
கருதுமொழி தனைவிளக்குங் கதிரா னானை
விண்மணியை விண்ணவர்கள் பெருமான் றன்னை
வெவ்வசுரன் விறல்மாய வடிவேல் வீசும்
உண்மணியை உயிராகி யுயிரி னுள்ளே
ஒளியாகி ஓங்கார வடிவாய் நிற்கும்
எண்மணியைச் சிறுகாலை யெம்மை யாண்ட
எண்கிரியாழ் குருமணியை ஏத்து வேனே.

பிறவிதொறுஞ் செய்திட்ட புண்ணியங்கள் திரண்டு
பேரன்பா யருளாகிப் பின்புவ்டி வாகிக்
கறைதவிரும் முழுமதிபோல் ஒளிவிளங்கும் முகமும்
கருணைபொழி யிருவிழியுந் துயரரியு நகையும்
முறையுரைக்குந் திருவாயு முத்திதரு கரமும்
முளரிமலர்ச் சேவடியு மாயெழுந்து போந்து
குறைதவிர வெனையாளுஞ் சிவஞான யோகக்
குருமணியி னிருசரணங் கும்பிடுவேன் யானே.

கடவுள் பிறப்பும் இறப்புமில்லாதவர். உயிர்கள் பிறப்பிறப்புடையன. இவை மலத்தினால் வருவன. மலம் ஆணவம் கன்மம் மாயை என முத்திறப்படும். ஒன்று [illegible] மறைக்க, ஒன்று விருப்பு வெறுப்பை உண்

டாக்க, ஒன்று உடம்பையும் உலகையும் தரும். இவற்றைப்பெற்று உயிர்கள் பிறந்திறந் துழல்கின்றன. இந்தப் பிறப்பிறப்பாகிய துக்கக்கடலை நீந்தி இறைவன் திருவடிகளாகிய பெருந்துறையை அடைவதற்கு வழி விருப்பு வெறுப்பைநீக்கி மலத்தை வலிகுன்றச்செய்து அதன் வலிக்குறைவில் உண்டாகும் அருளொளி விளக்கத்தைக்கண்டு, அவ்வொளியோடு நிற்றலேயாம். அவ்வாறு நிற்குங்கால் அவ்வொளியினிருந்தே கடவுள் அருட்குருவாய் வந்து அழிவில்லாததும் துக்கம் பயவாததுமாகிய தமது திருவடிப்பேரின்பத்தைத் தருவார்.

இவ்வாறு கடவுளின் இயல்பையும், உயிர்களின் இயல்பையும் உயிர்களைப்பற்றிய குற்றங்களின் இயல்பையும் விளங்கக் கூறி, அவ்வுயிர்கள் அக்குற்றங்களின் நீங்கிக் கடவுளின் திருவருளைப் பெற்று உய்யும் வழிகளையும் விதிப்பதுவே சமயம் எனப்படும்.

உயிர்கள் வினைத்தொடர்பால் பல்வேறு உடம்புகளை எடுக்கின்றன. உடம்புதோறுமறிவு வேறுபடுகின்றது அறிவுக்கேற்ப கடவுள் வழிபாடும் அமைகின்றது. அதனால் அவரை வழிபடும் நெறிகளும் பலவாகின்றன. ஆகவே உலகில் பலவேறு சமயங்கள் நிலவுவனவாயின.

அங்ஙனம் பலவாய சமயங்களுள்ளே சைவசமயமே தலைசிறந்ததென்றென்பதை, இறைவனருளிய அருணூல்களாலும் அவாவறுத்து மெய்யுணர்ந்து வீடுபேறு தலைக்கூடிய பெரியோர்களின் நிறைமொழிகளாலு மறிய

இனிக் கடவுள் உயிர் மலம் என்னும் மூன்று பொருட்களின் இயல்பையும் முற்ற எடுத்து முடியக் கூறும் நூல்கள் சைவசித்தாந்த நூல்கள் எனப்படும். அவை பதினான்காகும். (1) கடவுள் பிறப்பிறப்பும் அவற்றிற்குக் காரணமாகிய மலத்தொடர்பு மில்லாதவர். உண்மையறிவானந்தப் பொருள் திருவருளோடு கூடி படைப்பாதிய தொழில்களைச் செய்தும் செய்வித்தும் உயிர்களை உய்யக்கொள்வர். அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைத் திருமேனிகளையும் உயிர்களின்பொருட்டு எடுத்து வினையின் பக்குவத்துக்கு ஏற்ப அவைகளுக்கருள் செய்யும் பெருங்கருணையாளர். திருவருளே கண்ணகக்கொண்டு அறிந்தனுபவிப்பாரா லன்றி ஏனையோரா லறியப்படாதவர்.

(2) உயிர்கள் பல. அவை அநாதியே செம்பிடத்துக் களிம்புபோல தம்மிடத்துப்பற்றிய மும்மலத்தால் அறியாமையும், அறியாமையால் அவாவும், அவாவால் வினைகளும், வினைகளால் பிறவிகளும் உண்டாக, கறங்கும் சகடமும்போல இறந்துழலாநிற்கும். அப்பிறவிகளிற் பிறந்தும் சார்ந்ததன்வண்ணமாய்நின்று வினைகளை ஆற்றியும் வினைப் போகங்களைப் புசித்தும் வருங்காலத்து நல்வினைப்பயன் கைகூடச் சிவநெறி தலைப்பட்டு இருவினை யொப்பும் மலபரிபாகமு முண்டாயவிடத்து இறைவனுடைய திருவருள் பதியும். பதியவே, "நில்லாதனவற்றை நிலையுளவென்" றறியும் புல்லறிவாண்மை போம். போக [illegible]புணர்வு தலைப்பட்டு இறைவனை நாடி நிற்கும். [illegible]த்து[illegible]ல் அவ்விறைவன் குருவடிவாய் எழுந்தருளி [illegible]ன்பது[illegible]ண்மையுபதேசம் செய்வான். செய்ய, மலத்

தொடர்பு நீங்கி தடையிலா ஞானம் பெற்று என்று மழியாப் பெருவாழ்வை யெய்தியின்புறும்.

(3) மலங்கள் ஆணவங் கன்மம் மாயையென மூவகைப் படும். ஆணவம்மூலமலமாய் அநாதியே உயிரின் அறிவை மறைத்து நின்று காலவெல்லையில் தன்வலி யடங்கி நிற் கும். கன்மம் உயிருக்கு இன்பதுன்பமாகிய போகங் களை யுதவும். மாயை உயிரின் வினைக்கேற்ற உடம்பு களையும் உலகங்களையும் போகப் பொருள்களையும் தரும் என்று இங்ஙனம் அவற்றின் இயல்பு எல்லாம் இப் பதினான்கு நூல்களினுங் கூறப்படுவனவாம்.

ஆதலின் அவை மெய்கண்ட சாத்திரம் எனவும் படும். இம்மெய்கண்ட சாத்திரம் பதினான்கும் பாக்களா லாக்கப்பட் டிருத்தலின் இலக்கண இலக்கிய அறிவு சாலவுமில்லார், இவற்றின் நுண்பொருள்களை எளி[illegible] லுணரமாட்டார்கள். நிற்க,

இக்காலம் புதுக்கதைகள் (Novels) படிக்கவும் கேட்கவுமே ஊக்கங்கூடியதாயிருத்தலின் சைவசித்தாந்த சாத்திரங்களின் அகத்தே புதைந்த உண்மைகளை யெல் லாம் நாடகத்திற்கு வேண்டிய பல அங்கங்கங்களோடும் காட்சிகளோடும் பாட்டும் உரையும் விரவ அமைத்து "உயிரிளங்குமரன்" என்னும் பெயருடன் ஒரு நாடக நூலாக எனது ஆசிரியரும் அரும்பெறற் றுணைவரு மாகிய திரு. க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் செய்து தந்தார்கள்.

இந்நாடகத்தை ஆசிரியர் அவர்களின் பள்[illegible] திலும், கொழும்பிலே இந்துப்பீட்டி நாடக[illegible]

நவாலியிலும், ஆசிரியர்களும் மாணாக்கர்களுமாக நடித்துக் காட்டியகாலங்களில் கண்டுகளித்த பெரியோர்கள் பலர் இதனை அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தினால் பலர்க்கும் பயன்படுமெனக் கூறினார்கள்.

சிற்றின்ப வல்லியாகிய இருளுக்குளிருந் திடருறுகின்ற உயிரிளங்குமரன், தன்னின்னல் எல்லாந்தீரவும், எழிலொரு மருளொளியை அறிவாகிய கண்ணாற் காணவும், அருட்குருவாய்த் தேடிச்சென்று அன்பினுடனினியமொழியறைந்து சென்ற குருநாதனை நினைந்திரங்கி, மணிவாய் மலர்ந்து அம்மொழியை மீட்டுமொருகாற் செப்புவதற்குச் சிவசுப்பிரமணியனே சேரவருவாயோ என்ற செம் மொழிகளி லீடுபட்டவனாய், நான், என்னைப்போன்ற பலர்க்கும் பிறர்க்கும் உபயோகமா மாறு இதனை அச்சிட எண்ணியிருந்தேன்.

யாழ்ப்பாணத்திலேயுள்ள தமிழறிஞர்கள் எழுதும் நூல்களைப் போற்றி அவை தம்மை யச்சுவாகனத் தேற்றி உலகத்திற்குப் பயன்படக் கூடியதாகச் செய்வதற்கு ஓர் "நிதி" அமைக்கும் வரை அவர்கள் நூல்களெல்லாம், பொருள் முட்டுப்பாட்டால், சிதைந்து போய் விடுமோவென நான் எண்ணுந்தோறும் பெருங் கவலைப் படுகின்றேன்.

இந்நாடக நூலை எமது துணைவர் எழுதித்தந்து ஆண்டுகள் பல கழிந்தன. இதுவரை இதனை ஓர் [illegible] அச்சிலிட்டு வெளிப் படுத்தாததற்குப் பொருள் [illegible]டையாயிருந்தது.

ஃ

திருவருளின் துணையாலும், நற்றவப் பெரியோ ரருளாலும், சில செந்தமிழ்ச் செல்வர்கள் தாமாகவும் எனது வேண்டுகோட் கிரங்கியும் பொருளுதவி செய்த மையால், இப்பொழுது இந்த உயிரிளங்குமரன் என் னும் இந்நாடகத்தை அச்சிற் பதிப்பித்து வெளிப் படுத்துகின்றேன்.

இச்செந்தமிழ்த் திருத்தொண்டுக்கு பொருளீந்து உதவிசெய்த தமிழபிமானச் செல்வர்களுக்கும் எனது வேண்டுகோட் கிணங்கி மதிப்புரை எழுதி உதவிய பெரி யோர்களுக்கும் நாடகத்தை அழகுபெற அச்சிட்டுத வியத் திரு. நா. பொன்னையபிள்ளை அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரித்தாகுக.

"சிந்தைநிறை செல்வமாய்த் தோன்றாத துணையாய்
தெவிட்டாத தெள்ளமுதமாய்
தேயாத மதியமாய்க் குவியாத பதுமமாய்
செய்யா மணித்தீபமாய்
வந்தபிணி தீர்க்கின்ற வமுதசஞ் சீவியாய்
வறுமைதவிர் பொன்வாரியாய்
வாக்கில்வரு தெய்வமாய்த் தூக்கிரெரு பொருளான
வன்னமந் திரவடிவியாய்
அந்தமா திகணின்று மறியாத கன்னியாய்
அன்பில்வரு செந்தேறலாய்
அறிவினுக் கறிவாய் என்னுயிரினுக் குயிராகி
அப்பாலு மாகிநிற்கும்

ஆனந்த வல்லியே அன்பருள மகலாத
அரியசெந் தமிழன்னையே!
திங்கள்வள ருங்குவடு தங்குந்தண் டலைகொண்ட
தென்பொதிய மலையரசியே!''

உன் ஆணை என்றும் நிலவுவதாக. உன்னடித் தொழும் பிற்கே யானுரியேனாகுக. சுபம்!

''திருநிலயம்''
உடுவில், சுன்னாகம்
21-2-36.

அடியான்
க. வேலுப்பிள்ளை,

# ஆக்கியோன் முன்னுரை

சைவசித்தாந்த நூல்களைக் கற்றுவந்தகாலத்து அதனை ஓர் நாடகமாக எழுதவேண்டுமென்ற ஓர் எண்ணம் என்மனத்தில் உதித்தது. அது நெடுங்காலம் வேரூன்றி வளர்ந்துவந்தது.


பின்பொருகால் நான் கற்பிக்கும் கழகத்திலே ஓர் பரிசளிப்புக் கொண்டாட்டத்திற்கு ஓர் புதிய நாடகத்தைச் செய்துதரவேண்டுமென்று அக்கழகத்தலைமையாசிரியர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது மாணக்கர் நடித்தற்கேற்ற சிறிய நாடகமாக அப்பொருளை அமைத்து எழுதிக்கொடுத்தேன்.

இதனை விரித்தெழுதி வெளியிட்டால் பயன்படுமென்று கேட்ட பல நண்பர் கேள்விப்படி பின்பு அதனை விரித்தெழுதி, செந்தமிழ் நூல்களை அச்சிடுவிக்கும் திருத்தொண்டு தலைக்கொண்டு செய்யும் எனது அரும்பெறற் றுணைவனிடம் கொடுத்தேன்.

அவருடைய முயற்சியாலும் அன்பர் பலர் துணையாலும் இப்பொழுது அஃது அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தப்படுகின்றது. இந்நாடகத்தை எழுதுங்கால் உடனிருந்து எழுதி உதவிய அன்புடைய ஆசிரியர்கட்கும் எனது மாணக்கர்கட்கும் இதனைச் சிறப்பித்து அருந் தமிழ்ப் பாடல்களாலும் உரைகளாலும் மதிப்புரை அருளிய பேரியோர்களுக்கும் அச்சிட்டு வெளிப்படுத்தும் எனது துணைவனுக்கும் பொருளுதவிய செல்வர்களுக்கும் எனது அன்பைச் செலுத்துகின்றேன். எம்பிரான் அருள்புரிவாராக.

நவாலி வடக்கு,
கும்பமதி,
சிவராத்திரி நாள்,
21-2-36.

க. சோமசு



க. சோமசுந்தரப்புலவர்

# அணிந்துரை

மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளானும் நுகரப்படுவனவாகிய ஐம்பெரும் பூதத் தொகுப்பாகும் இவ்வுலகம் காரண காரியமாகிய நிலைகளிரண்டினும் **உள்**பொருளேயாமென்பதும், இங்ஙனம் உள்பொருளாய் நிலைபெறும் இவ்வுலகத்தின்கண்ணே கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறிந்து வருவனவாகிய உயிர்கள் எண்ணிறந்தனவாய் என்றுமுள்ள அறிவுப்பொருள்களேயாமென்பதும், அறிவுப் பொருள்களாகிய இவ்வுயிர்கள் தம் இயற்கையிலேயே அறியாமை வயப்பட்டுத் தம் இயற்கையறிவு மழுங்கிக் கிடக்கக் காண்கின்றேமாதலால், இவை தம்மை அங்ஙனம் பொதிந்து இவற்றோடொருமித்து நிற்கும் அறியாமை தொன்றுதொட்டு உளதாமென்பதும், இவ்வாறு அறியாமை வயப்பட்டு மயங்கும் ஆருயிர்களை அதனினின்றும் விடுவித்து அறிவுறுத்தற் பொருட்டு அவை தமக்குப் பல்வேறு உடம்புகளையும் பல்வேறு உலகங்களையும் படைத்துக் கொடுப்பானான இறைவன் ஒருவன் உளனாமென்பதும், இவ்வினை நுகர்ச்சியானே அறியாமை முற்றுந் தேய்ந்து ஒழிந்தவழி, ஆண்டு அவ்வுயிர்கள் மாட்டு முன் சுருங்கிக்கிடந்த இயற்கையறிவு விரிந்து விளங்க, அதன்கண் முதல்வன் திருவருட் பேரொளி ஒற்றித்து நின்று துளும்புமாகலின், அதுவே வீடுபேறாகுமென்பது: இவற்றை உள்ளடக்கி நிற்கும் பொருள்கள்

மூன்று என்பதும், அவைதாம் பதி பசு பாசமெனப் படுமென்பதும் பிறவும், அவற்றி னிலக்கணமெல்லாந் தெள்ளத் தெளிய விளக்கி உள்ளத்திருள் மாய்த்து, உண்மைப்பொருள் காட்டி, ஒப்புயர்வின்றி நிற்கும் செம் பொருணூல் சிவஞானபோதமென்பதும் ஈண்டையுலகம் நன்கறியும்.

இத்தகைய அறிவுநூற் பெருவாரிதியிற் படிந்து, அதன் பொருணுட்பங்களை யெல்லாந் திரட்டி, மாண வர்க்கு எளிதாகச் சமயநூ லூன்விதை செழுமனப்புலத் தில் அங்குரிக்குமாறும், அறிஞர் அகத்தை மகிழ்விக் கும் பாச்சுவையும் நடைச்சுவையும் தமிழ்ச்சுவையும் விளங்கி யொளிருமாறும், இதுகாறும் எவருஞ் செல் லாத சமயநூல் நாடகப் புதிய துறையிலிழிந்து, ஒரு வாற்றானும் அசித்தாதலரிய வியாபகப்பொருள்போல ஔபச்சிலேடிக வியாபகமாதலும், அதுபற்றி அதி சூக்கும சித்தாதலுமின்றி அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாதலும், அநாதியே பசுத்துவ மெனப்படும் ஆணவ மலத்தின் மறைப்புண்டு கிடக்கும் இச்சாஞானக் கிரியைகளை உடைத்தாய பசுவெனப்படும் தூலசித்தா தலுமுடைய உயிரை நாடக நாயகனாகிய உயிரிளங் குமரனைக் கொண்டும், ஏனைய பாத்திரங்களையும் அதற் கியையச் சைவசித்தாந்த கருத்தொடுபட உருவகமாக்கிப் புனைந்து "உயிரிளங்குமரன்" என்னும் இந்நாடகநூலை ஆக்கிச் சைவ நன்மக்கட்கு ஒரு விருந்தாக வளித்தவர் யாழ்ப்பாணம், நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரென்னும் பெருந்தகையாளராகும்.

உண்மையாகவே இப்பிரபஞ்சமாகிய அவைக்களத்தில் மக்களாகிய நாம் பலவிதமாகிய வேடங்களைத் தரித்துக்கொண்டு கூத்தாடி வீணர்களாகின்றோம், "நந்தாவனத்திலோ ராண்டி—நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்—கொண்டுவந் தானொரு தோண்டி—அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி" என்னும் சித்தர் வாக்குக் கிலக்காகி,

"ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாநடஞ்செய் வரதர்பொற் றடொழ"

என்பதையு மோராது பாழாகின்ற பிறப்பினையடைந்த உயிரை நாடகவரங்கி லமைத்து விளக்கிநிற்கும் இந்நூலினைத் தமிழுலகம் நன்கு போற்றி எதிர்கொள்ளுமெனக் கருதுகின்றோம்.

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தருளும் பச்சைநிற
வல்லிபுகுந் தெடுத்தணைக்க மருவியொரு வடிவாகி
இளஞாயிற் றெழில்காட்டு மிருமூன்று திருமுகமும்
அழகார்பன் னிருவிழியு மாறிரண்டு தடந்தோளும்
திருக்காரும் நெடுமாலும் மலரயனுந் தேவர்களும்
இருக்காதி மறைமுடிவுங் காணாத விணையடியும்
கொண்டெழுந்து வாளுடு குடியேற்றி யேழையையுந்
தொண்டுகொண்ட வருண்ஞானச் சுடருமிழும் வேன்முருகா"

"ஒருமானை யிடம்பிடித்தே யொருமானைக் கரம்பிடித்த
பெருமானைப் போலிரண்டு பிணைமானைப் பிடித்தனையே
பூமாதும் மலர்மாதும் புணரூகலத் தொருமாலை
மாமாவென் றழைப்பதற்கோ மருமகனாய் வந்தனையே"

"பொய்யுரைப்போர்புன்னுவில்பொருந்தியதீட்டோட்டுதற்கோ
செய்யதமிழ்ப் பெருமாட்டி தீயிடைநீ குளித்ததுவே
வேற்றுமொழி தீண்டுதலான் மேனிகழீஇக் கொள்வதற்கோ
ஆற்றெறிரோ யேட்டின்மிசை யம்மாநீ நீந்தியதே
எஞ்சலிலா வுயிர்மருந்து யானென்ப துணர்த்துதற்கோ
நஞ்சமுத மாக்கியெங்கள் நாயகிநீ காட்டியதே"

என நான்முகத்தேவரும் வித்தகருள்ளத்தைத் தித்திக்கச் செய்யும் முருகக் கடவுள் வணக்கம், தமிழ்த் தெய்வ வணக்கம் ஆகிய கவிகளை இயற்றிய புலமைமிக்க ஆசிரியர் கல்வியறிவாற்றலில் குறைந்த என்னை இந்நூற்கு ஓர் அணிந்துரை அளிக்கும்படி கேட்டுக்கொண்டதை யுன்னிப் பின்னிட்டேனாயினும், ஒரூரார் என்னும் உரிமை பற்றிக் கேட்டுழி அதனைப் போற்றியீதல் தகுதியென அவ்வுரிமையீர்க்க வுவந் தநுமதங்கொண்டு எழுத முன்வந்தாம். அணிந்துரைக் கிவ்வுரிமை யணிந்துரை யாகுக.

தமிழ்நாட்டகத்துப் பண்டைக்காலத்தே இயல் இசை நாடகமென்னும் முத்தமிழ்ப்பெருக்கும், அவைகளை யாக்கும் புலமைசான்ற வித்தகக் குழாமும், வித்தகரை யாதரிக்கும் உத்தம வள்ளல்களும், தமிழ்ச்சுவை பருகுந் திருச்செவி மாக்களும் பொலிந்து விளங்கியதால் புலவர்களும் போற்றப்பட்டுவந்தனர்; நூல்களும் போற்றப்பட்டு வந்தன. மூவகையிலும்பலநூல்கள்எழுதப்பட்டன. அதற்குச் சான்றுகூறும் நூலாகத் தொல்காப்பியம் இருப்பதால், அதுகொண்டு யாவரும் உணரத்தகும் பெருமை கிடைத்திருக்கின்றது. இக்காலத்தே நாடகநூல்தனிநூலாகயாண்

டும்பெறுவதற்கில்லை. நாடகம் அறுபத்துநான்கு கலைஞானங்களிலொன்று. தமிழரசர்கள் தங்கள் சபைகளில் கூத்தர், பாணர், விறலியர் முதலியோரையும் அங்கங்களாக வைத்துப் போற்றிவந்தனர். நாடகத்துக்குப் பெருமதிப்பு இருந்தது. இதில் மக்கள் மிகவும் மயங்கியிருந்தனர். சைவ வைணவ ஆலயங்களில் பண்டு நாடகங்கள் நடிக்கப்பட்டன. இன்றும் சுவாமிக்கெதிரில் நடிப்பதற்குத் தேவதாசிகள் வைத்திருப்பதாலும் அறியலாம். இந்நடனத்திற் காட்டும் அபிநயம் யாவும் தத்துவ ரீதியாகப் பாவிக்கப்படுவன. நாடகமாவது மக்கள் உள்ளத்தை ஒன்பதுவித நிலையில்வைத்து அவ்வப்போது அவ்வத்தன்மையதாக்கி இன்பம் பயக்கும் பெற்றியுடையதாகலின் அதனைப் பெரிதும் விரும்புவாராயினர். அதனை நாடக நவரசமென்பர். அவை உவகை, பெருமிதம், இளிவரல், வெகுளி, நகை, மருட்கை, அச்சம், அவலம், நடுவுநிலையெனப்படும். இச் சுவைகளைக் கொண்ட நாடகத்தைப் புத்தம், சமணம் என்னும் இரு மதங்களும் மக்களைச் சிற்றின்ப வழிப்படுத்துஞ் சாதனங்களெனக் கொண்டு கடிவதாயின. ஆகையால் கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டுகளுக்குப்பின் தமிழ்நாட்டில் அந்நூல்கள் ஒளி மங்குவதாயின. பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்தவரும், சிலப்பதிகாரம் என்னும் நூலுக்கு நல்லுரையெழுதியவருமாகிய அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன்னரே " இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும், தேவவிருடிநாரதன் செய்த பஞ்ச பாரதீய முதலாயுள்ள தொன்னூல்களும், நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாயுள்ள தொன்னூல்

களும், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம்" என்னும் நூல்களும் இறந்தன. சாரகுமாரன் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கமும், பராசைவமுனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரதசேனாபதீயமும், கடைச்சங்கமரீஇய பாண்டியன் மதிவாணனார் செய்த மதிவாணர் நாடகத் தமிழ்நூலும் என வைந்தும் அவர்காலத்திருந்து பின்னரழிந்தொழிந்தன. இலக்கண வரம்புக் கிலக்கியமாகிய அத்தொன்மைவளஞ்சான்ற நாடகப் பெருநூல்களெல்லாம் இறந்தொழியவே, பிற்காலத்துத் தோன்றிய நாடகங்கள் சந்தி, சுவை, பொருளொருமை யென்னு மிவற்றைத் தெளிவுறக் காட்டாது விரவிநடந்த காரணத்தால் அவற்றை இலக்கணமமைந்த நாடகங்களெனச் சொல்லுதற்கு இடமில்லை. செஞ்சொற் புலவர் செவ்விநிறைந்த நாடகங்களை யமைத்து உதவாத காரணத்தினாலே கல்வியறிவில்லார் கண்ட கண்டவாறு நாடகங்களை யமைக்க முற்பட்டு முதனூலுக்கு மாறாகக் கதைகளை மாற்றியும் திரித்தும் நாடகத்துக்கே ஓர் இழிந்த பெயரை உண்டாக்கிவிட்டனர். உயிர்க் குறுதி பயக்கும் உண்மைகளை நவரசங்களுட் செறித்துவைத்து உதவும் நீர்மையது நாடகம். நாடகக் கவி தானொரு வைத்தியனென அறிதல்வேண்டும். நோயாளியிடத்துப் பொருளினைப் பெறுதல் கருதிப் பொருந்தாப்பண்டத்தை மருந்தெனக் கொடுக்கும் வைத்தியனுளனாயின் அவனால் விளையுங் கேட்டுக்கோரளவில்லை. காமக் கனலை மூட்டுதற்கெண்ணிச் சிற்றின்பச் சரிதைகளை நாடகமாக்கி உதவும் போலி நாடகக் கவிகளால் நாட்டுக்கு விளைகின்ற

கேடு மேற்குறித்த போலி வைத்தியனால் விளைகின்ற கேட்டினைப்பார்க்கினும் பல்லாயிரமடங்கு பெரிது. சிற்றின்பத்துறை முற்றாய்த் தழுவாது நாடகம் இயற்றல் வேண்டுமென்பது கருத்தன்று. சிற்றின்ப ரசம் நாடகத்தில் ஓரங்கமாயிருக்கும். அத்துணையே வேண்டப்படுவது. இதன் சிறப்பு நோக்கிக் கடவுளர்பாலும் ஒவ்வோர் கூத்துப் புகழப்படுகின்றது.

இனி, இக்கூத்து அகக்கூத்துப் புறக்கூத்து என இருவகைப்படும். அரசர்க்காடுங் கூத்தெனவும், பொது சனங்களுக்காடுங் கூத்தெனவு மமையும். பிந்தினதையே இக்காலந் தெருக்கூத்தென்பார். சந்தமுதலாகப் பிரபந்த மீறாக இருபத்தெட்டு உருக்களும் அகக்கூத்திற்கும், தேவபாணி முதல் அரங்கொழிச்செய்யு ளீறாகச் செந்துறை விகற்பங்களுங்கொண்ட பாட்டுடையனவாய், கூத்தின் விகற்பத்திற்கேற்ற வாச்சியங்களாகிய கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கங்களைப் பெற்றனவாய், அவ்வவ் வங்கங்களுக்குரிய ஆடல்களாகிய கீற்று, கடிசரி முதலிய தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் முதலிய வடுகிற்குரிய கால்களும், உடற்றாக்கு முதலிய உடல்வர்த்தனையும் அகக்கூத்திற்கும், பெருநடை, சாரியை, பிரமரி முதலிய புறக்கூத்திற்கு முரிய ஆடல்களைப் பெற்று இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சங்கொண்ட பாடல்களைப் பெற்றுப், பலவகைத் தாளத்துடன் கண்டாரை மகிழ்விப்பது. மேற்கூறிய தேசிக முதலியவற்றைத் தனித் தனி காண்க. கூத்துப் பாவ, ராக, தாளங்களைக்

கொண்டு பாட்டிற்கியையப் பாதத்தால் நடப்பதாம். அக்கூத்து சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென இருவகைப்படும். அவற்றுள் சாந்திக் கூத்தாவது தலைவன் அவிநயம் ஏந்திநின்று ஆடுவதாம். நாயகன் சாந்தமாக ஆடிய கூத்தாதலால் சாந்திக் கூத்தெனப்பட்டது. அது நான்கு வகைத்து. அவை சொக்கம், மெய், அவிநயம், நாடகமெனப்படும். சொக்கமென்பது சுத்தநிருத்தம். அது 108 க் கரணமுடையது. மெய்க் கூத்தாவது (மெய்த்தொழிற் கூத்து) தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். அவிநயக் கூத்தாவது நிருத்தக்கை தழுவாது பாட்டினது பொருளுக்கேற்பக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக் கூத்து. நாடகக் கூத்தாவது கதைதழுவிவருங் கூத்து.

"வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து
மூசிய சுண்ணை முகத்தெழுதித் – தேசுடனே
ஏந்துசுடர் வாள்பிடித்திட் டீசனுக்குங் காளிக்கும்
சாந்திக்கூத் தாடத் தகும்."

என்பதனால் ஒருவகைச் சாந்திக் கூத்தும் உண்டென்ப. விநோதக் கூத்தாவது கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னரும் முதலாகவுடையோர் பகை வென்றிருந்த விடத்தில் விநோதங் காணுங் கூத்தாம். அது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற் பாவை என்ப. குரவையென்பது காமமும் வென்றி யும் பொருளாகக் குரவைச்செய்யுள் பாட்டாக எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கை பிணைந்து ஆடுவது. கலிநடமென்பது கழாய்க்கூத்து

(கம்பங் கூத்து). குடக் கூத்தென்பது திருமாலாடிய கூத்து. இது இக்காலத்தில் தலைமீது குடமடுக்கிவைத்துக் கரகமாடுவதென்னுங் கிராமியவழக்கு. கரணமாவது படிந்த ஆடல் (குக்குடாசனமாயும் படுத்தும் ஆடுவது). நோக்கு என்பது பாரம், நுண்மை, மாயம் முதலாயினவற்றை யுடையது (கண்கட்டு வித்தை போன்றது). தோற்பாவை யென்பது தோலால் அல்லது நொய்மையான மரத்தால் பாவைசெய்து ஆட்டுவது ; பாவைக் கூத்தென்பதுமது. இவற்றுடன் நகைத்திறச் சுவையாகிய வசைக்கூத்து அல்லது விதூடகக் கூத்துஞ் சேர்த்து ஏழெனவுங் கூறுவர். இவ்வெழுவகைக் கூத்தும் இழிஞர் ஆடலாமென்ப. பின்னும் வென்றிக் கூத்து, விநோதக் கூத்து, வசைக்கூத்து என மூவகைப்படுத்தியுங் கூறுவர். வென்றிக்கூத்து மாற்றான் ஒழுக்கத்தையும் மன்னன் உயர்ச்சியினையுங் கூறுவதாம். விநோதக் கூத்து மேற்கூறிய இலக்கணத்தது. வசைக்கூத்துப் பலவகை உருவங்களையும் பழித்துக் காட்டவல்லவன் ஆடுதலாம். துணங்கைக் கூத்து "முடக்கிய இருகை பழுப்புடை ஒன்றித் - துடக்கிய நடையது துணங்கை யாகும்"-இதனைச் சிங்கியெனவுங் கூறுவர். இங்கு கூறிய கூத்து விகற்பங்களையெல்லாம் கூர்ந்து கவனிப்பின் இக்காலத்திலுள்ள பலவகைக் கூத்து, டிருமா, சதிர், நாட்டுக்கூத்து, சிங்கள நாட்டுக் கூத்து, சுவாமி வீதிவரும்போது ஆடுங் கூத்து முதலியவற்றுள் அடங்குவதைக் காணலாம்.

இனி, இந்நூலாசிரியர் கூடியவரை பிறமொழி கலவாச் செந்தமிழ் மொழியாற் செழுஞ்சுவை சொட்டும்

உரைநடையையே கையாண்டு செல்லுந்திறன் பாராட்டுந்தகைமைத்து. காட்சித்துறையில் உயிரிளங்குமரன் கூறும் விருத்தம் (பக்கம்: 13) "திருவளர் தாமரை" யென்னுந் திருக்கோவைச் செய்யுளை யொற்றிநின்று நயம் பயக்கின்றது. நீலகண்ட மன்னன் சிவகாமித் தாயை நோக்கிக் கூறும் பகுதி (பக். 19) "தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" என்னுந் திருவாசகம், திருச்சாழல் கூ-ம் செய்யுளை நினைப்பூட்டுகின்றது. தமிழ்நடையும் மிக வனப்புவாய்ந்து மிளிர்கின்றது. நீலகண்டவரசன் உயிரிளங்குமரனை யழைத்து வரும்படி சிவகாமித்தாயாருக்குக் கட்டளையிட்டபகுதி (பக். 20) "மாயையின் வயிற்றுண் மன்னிவருஞ் செயன்" என்னுஞ் சிவஞானசித்திச் செய்யுளைக் கற்றுக்கொள்வதற்கு ஓர் ஆசான்போல விளங்குகின்றது. அவ்விடத்தில் கூறப்பட்டிருக்குங் கலிவெண்பா (பக். 20) உயிர்களின் அநாதிநிலையை மிகத்தெளிவாக விளக்கிச் செல்கின்றது. சிவகாமித்தாயார் மைந்தனை யணைத்துக் கொண்டு சொல்லும் பகுதி (பக். 23) அறிவுசான்ற அழகுடையது. அசுத்த மாயையாகிய காட்டையும் அதில் வாழும் பிராணிகளையும் வருணித்திருப்பது (பக். 23) இயற்கை அநுபவங்களை நினைவுறுத்துகின்றது. உயிரிளங்குமரன் தந்தைபணிகொண்டு வேட்டஞ் செல்காலைக் கூறிய கட்டளைக் கலித்துறையும் விருத்தமும் (பக். 25) திருக்கோவையார் 12 ஞ் செய்யுளையும் காசிகாண்டச் செய்யுளொன்றையும் நினைவூட்டி ஆர்வமுறச் செய்கின்றன. இருண்மலவேந்தன் முத்னமந்

திரியை நோக்கித் திறைகொணர்ந்தோரைக் கூறுகவென மந்திரி கூற்றில் வைத்து

" வஞ்சக ராசையர் மோகர்கு ரோதனர் வாதினர் சூதினரே
எஞ்சலில் கோபரு லோபர்பொ றாமைய ரிச்சையர் கொச்சையரே
குண்டர் செருக்க வருக்கர் பெருக்கமில் கோளகர் கீழ்கரே
வண்ட ரிரண்டகர் மிண்டகர் தண்டர் மயக்கர் கயக்கர்களே."

என்னும் உயிர் வர்க்கத்துள்ள கீழ்களை அடைமொழி யின்றி இடத்துக்கேற்ப வமைத்துப் பாடிய சந்த விருத்தச் செய்யுள் (பக். 27) வில்லிபுத்தூராழ்வார் வாக்குப்போல் சுவைகொடுக்கின்றது. நீலகண்டவரசனது ஆணையையும் அருளையும் கெடுக்கும்படி ஏவிய வீரர்கள் புகுந்து செய்யுமிடங்களை உண்மையாகவே குறிப்பிட்ட பகுதியை (பக். 29) எவரும் மெச்சாதிரார். அதில் இக்காலத்து வழிதப்பிவாழும் வர்த்தமானங்களை நன்றா யறியலாம். இன்னும் "இன்னதன்மைத்தென ஒருவரா னுங் கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும்" என் ஐந்தாவது குறளின் விசேடத்தில் பரிமேலழகர் கூறிய இருளுக்குக் "கல்லார் மனமு மிலங்கையிலே கடு கணுவைக் குகையிருளும்" என எடுத்துக்கூறிய செய் யுள் (பக். 35) கற்றோர்க் கிதயம் களிப்பூட்டும். உயிரிளங் குமரனும் தோழன் அறிவனும் வேட்டஞ்சென்று மத்திய புவனக்காட்டில் தோழன் கூறும் வருணனைகள் (பக். 38) சுவையுடையன. இறைவன் ஆணை கடந்து தீவினைசெய் வோர் அடையுந் தண்டனைகளை எடுத்துக்கூறுஞ் செய்யுள் (பக். 42) மாணவர்க்கு நன்னெறிகாட்டும் இன்னுயிர்த் துணையாகும். பட்டுச் சீலைவகைகளைக் கூறுஞ் செய்யு ளானது;

" பாடகங்கோ சிகமாத்தம் றுண்டுகில்சுண் ணம்வடகம்
பஞ்சி ரட்டுத்
தேடகங்கள் தேவாங்கு பரியட்டக் காசிலஞ்சி
திருக்கு பங்கம்
தோடகஞ்சேர் பீதகம்பச் சிலைகவற்று மடியினொடு
தூரி யஞ்சே
ரேடகம்வண் ணடைதேவ கிரியினுடன் பொன்னெழுத்தா
மியலு மின்னும்

சில்லிகைவே தங்கமொடு நூல்யாப்புக் காத்தூலந்
திருவெண் பொத்தி
சொல்லியதத் தியம்புங்கர்க் காழகங்குச் சரிதாய
துணிசெம் பொத்தி
புல்லியநற் பணிப்பொத்தி யிலைமுப்பா ஞடைவகை
புரையில் சீர்த்தி
நல்லியல்சேர் சிலப்பதிகா ரத்தில்வரு நாமமின்றோள்
நவிலப் போமோ !"

எனப் "பழமைப்பனுவல் ஐம்பது" என்னும் நூலி லுள்ள செய்யுள்களை நினைவூட்டிக் களிப்படையச் செய் கின்றது. உயிரிளங்குமரன் சிற்றின்பவல்லியுடன் கூடி மணிமண்டபத்திற்குச் செல்லும்போது காணப்படும் விருத்தமாகிய (பக். 52)

" தலைப்பட்டு நண்ப ரோடு தனிவனம் புகுந்தே யாடிக்
கலைப்பட்ட மான்பின் னோடிக் காதலன் றன்னை நீங்கி
நிலைப்பட்ட மாயை வல்லி நிலைகண்டு நினைவு சோர்ந்து
வலைப்பட்டான் குமரன் முந்நாள் வல்வினை வலியதந்தோ."

என்னும் 'வலியழிவுரைத்தல்' என்னுந் துறைச் செய் யுள் " தலைப்படு சால்பினுக்குந் தளரேன்" என்னுந்

திருக்கோவைச் செய்யுளை நினைவூட்டுகின்றது. இருண்மல வேந்தன் தூதுவராகிய அறவன், மறவன் இருவரும் உரையாடுங்கால், அறவன் கூறும் மருதத்திணை குறிஞ்சித்திணைகளின் உரிப்பொருள் கருப்பொருள் அமைந்த செய்யுள் (பக். 54) சங்ககாலத்துச் செய்யுள் போன்றுளதாவதோடு, இலங்கையிலுள்ள வன்னி நாட்டு மருதநிலங்கள் குறிஞ்சிநிலங்களாய் மாறிக்கிடக்கும் பண்டைய வளனையும் நினைவூட்டி 1915-ம் ஆண்டு நிகழ்ந்த ஜேர்மனியப் பெரும்போரால் ஏற்பட்ட அரிசிப் பஞ்சத்தால் இலங்கை மக்களடைந்த இன்னலேயும், பின்னுமவ்வாறு நிகழாது நெல்வளனைக் கொடுக்குங் கழனிகளை ஆக்குதலேயும் வலியுறுத்தும் கற்பனையாக அமைந்துளது வியக்கற்பாலதாம். இருண்மலவேந்தன் உயிரிளங்குமரனை அடைக்கச்செய்யும் காயாபுரியென்னும் சிறைச்சாலையை வருணிக்குஞ் செய்யுள் (பக். 61) "தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு" என்னுங் கந்தரலங்காரச் செய்யுளை உன்னுமாறுந்தும் நன்னயம் அமைந்துளது.

"அன்றே விரிந்தசெந் தாமரை போலும் அணிமுகமுங்
குன்றே விரிந்த மணித்திர டோளுங் குளிர்விழியும்
நன்றே விரிந்த நகையு முடையும் நடையுமெலாம்
என்றே யினியடி யேன்கண்டு கொள்வ திளங்கொடியே"

என்னும் பேரின்பவல்லி கூறுங் கட்டளைக் கலித்துறையும் (பக். 66) சுப்பிரமணியமுனிவர் தமது அற்புதச் செயல்களைக் கூறும் சிலேடைப்பொருள் கொண்டதான

"அன்றொரு சட்டியி லலைவாய்க்கொக் கவித்துட்கொள்ள
அடிவயிற்றிற் குத்திமிகு சத்திகாத் தெடுத்தே
ஒன்றுதலை வலிகண்டேன் மற்றதனை யுடனே
ஒருகோழி மயிலாக வருமாறச் செய்தேன்
என்றுமொரு புல்லதனைப் புலியாகச் செய்வேன்
எழில்நாக மாதங்க மென்னவியை விப்பேன்
இன்றுமெழு கடலையள்ளிக் குடங்கையினிற் றருவேன்
இரும்பினையுங் கரும்பொன்று வியைவிப்பேன் யானே"

என்னும் விருத்தப்பாவும் (பக். 84) இவரது கவி வன்மையைக் காட்டும் கட்டளையெனலாம். நீலகண்ட மன்னனிடம் சிவகாமித்தாயார்சென்று உயிரிளங்குமரனுக்காகப் பரிந்து கூறுவதாகிய

"மாயப் புலிக ளுறைகின்ற வனத்திற் போன தன்மகனை
நேயத் தோடும் நினைந்துகண்ட கனவா லுள்ள நிறைதளம்பித்
தூயகணவற் கெடுத்துரைத்து மகனை மீட்கும் தொழில்புரிந்தாள்
தாயிற் சிறந்த வன்புடையார் வேறு முண்டோ தரணியிலே"

என்னுமிச் செய்யுள் (பக்: 78) பட்டினத் தடிகள் கூறிய "மாயநட்போரையும்" என்னும் திருவாக்கையும் "உரை தரு மிப்பசுவர்க்கம்" என்னுஞ் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தையும் நினைவுறுத்திச், சகலருக்கு இருவினை யொப்பும் மலபரிபாகமும் வந்தவிடத்து 'மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நான்குவித சத்தினிபாதமும் நிகழும். அப்பொழுது முதல்வன் சகலவர்க்கத்துள் ஒருவரை ஆதாரமாகக் கொண்டுநின்று உண்மை ஞானத்தை உணர்த்துவன் என்பதைப் போதிக்கின்றது.

முதல்வன் குருவடிவாய்த் தோன்றிப் பக்குவான்மாக்களுக்குத் தீக்கையினால் அத்துவசுத்தி செய்து மல

மகற்றி ஞானம் வருவித்துத் திருவடியடைவிக்கும் முறை
மை கூறுமிடத்தில் சுப்பிரமணியர் கூற்றில் வைத்து,

“வெள்ளியங் கிரியின்மேய வேந்தர்கள் வேந்தனை
ஒள்ளிய நீலகண்டன் ஒருதிரு மகனீயன்றே
கள்ளர்கள் வேட்டைபோன காட்டிடை வஞ்சஞ்செய்ய
மெள்ளநீ சிறையிலங்கு விடப்பட்டாய் மறந்திட்டாயே”

எனக்கூறிய செய்யுள் (பக். 88) சிவஞானசித்தியாரில்,

“மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானாக்கிப் பேணு மாபோற்
றுன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பான்”

என வருந் திருவிருத்தத்தை விளக்கிவைக்கு மாசான் போன்றுளது. உயிரிளங்குமரன் தன்னிலையினை யுணர்ந்து அநித்தியமாகிய பந்த பாசங்களை வெறுத்து,

“இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தைதந்த
வருளானை”

என்னுந் தேவாரத்திருவாக்குக் கியையக் கூறிப் புலப்படும் பகுதியாகிய 89-ம் பக்க உரைநடை

"முருந்திளங் கையார் பார முலைமுகந் தழுவிச் செவ்வாய்
விருந்தமிர் தெனவ ருந்தி வெறியாட்டுக் காளாய் நாளு
மிருந்தலோ காய தப்பே ரினத்தனு யிருந்த வேழை
பொருந்தவுங் கதிமே லுண்டோ பூரணா னந்த வாழ்வே"

என்னுந் தாயுமானவர் திருவாக்கை விளக்கி வைக்கும் பான்மையதாய்த் திகழ்கின்றது.

நான்காம் அங்கம் முதற்களத்தில் உயிரிளங்குமரன் காயாபுரிக் கோட்டை யிழிவை விளக்கிக் கூறும் "பீளையும் நீரும்" எனத் தொடங்கும் ஆசிரியப்பா (பக். 91) பட்டினத்தடிகள் அருளிச்செய்த கோயிற்றிரு வகவலில் வரும் "பீளையும் நீரும் புறப்படு மொரு பொறி" என்னுமடிகளைப் படியெடுத்துக்காட்டி யறி வுறுத்திச் செல்கின்றது. உயிரிளங்குமரன் குருவை நினைந்து பாடும் வெண் செந்துறைகள் (பக். 93)

"மின்னனைய பொய்யுடலை நிலையென்று மையிலகு
விழிகொண்டு மையல் பூட்டு
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேல்வீடு சொர்க்க மென்றும்"

எனத் தாயுமானவர் கூறிய குருவணக்கச் செய்யுளை உன்னும்படி செய்து மகிழ்விக்கின்றது. சிற்றின்பவல்லி (அழுது கொண்டு) கூறுங் கட்டளைக்கலித்துறை (பக். 94)

"காகத் திருக்கண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா
மேகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையிற்
றேகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே"

யென்னும் திருக்கோவைச் செய்யுளை யுன்னிச் சுவைக்கு மாறு தூண்டும் அருந்துணையாகமிளிர்கின்றது. சிற்றின்ப வல்லியின் புலம்பல் (பக். 98) இராமாயணத்தில் சூர்ப் பநகை புலம்பலை யடியொற்றிக் கம்பர் வாக்கெனச் சீரடி பற்றிச் சிறந்து விளங்குகின்றது. உயிரிளங்குமரன் மண், பொன், பெண்ணென்ற மூவாசைகளில் பின்னை தொன்றின் பீடழி பண்பை "இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்ப தை யொட்டிச் சங்கச் சான்றோர் நூற்கருவூலத்தில் அரிய சொன்மணிகளை ஆய்ந்தெடுத்து முழுமணிக்கோ வைசெய்து விழுமிய நடையிலமைத்த நிலமண்டல ஆசிரியப்பா (பக். 99) படிக்கப்படிக்க வினிக்கின்றது. நான் காம் அங்கம் முதலாங் களத்தி னீற்றிலிருக்கும் விருத்தச் செய்யுள் (பக். 101) சிலேடையான கருத்துடன் இடத் துக்கேற்ப வமைத்திருக்கும் நுண்மதி சாலவும் போற் றற்குரியது. அவ்விருத்தத்தில் 'அல்வழி' 'வேற்றுமை' யென இரண்டு சந்தி யிலக்கணச்சொற்கள் வீந்திருக்கின் றன. அவற்றில் அல்வழி பதினான்கு வகைத்து, ஐந்து தொகைநிலையும் ஒன்பது தொகாநிலையுமாம். வேற்றுமை ஆறுவகைத்து. மெய், வாய், கண், மூக்கு, செவி யென் னும் ஐம்பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினானும் ஓடுவிழுந்து சீப்பாயு மொன்பது வாய்ப் புண்ணுக் கேற்ற நுகர்ச்சிகளை அவாவுவதில் அலைப்புண்ணும் வழியில் நிறுத்தி மாசுறுத்தி என்பதனால் பதினான்கும், காமக், குரோத, லோப, மோக, மத, மாற்சரியம் என் னும் அறுவகைக் குணங்களால் பெருந்துறைக் குருந்த

மேவிய பெருமான் கூறிய "பளிங்குபோன்றதுன் றன்மை" என்னும் பண்புகெட்டு வேறுபாடடைந்த தால் ஆறும் எனப் பொருள்தந்து நிற்றற் கியைவது போல் அமைந்துளது. இனி அல்வழி—நல்வழியல்லாத வழியென்றும், வேற்றுமை—பெயர்ப்பொருளை வேறு படுத்துவதுபோல் உயிரை அதன்தன்மை யறியாதபடி வேறுபடுத்தி யென்றும் அமையும். உயிரிளங்குமரன் உற்ற துணைவனாகிய அறிவனை நினைந்து பாடும் நேரிசை யாசிரியப்பாவில் (பக். 104) நண்பனுக்கெடுத்துக்காட்டிய பண்புவமைகள் யாவும் மிக நயம்பயந்து அறிஞரை மகிழ்வடையச்செய்யுந் தகையவாய் விளங்குகின்றது. இன்னும் நான்காம் அங்கம் இரண்டாங் களத்தில்

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெஞ்ஞா னந்தான்
ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்க ளெல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞான மென்பர்"

எனச் சிவஞானசித்தியார் கூறும் மெஞ்ஞானத்தியல்பு விளக்கி, வினாவிடையாகச் செல்லும் உரைநடை (பக். 106 - 108) யின் மாட்சி தமிழார்வமுடையார் படித்தின்புறற்குரியது. அதில் அறிவன் இரண்டாவ தாகக் கூறும் விடை (பக். 108) ஆறுதாரங்களைக் கடந்து துவாதசாந்தப் பெருவெளியை யடைந்தருண்

மயமாகும் யோகமார்க்கம். தேகத்திலுள்ள குண்டலி சக்தியானது பிரமநாடியிலோடிக் கபாலத்திற் செல்லும். பிரமநாடிக்குச் சுழுமுனை யென்றொரு பெயருண்டு. இது முதுகு மூளையாரம்பத்திலுள்ள மூளையாகும். நாலுருண்டைபோல் இது ஆக்கப்பட்டிருக்கும். புகையந்திரங்களை முகந்திருப்புங் கருவி (Twin-table) போல் இது தேக ஆட்சிச் சக்தியைத் திருப்புந்தொழில் பூண்டது. அதன்வழியே குண்டலிசக்தியைக் கபாலத்திற் செலுத்திக் கபாலத்தி னடிவாரத்தினின்று பன்னிரண்டு விரற்கடை செல்லுமாயின் சித்த தரிசனசித்தி இரேசகத்தால் எளிதிற் கிடைக்கும். இதுவே நூலிற் கூறிய பெருவெளியும் கைலாயமுமாகும்.

"நியமலக்ஷணமு மியமலக்ஷணமு மாசநாதிவித பேதமும்
நெடிதுணர்ந்திதய பத்மபீடமிசை நின்றிலங்குமஜ பாநலத்
தியலறிந்தவளர் மூலகுண்டலியை யினிதிறைஞ்சியவளருளினால்
எல்லையற்றுவளர் சோதிமூலவனலெங்கள் மோனமனுமுறையிலே
வயமிருந்துவரு மமிர்தமண்டல மதிக்குளேமதியை வைத்துநான்
வாய்மடுத்தமுத வாரியைப்பருகி மன்னுமாரமிர்த வடிவமாய்ச்
செயமிருந்துவரு சித்தயோகநிலை பெற்றுஞானநெறி யடைவனோ
தெரிவதற்கரிய பிரமமேயமல சிற்சுகோதய விலாசமே"

எனத் தாயுமான சுவாமிகள் இதுபோற் றமது நூலிற் பலவிடத்தும் திருவாய்மலர்ந்தருளியிருக்கும் பாடல்களை வாசித்துணரச் சுவைகொடுத்து நிற்கின்றது. உயிரிளங் குமரன் பேரின்பவல்லியை நினைந் துருகும் அடிகளும் அறிவனுகிய நண்பனை விளித்து மாலைக்காலத்தை வரு

ணிக்கும் அடிகளும் (பக். 109) சிலப்பதிகாரத்தில் முறையே மனையறம்படுத்தகாதை "மாசறுபொன்னே—தாழிருங் கூந்தற்றையால்'' என்னும் அடிகளையும் கானல் வரிப்பாட்டையும் படியெடுத்து விளக்கி மகிழ்விக்கின்றன. அதன்பின்வரும் சந்திரோபாலம்பனம் (பக். 110) பாரத ராமாயண நைடத காவியங்களில் வருமித்துறைக் கவிகளை நினைவுறுத்தி யழகுசெய்கின்றது. எல்லியை நோக்கி எல்லைப் பழிக்கும், அதாவது, "பொழுதுகண்டிரங்கல்'' என்னுந் துறையைக்கூறும் வெண்பாச் செய்யுள் (பக். 111)

"ஆழிவா யச்சத்த மடங்காதோ யான்வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஊழி
திரண்டதோ கங்குல் தினகரனுந் தேரும்
உருண்டதோ பாதாளத் துள்''

என்னும் முன்னோர் செய்யுளாகக் காணப்படுகின்றது. படினும் அவ்விடத்துக்கு மிகவும் பொருத்தமாக வமைத்துச் சென்ற சாதுரியம் மெச்சக் கூடியதே.

ஐந்தாம் அங்கம் முதலாங்களத்தில் உயிரிளங்குமரன் இருண்மல வேந்தனுக உருவகஞ் செய்யப்பட்ட பாசபந்தங்களை அதம்பண்ணி மலபரிபாகமடைந்து சத்திநிபாதந் தலைக்கூடிய நிலை (பக். 112)

"மேற்கொண்ட வாயுவுங் கீழ்ப்பட மூலத்து வெந்தழலைச்
சூற்கொண்ட மேக மெனவூமை நின்று சொரிவதைபெண்
ணூற்கண்ட தன்று மெளனேப தேசி யளிக்கையினிப்
பாற்கண்டு கொண்டனன் மேலே யமிர்தம் பருகுவனே''

என்னும் தாயுமானவர் வாக்கைத் தெளிவுபட இனிது விளக்கிச் செல்கின்றது. பரிபக்குவமடைந்த முத்தான்மாக்களுக்கு இறைவன் விரைந்து குருவடிவில் ஆட்கொள்வன் என்னுந் தத்துவத்தைச் சுப்பிரமணியர் பேரின்பவல்லிக்கும் உயிரிளங்குமரனுக்கும் திருமண முடித்துவைக்கும் பகுதி (பக். 114) வெளிப்படுத்துகின்றது. "வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும்" என்றபடி சைவராகிய நம்மவரும் பிறமதத்தர்களும் சாதிக்குஞ் சாதனைகள் யாவும் தமதுறைப்பின்வண்ணஞ் சித்த விருத்தி விளக்க, அவ்விருத்தி உண்மை நாட்டத்தை வளர்க்க, அந்நாட்டம் இடைவிடா தியங்கி வரவே, சற்குரு வாய்ப்பதற்கே யுற்றவாமெனவும், அத்தகைச் சற்குருதான் இறைவன் நம்மனோர்க்கு வார்த்தைசொலும் வாயிலாமெனவும், அவ்வாயிலானன்றிப் பிறிதேவ் வாயிலானும் மெஞ்ஞானங்கூடல் முடியாதென்பதும் தெளியக்காட்டியபடியாம். இதனையே சிவஞான சித்தியார்

"பரப்பிரம மிவனென்றும் பரசிவன்றா னென்றும்
பரஞான மிவனென்றும் பராபரன்றா னென்றும்
அரன்றருஞ்சீர் நிலையெல்லா மிவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே யவனின்றா னாயே
இரங்கிவா ரணமாமை மீனண்டஞ் சினையை
இயல்பினொடு பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்தவைதா மாக்குவது போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே"

எனக் கூறி முடித்திருக்கின்றது.

நாதப் பறையன் டணாநிகழ்ச்சியை அறிவிக்கும் பகுதியாகிய சந்தப்பாக்கள் (பக். 114—115) சுத்த மாயையின் தோற்றத்தை விளக்கி யழகுசெய்கின்றன. பதியினுடைய சத்தியாற் குடிலையாகிய சுத்த மாயையிலே சர்வான்மாக்களுக்கும் அறிவை யெழுப்புவித்து நிற்கின்ற ஞானமாகிய நாததத்துவந் தோன்றும்; நாதத்திலே சர்வான்மாக்களுக்குமுண்டாகிய தொழிலை யெழுப்புவித்து நிற்கின்ற விந்துதத்துவந் தோன்றும்; விந்துவிலே நாதவிந்துக்க ளிரண்டுங்கூடின அவசரமாகிய சாதாக்கியதத்துவம் தோன்றும்; சாதாக்கியத்திலே கிரியையேறி ஞானங்குறைந்துநின்ற அவசரமாகிய ஈசுர தத்துவம் தோன்றும்; ஈசுர தத்துவத்திலே ஞானமேறிக் கிரியை குறைந்துநின்ற அவசரமாகிய சுத்த வித்தை தோன்றும்; இவ்வைந்து தத்துவங்களுந் தோன்றினவொழுங்கிலே அவ்வவற்றின் கர்த்தாக்களாகச் சிவஞ், சத்தி, சதாசிவம், மகேச்சுரன், உருத்திரன் ஆகிய ஐவருந்தோன்றி அவற்றோடு பொருந்திநிற்பர். இக்கிரமத்தை விளக்க வந்ததே நாதப் பறையன் கூறுவன. "பிள்ளையார்சுழி எங்கள் கையிலே" என்ற நான்கடியும் (பக்: 116) விந்துநாதத்துடன் சம்பந்தமாகி அரிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்ற நுட்பம் கூர்ந்து நோக்கத்தக்கது. பறையன் செசவு தொழிலைப்பற்றிக் கூறியிருக்கும் நேரிசையாசிரியப்பாவைத் (பக். 116-117) தமிழ் மக்கள் யாவரும் மனனம்பண்ணிக் கூறியபடி செய்ய முயற்சிப்பதோடு அதனைப் பெரிய எழுத்தில் எழுதிச் சட்டங் கண்ணாடியிட்டு வீட்டில்வைக்கும் வேறுபடங்க

ளுக்கு முன்னணியில் வைத்துப் படஞ்செய்யும் ஞாபக சின்னமாகப் பூசிக்கத்தக்க தென்னுமிதனுனே அதனைப் படிப்போர் அதன் சொற்சுவை பொருட்சுவையறிவர். வள்ளுவருங் காந்தியடிகளும் இம்மை மறுமையிரண்டி னும் உத்தமவாழ்க்கையை நடத்தி உலகினர்க்கு நீதி யும் அருளும் வழங்கியோர். அன்னவர்கள் கைக் கொண்ட தொழிலை யாவருங் கைக்கொண்டு செய்து வருதல் அத்தியாவசியகம். அன்றியும் ஒருதேசம் சுதந் திரவாழ்வில் மகிழ்ச்சி பெறவேண்டுமாளுல் இரவற்றுணி யேற்றணிந்தோ மகிழலாம்? இந்த இரகசியம் ஐரோப் பியருக்கும் காந்தியடிகளுக்குந் தெரியும். "பெண்கள் தந்தொழில்விட்டுக் கெட்டனர்" என ஆசிரியர் எடுத் தாண்டபகுதி ஆணித்தரமானது. புறநானூறு 125-ம் பாட்டிலும், நன்னூல் 23-ஞ் சூத்திரத்திலுங் காட்டிய படி தென்னுடு வடநாடு உட்படவுள்ள பெண்கள் யாவ ரும் நூல்நூற்றனரென்றும், அவ்வாறே இலங்கையி லும் நடந்து வந்ததென்றும், அதனுல் நெசவுவேலை உழவுபோல் பொதுவேலையாக நடந்து வந்ததென்றும் சுருதி அநுமானம் என்னும் இரண்டினுலும் அறியக் கிடக்கின்றது. பறையன் தன்னைப்பற்றிக் கூறியிருக் கும் ஒவ்வொருபொருளும் நிகழ்காலத் தெழுச்சிக்கேற்ற நீதியையும் பழமையையும் போதிக்கின்றது. பறை யன் பறையடித்துச்சொல்லும் விளம்பரம் (பக். 119-120) மணிமேகலை விழாவறை காதைப்பார்த்தியில் முளைத்த பசுங் கதிர்போலச் சுவைசொட்டி மலரு கின்றது.

இந்நூல் சமயநூல்களை ஆதாரமாகக் கொண்டெழுதப்பட்டபடியால், அங்கம், களம், இடம் ஒவ்வொன்றிற்கும் சமயநூற் பிரமாணங் காட்டுதலரிது. ஆயினும் மாணவர்பொருட்டே இங்கு சிற்சில இடங்கள் ஒப்புநோக்கி யெடுத்துக் காட்டப்பட்டன. இவ்வாறு இந் நூலகத்துப் பண்டைச் சான்றோர் வாக்கினையும், போக்கினையும், நோக்கினையும் பின்பற்றியும், ஒற்றியும் பலப்பல நயங்கள் சுவைப்பட மிகுந்து களிப்பெய்துவிக்கும் மாட்சியைக் கற்போர் ஆங்காங்கு கண்டு மகிழ்வாராக.

இன்னும் இந்நூல் உரைநடைத்திறனிலும், கற்பனையிலும், பாச்சுவையிலும், கதைசெல்லும் முறையிலும் படிப்போரை அயரா தீர்த்துச்செல்லும் தன்மைவாய்ந்திருப்பது இதற்கோ ரழகாகும். உலக நீதிகளையும், நன்னெறியையும், பக்தியையும், சமயவறிவையும் தர வல்லதாயிருப்பதால் இதனைக் கலாசாலைகளில் சைவ மாணவர் பாடமாக வைத்துக் கற்பிப்பது மாணவர்க்கு மிக நன்மை பயக்குமென விழைகின்றோம்.

முதலியார், சே. இராசநாயகம்,

கொழும்பு

1935-ம் ௵ டிசெம்பர் ௴ 18 உ.

# சிறப்புப்பாயிரம்

## 1

[வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்.]

1. தென்வரை முனிவரன் றேர்ந்த முத்தமி
ழின்வரு நாடகம் யார்க்கு மின்பமே
மன்வர வளித்திடும் வாய்மை யாலதை
நன்வர வுலகுக்கு நல்க வுன்னியே

2. கபிலையி லுறைதருங் காள கண்டற்கு
மயில்விழி யுமைக்குமோ ரன்பு சார்மகன்
உயிரிளங் குமரனென் றோது வோன்மல
மயறரு வேந்தன்றன் மகளை வேட்டரோ

3. இன்பமுற் றேதுய ரிஃதென் றுன்னுநாள்
மன்பெருஞ் சுப்பிர மணிய னுங்குரு
அன்பொடுந் தோன்றியே யருளும் வாக்கினாற்
றன்பழ நிலைமையைத் தானுந் தேறியே

4. அன்னவ டணைவிடுத் தரன்ற னோடுமை
மன்னுற வளர்த்திடும் மடிவி லின்பமே
தன்னொரு வடிவெனச் சாரும் வல்லியின்
நன்னலம் பெறுங்கதை நயப்பின் மேவவே

5. உயிரிளங் குமரனென் றோதிடப் பெய
ரியலுமோர் நாடக மிருந்த மிழ்க்கடல்

வியல்செய் நுண் மதியெனும் வெற்பினாற் கடைஇ
அயில்வுறத் தமிழகத் தளித்திட் டானரோ

வேறு

6. நற்ற வந்தர் நணுகு நவாலியூர்
பெற்ற தோர்பெரும் பேறெனத் தோற்றினான்
செற்ற மாதி செகுத்த மனத்தினான்
கற்று வல்லர் களிக்குந் தகைமையான்

7. ஓசை யுஞ்சுவை யும்பெறச் செய்யுள்கள்
ஏசின் ருக்கு மியற்கை படைத்துளான்
மாசில் கந்தவ னத்துச்செவ் வேட்கொரு
தேசு றும்மணி மாலையுஞ் சேர்த்தினான்

8. சைவ மோங்குறச் சற்பிர சங்கங்கள்
செய்வ ரத்தன் சிவன்பதத் தென்றுமே
தைவிரச் சிந்தை தான்வைத் துவப்பவன்
மெய்வ ருந்தமிழ் விற்பனச் செல்வனே

9. ஏம மாகு மிவற்பெற்ற தாலெனப்
பூமி யும்மகிழ் பூத்திடு மாமகன்
சோம சுந்தரத் தூய்ய புலவனை
நாம மெங்கணு நாட்டுந் தவத்தனே.

## 2

### [பாலைபாடிய மாவைக்கவுணியன் வெண்ணெய்க்கண்ணனார்.]

தெள்ளிய ஞானந் தெளிந்ததீஞ் சுனையும்
உள்ளிய திருவரு ளூற்றெடுத் தெழீஇய
வெள்ளம் பாயும் வியன்சா லருவியும்
புள்ளிப் பொலன்வரை போந்தமட மயிலும்
கள்ளவிழ் கொன்றைச் சடைமதிக் காடும்
வள்ளிக் கொடிபடர் வடிவேற் கடம்பும்
கொள்ளிய வெள்ளியங் குவட்டி னொருபால்
ஆய மகளி ரனைவரும் வேற்றிடை
மேய போழ்தத் தாங்குத்தனி மேவிய
பேரின்ப வல்லியை நாரொன்றிக் கண்ட
காதல் கனற்றவும் கடுந்தாம் தீர்க்குமோர்
எதியா தென்னு ணியல்பில னாகிய
ஆல முண்டரு ணீல கண்டனார்க்
குரிமை மகனா முயிரிளங் குமரன்
அரியதன் காதலை ஆற்றா னாகி
வெள்ளியஞ் சிலம்பின் வேந்தனாந் தனாது
வள்ளற் றந்தையின் வாய்மொழி பிழையான்
பூரு வென்ன வேட்டம் புக்குழி
இருண்மல வேந்தற் கொருபெரு மருகி
மருண்மக ளெவரையு மயக்குவலைக் கண்ணி
சிற்றின்ப வல்லியாம் சிறப்பொன் றிலாளை
மற்றின்ப வல்லியென மருண்டுசிக் குண்டு

௩௬

மாயா புரியமர் காயா புரியாங்
கோட்டைச் சிறையிடைப் பூட்டப் பட்டுப்
புலைத்தொழி லெல்லாம் தலைத்தொழி லென்னப்
பொல்லா வைவரோடு போந்தவர் புகன்ற
சொல்லான் மயக்கித் துன்பமே யின்பென
வாழ்வெலா மொரீஇ மாழ்குறு போழ்தத்து
ஆயவ னன்னையா கருட்சிவ காமித்
தாயார் தூண்டத் தந்தைசாற் றேவல்
வழிவரு சுப்பிர மணிய முனிவரன்
பித்தன் போன்று பிதற்றிப் பேசி
அகச்சுவைக் காளா நகைச்சுவை நவின்று
சிறைகாப் பாளர் நிறைகாப் பூடே
செயிரொன் றில்லா வுயிரிளங் குமரனை
மயர்வலை யறுத்து மாயஞ் சான்ற
வெற்றின்ப வல்லியாம் சிற்றின்ப வல்லியின்
பாசத் தளையெலாம் பாறிச் சிறைத்தாள்
வீசற் காகும் வீறுசான் மந்திரம்
பயிற்றிப் பெற்றோர் பார்த்துள மகிழப்
பேரின்ப வல்லியை நேரொன் றிமணந்த
வரலா றெல்லா மரீஇய நாடகம்
ஒன்றுபுனைந் துயிர்கொடுத்து நன்றே யுதவினன்
ஏழிசைச் சூழலுள் யாழிசை யீட்டும்
புகழ்சால் காமம் முறைசால் கோணமும்
பங்கயப் பொருப்பும் கங்கைபா யதிர்ப்பும்
துதிக்கைப் பள்ளும் உதித்துயர் ஞானமும்
பாட்டு முறையும் பாணியும் சால்வுற்று
ஆழி சூழிய வீழுமா நாட்டின்

யாணர் சேரியாழ்ப் பாணப் பகுதியுள்
தவாஅ விழுப்புகழ் நவாலி யூரன்
முருகொடு விராய முத்தமிழ் விரகன்
அரசார் பாவலன் உரைசால் நாவலன்
தொல்லற மரீஇய இல்லற முனிவரன்
பிறைசே ரழகன முறைசேர் பெயரினன்
அகத்திணை யிலக்கணம் அமைய விடையிடைப்
புறத்திணை யிலக்கணம் பொருந்திப் பொற்புற
நாட்டுச் சீரும் நாட்டுமொழிச் சீரும்
நாட்டுண் மேய நற்பொருட் சீரும்
வீட்டுச் சீருள் விரவுற விமையச்
சிமயத் திருந்து தேமெலாந் திருவுற்று
அகமும் புறமு மணிவளன் புரிபு
மங்கலக் கங்கை மால்யாறு
இங்குமொன் றுண்டென வியம்புதற் கொத்தே.

## 3

[பண்டிதர் வே. மகாலிங்கசிவம் கூறியது]

திருந்துமுயி ரிளங்குமர நாடகநூல் சித்தாந்தத்
திறங்க டேற்றி
விருந்திதெனப் புலவரெலா மிகமகிழச் செழுந்தமிழால்
விரித்தல் செய்தான்
மருந்துநிகர் மொழிமடவார் மயிலொடுமா ருடுபொழில்
வளநவாலி
இருந்திலங்கு கவிஞர்பிரான் சோமசுந்த ரப்புலவ
ரெனுஞ்சீ ரோனே.

4

[வட்டுக்கோட்டை, பண்டித அ தில்லைநாதரவர்கள்]

## ஆசிரியப்பா.

மலர்தலை யுலகி னிலைஇய மாந்தர்க்கு
அலகி லுறுதி யுணர்த்துவான் றேற்றிக்
குலவிய சைவக் குரவர் நால்வருள்
இருவர் பண்பெறா உம் தளிகள் இரண்டனை
மருவப் பெறீஇ வான்புகழ் படைத்த
ஈழப் பெயரின் தாழ்விலா வணங்கு
சங்கப் புலவன் தண்டமிழ்ச் சாத்தான்
மங்காச் சீர்த்தி மன்னவற் கிளையோன்
வெறுத்த கேள்வி உருத்திரங் கண்ணன்
யாவரும் புகழ்ந்த இலங்கை மாதேவி
திருத்தகு முகமென சீரியோர் பரவும்
எழ்புண ரின்னிசை யாழ்தந்த நாடு;
ஆங்கண்,
திருவிற் கல்வியிற் றிசையிசை படுத்த
மன்னிய நவாலியூர் வன்னிய சேகரன்
தொன்னிலை வேந்தர் ஐம்பெருங் குழுவில்
ஒருதா னாகி அரசியல் கிறுத்தலின்
"அருமைய" னென்றமா ராயம் பெற்றவன்
வழித்தோன்ற லாகி வண்மையாற் சிறந்த
கதிர்காம ரென்னு மதிராக் குரிசில்
புரிதவப் பயன்றருஉம் புதல்வனைத் தோன்றிய

ந. சீ

சோமசுந் தரனெனும் தூய்மைசால் மேகம்,
சங்கநூற் கடலும் சமணநூற் பௌவமும்
சைவ மோம்பும் தகைசால் சிறப்பின்
ஆறிரு முறையெனும் அளப்பரு வாரியும்
வேறொன் றிலாத விளங்குசித் தாந்த
சாத்திர வாழியும் பிறவு மெல்லாம்
நசைமீக் கூரப் பசையறப் பருகி
அறிவெனும் அமுத மாமழை பெய்து
மறுவில் கல்வி வான்பயிர் வளர்த்தது;
வான்பயிர் வளர்த்து மதிவளம் படைத்தது;
மதிவளம் படைஇ நூல்நிதி தந்தது;
மேக மாகிய ஏமச் செம்மல்
அதாஅன்று;
வேறுவேறு கிளந்த வீறுசால் பௌவத்துக்
குடைந்து மீயெடுத்த முத்தையும் மணியையும்
தாளிற் பெறுவ வாய்வதிற் கொண்டு
வேளாண்மை செய்யும் தன்குடிக் கேற்ப
ஒன்று புணர்த்து மதித்தாம்பிற் குயிற்றி
"உயிரிளங் குமரன்" எனப்படு நாடகம்
அறிவுக் கதிர்மணி மாலை யாக்கிச்
செந்தமிழ்த் தாய்க்குப் புனைந்தனன்
அறமுத னான்கு மொருவழிப் பெறவே.

50600

# 5

## [குல்சைப்பண்டிதர்,
## * திரு. ப. இராமநாதபிள்ளை அவர்கள்]

### வெண்பா

மெய்கண்டார் பன்னான்கு மிக்கமுறை யீராறுஞ்
செய்யகுறள் தொல்காப் பியச்செய்யுள்—துய்யவிரு
பத்தெட்டா நூலின் பயனு முயிரிளங்
கொத்தார் குமரனெனுங் கூத்து.

கூத்துநூல் சான்றோருங் கூடிப் பயனுகர
யாத்துலகுக் கீந்தளித்தான் எந்நண்பன்—வாய்த்ததமிழ்
மெய்ப்பொருள்தேர் சோமசுந் தரனு மேம்புலவன்
வைப்பா முருகனடி வாழ்த்து.

### ஆசிரியப்பா

உலகெலா முணர்ந்து மோதற் கரியவன்
அலகில் பெரும்புகழ் ஆயுங் காலை
உயிரோ டுடனா மொருமல மொழிப்பான்
தொன்மை வினையுந் தொல்லுல கதனின்
முதலெனப் பெறூஉம் மூவா மாயையும்
உயிரொடும் பொருந்தி யூழ்முறை கழிய
ஊட்டு விக்கு மொப்பிறன் வலியாம்
மறைத்த லென்னு மாண்புறு மருந்தும்
சேர்ப்பித் துயிர்கள் செல்லுழிச் சென்று
மறைநெறி யொழுகி இறைதுறை ஏறும்
செவ்வி வாய்ப்புழிச் சிவனருள் என்னும்

---

* கொழும்பு இந்தும்பிட்டி ஆரங்கில் இந்நாடகம் நடித்த ஞான்று எழுதியவை.

பேரின்ப நல்கிப் பிறவா நெறியருள்
சீரிய ஐந்தொழிற் சிறப்பினை யம்பலம்
ஐந்தினும் அடையாளத் தைந்தெழுத் தோடும்
நடத்தல் கிடத்தல் இருத்தல் முதற்பல
தொழிலா னன்றித் தோற்றமீ றில்லோன்
கூத்தெனப் பெயரிய குணமுறு நாடகம்
"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமதாய்
ஊன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" எனக் கூறும்
வீட்டியன் நூன்முறை விளக்கிக் காட்டி
நடிக்கு நலத்தால் நண்ணுவ தென்க
அதனால்,
முத்தமிழ் தன்னுள் முதலிடம் பெறுவதும்
எத்தகை யார்க்கு மினிமை பயப்பதும்
ஒருங்கே முத்தமிழ் ஓதா துணரும்
அருஞ்செவ்வி தன்னை யழகுற வமைப்பதும்
நாடக மென்றே நவிலா துணரலாம்
இந்நாள் நாடகம் எது மறியாப்
புன்னெறி மாக்கள் பொருணசை யதனால்
கொன்னே யாடிப் பிறர்க்குந் தமக்கும்
பழியொடு பட்ரு மொழியாத் தீமை
ஈட்டுவ தாயினர் இதுகாண் சான்றோர்
நாணி யொதுங்கி நாடகம் மற்றுக்
கோணிய முறைகொ லென்றுள நைந்தனர்
அக்குறை நீப்பான் அறுமுக னடியிணை
பொக்கமி லுளத்தீப் போற்றும் புலவன்

தமிழ்வளஞ் சிறந்த அமிழ்தினு மினிய
யாழ்ப்பா ணத்து நவாலி நகரினில்
அருமைக் கதிர்காம ராகு மப்பரும்
இருமைக்கு முறுதி யீந்தருள் நங்கையாம்
திருமக ளென்னுந் திருவார் இலக்குமித்
தாயரும் பன்னாட் டனித்தவ நோற்றுக்
கதிர்கா மத்திறை முதிரா வடியிணை
அன்பொடுந் தொழுதே யவனரு ளதனல்
"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிறவென" எக்காலும்
யாவர்க்கும் பொருந்து மின்றமிழ் மறையினில்
நாவலன் செந்நாப் போதவன் கூறிய
செய்யுட் குறியாய்ச் சிறப்பொடு மீங்குப்
பெற்று வளர்த்த பெருமைசேர் செம்மல்
பிறைசே ரழக ரெனும்பெயர்ப் பொருளாம்
சோம சுந்தரம் பிள்ளையெனுந் தூயோன்
முத்தமிழ் வல்லோன் முன்னுமாங் கிலத்தும்
வழக்கிறந் துள்ள வடமொழி யகத்தும்
பழக்கமிக் குள்ளோன் பயன்சேறி பண்பினன்
கோள்நூல் வல்லோன் குறுநகை முகத்தன்
வெண்ணீ றகலா விழைபெரு நெற்றியன்
அருளைக் கிதுவென அழகுறுங் கண்ணினன்
பொருண்மொழி யன்றிப் புகலா வாயினன்
தெருண்மொழி யன்றித் தேராச் செவியினன்
தலைவற் கன்றி வணங்காத் தலையினன்
குன்றனூர்க் கன்றிக் கூப்பாக் கையினன்
உறையுளா யிறைக்கன்றி யொவ்வா வுளத்தவன்

தன்மனை மகவன்றித் தழுவா மார்பினன்
அழுக்கில் வெள்ளாடை அசைஇய இடுப்பினன்
இழுக்குடை வேட்கன்றி ஈயா முதுகினன்
பன்னு மிசைபோற் பலநலம் வாய்ந்தோன்
அடியார்க்கு நல்விருந் தாக்கும் பணிவாற்
பொருந்துசின் னம்மைப் பொருவில்கற் பரசியை
மன்னும் மனையாய் மாண்புடன் பெற்றே
ஆண்பான் மூவர் பெண்பா லிருவர்
அழகுறு மைவரை யருங்கலத் தின்று
"வெட்டுக் கோட்டை வளர்சை வாங்கில
வித்தியா சாலை" வியன்பே ராசிரியத்
தமிழ்த்தலைமை பூண்ட தக்கபே ரறிஞன்
பன்னா ளியற்றிப் பயன்பெறச் செய்தோன்
" திங்கள் கிழமை நாண்முத லாகப்
புதுமையும் பழைமையும் போற்றி வெளியிடும்
தமிழே டதனிற்" றன்னய மின்றி
உலகுக் குறுதி யுணர்த்துவான் வேண்டி
எழுதி விடுக்கும் எண்ணில் கட்டுரைகள்
சொல்லே பொருளே அணியே இன்ன
சுவைபல பொருந்தத் தொடுக்கு மாண்பினன்
நவையில் காட்சி நாடுபுகழ் நாவலன்
முப்பொரு ளுண்மையு மப்பொருட் டலைமையாம்
ஒப்பில் முழுமுத லுயிர்க்கின்ப நல்குவான்
தப்பி லறிவுந் தனிப்பெருங் குமரனும்
செப்பரு முருகச் செய்யவா சானும்
மெய்யாம் பேரின்ப வல்லியெனும் வீடும்
எய்யா வைப்பா யீவது காட்டுபு

" உயிரிளங் குமர னெனும்பெய ரதனால் "
செயிரில் நாடகஞ் செழுந்தமிழ் முறையில்
ஆக்கினன் ஆக்கி அழகுற வாடினன்
அதனுள் ளீடை யறைகுவன் கேண்மோ
திருநீல கண்டருந் திருவருட் சிவகாமித்
தாயரும் இறைவன் இறைவியு மாவர்
உயிரிளங் குமரன் செவ்விபெறு முயிரே
பேரின்ப வல்லிபாற் பிறக்குங் காதல்
மாறில் வீடுறும் மனவிழை வாமே
இருண்மல வேந்த னின்னாபி ருடனே
தோன்றிய தொன்மை மலமெனச் சொல்லுப
சிற்றின்ப வல்லி செல்லுல கின்பே
காயா புரியே கழியுமிவ் வுடலே
சுப்பிர மணியர் சொல்லருட் குருவே
வெள்ளிமலை எய்தல் விடுமல மாகும்
பேரின்ப வல்லியைப் பீடுற மணத்தல்
இரண்டறக் கலக்கு மிறவா வின்பே
இன்னும்,
" அருணெறி திருநெறி செங்நெறி யென்னும்
சைவசித் தாந்தத் தனித்திறங் காட்டு
மெய்வகை என்ன விளங்குங் கூத்தர்
பன்னான் கென்னும் பண்புடை யாளர்
பன்னிரு முறையின் பயனிது வென்னப்
பன்னிரு காட்சிப் பகுதிய துடனே
இந்நாள் இலங்கைத் தலைநக ராகும்
கொழும்பில் **இந்தும் பிட்டி** யரங்கக்
கூடத்துக் குனித்தனர் கூடும் புகழொடும்

அவரே,
கந்தையா அரச ரத்தினம் கணபதி
கந்தையா சோம சுந்தரம் கூத்துமன்
இருவேற்பிள்ளை இன்னட ராசா
அம்பலவாணர் கணபதி யிருவர்
நடராசா முத்துவேல் நாலிரண் டாறே
பேரின்ப வல்லி வயந்த மாலே
உயிரிளங் குமரன்முன் அறிவன் திருநீல
கண்டன் சிவகாமி யிருண்மல வேந்தன்
இருவர் மந்திரி சிற்றின்ப வல்லி
உயிரிளங் குமரன்பின் குறத்தி சுப்பிர
மணிய முனிவர் மன்பறை முறையே
காட்சி யீரா றுங் கருத்தொடுங் கிளக்கில்

அ. உயிரிளங் குமரன் ஒப்பில்பே ரின்ப
வல்லியை வெள்ளியிற் காதல் கொள்ளல்
ஆ. திருநீல கண்டர் செம்மலே வேட்டம்
பெறுமா விடுதலும் பிரிவச்சந் தன்னைச்
சிவகாமி யம்மை செழுமுளங் கொள்ளல்
இ. இருண்மல மன்னன் இன்றுணைச் சூழ்ச்சியாற்
சிற்றின்ப வல்லியின் செய்திறன் செப்பல்
ஈ. உயிரிளங் குமரன் அறிவனெடு வேட்டம்
செய்யும் பொழுதத்துச் சிற்றின்பத் தாழ்தல்
உ. இருண்மல வேந்தன் இன்னுயி ரதனை
உலகினி லுடலகத் தாட்டு வித்தல்
ஊ. பேரின்ப வல்லியும் பெரிது நினைந்தே
உயிரிளங் குமரற்காய் உள்ள முருகல்
எ. சிவகாமி யம்மையைத் திருநீலர் தேற்றல்

ஏ. முருகவேண் முனிவரும் முற்படு முலகினில்
மீளுவழி யுயிர்க்கு மிக்கெடுத் துரைத்தல்
ஐ. பற்றுசிற் றின்பப் பற்றற முயலுழிச்
சிற்றின்பந் தன்வயப் படுத்த முயறல்
ஒ. உயிரிளங் குமரன் அறிவன் உதவியால்
வெள்ளி மலைக்கண் விழைவொடுஞ் சாரல்
ஓ. உயிரிளங் குமரனும் பேரின்ப வல்லியும்
ஒன்றுபடு முறைபறை யுவப்போ டுரைத்தல்
ஔ. உயிரிளங் குமரன் ஒப்பில்பே ரின்ப
வல்லியொடு நீங்கா மணவாழ்வு பெறுதல்
என்னும் பன்னிரண் டியற்கைத் தாமே
இத்துணைச் சிறந்த விப்பெருங் கூத்தும்
அத்துணை முறையே ஆடிக் காட்டிய
அன்புறு நண்பரும் ஆசிரியர் தாமும்
இன்புறு மனைமக்கள் எழினலஞ் செல்வம்
நாளும் பெற்று நனிபுக ழோங்கச்
செந்தமிழ் பேணிச் சிவனரு ளதனால்
வாழ்க வாழ்க வான்போல்
வாழ்க வாழ்க வாழ்கவிவ் வுலகே.

## வெண்பா

முப்பொருள் முன்னோன்ருன் மும்மலத்தி னின்றுயிரை
ஒப்ப வெடுத்தின்ப மூட்டுமுறை— இப்புவிக்குக்
காட்டு முயிரிளங் காதற் குமரனெனும்
பாட்டுரைசேர் கூத்தநூற் பண்பு.

பண்பாரு மிந்நூல் பரிவோ டளித்தவனென்
நண்பார் நவாலிவாழ் நற்சோமப்— பண்பாரும்
சுந்தரனு நாவல்லான் றூயதமிழ்ப் பாவல்லான்
கந்தனிரு தாள்மறவான் காண்.

௧

# உயிரிளங்குமரன் நாடகம்

## கதைச்சுருக்கம்

பூலோகத்திலே, வெள்ளிமலையிலே, நீலகண்டன் என்னும் பெயரையுடைய வேந்தன் ஒருவனிருந்தான். அவனுக்குச் சிவகாமியம்மையா ரென்னும் பெயரை யுடைய மனைவியாரிருந்தார். அவர்களிருவரும் உலகத்தி லுள்ள மன்னுயிர்கண்மேல் நீங்காத பெருங்கருணை யுடை யவர்களாய், அவைகளுக்கு வருந் துன்பங்களைத் துடைத் துப் பேரின்பத்தைக் கொடுத்தலே தமது தொழிலா கக் கொண்டு ஒழுகிவந்தார்களாதலின், அவர்களை உல கம் அம்மைஅப்ப ரென்று கூறித் துதித்து வந்தது. அவர்களுக்கு உயிரிளங்குமரன் என்னும் பெயரையுடைய ஒரு மகனிருந்தான் அவன் பலவித வடிவங்களை எடுத் துக்கொண்டு உலகமெங்கும் போய்த் தங்கி விளையாடி வருகின்ற காலத்திலே, அவ் வெள்ளியங்கிரியிலே நீல கண்ட வேந்தனுக்கும் சிவகாமியம்மையாருக்கும் உரிமை யுடையவளாய் அவர்களால் வளர்க்கப்பட்டு வந்தவளும், பேரின்பவல்லி யென்னும் பேரையுடையவளும், என் றும் மூவா எழில்நலம் பெற்றவளுமாகிய ஒரு பெண் ணைக், காட்டிலே வேட்டைக்குப் போனபொழுது ஓர் பொழிலகத்தே கண்டு காதலுற்றிருந்தான். பின், அவ் வுயிரிளங்குமரனுக்கு ஓர் மயக்கந் தோன்றி ஓரிடத்தும் போக்குவரவு இல்லாமலும், ஊணுறக்க மில்லாமலும் இருந்ததைக் கண்ட சிவகாமியம்மையார், அவனுக்காக

இரங்கி மனம் வருந்தித் தனது நாயகனிடம் போய் அதனை முறையிட்டார். அவன் ஓர் மந்திரக் கவசத்தைக் கொடுத்து மகனுக்கு அணிவித்து அதனால் மயக்கம் நீங்கப்பெற்ற வவனைத் தன்னிட மழைப்பித்து, அறிவனென்னுந் தோழனுடன் காட்டிலே போய் வேட்டையாடி வரும்படி சொல்லி யனுப்பினான். கட்டளைப்படியே தாய் தந்தையரிடம் விடைபெற்றுக் காட்டகத்து வேட்டங் கருதிப் போயினான்.

இஃதிங்ஙனமிருக்க, நீலகண்டவேந்தனுக்குக் குலப் பகைவனாகிய இருண்மலவேந்தனென்னும் பெயரை யுடையவோர் கடுங்கண் மறவன், மாயாபுரி யென்னும் நகரத்திலே யரசாண்டுவந்தான். அவன் நீலகண்ட வேந்தனுடைய ஆணையையும் அருளையும் நீக்கி, அவனைத் தன் கீழ்ப்படுத்தவேண்டுமென வெண்ணி, காமன் கோபன், மோகன், கொலைஞன் முதலாகிய வீரர்களை உலகெங்கணு மனுப்பி அங்கங்குள்ள நீலகண்டவேந்தனுடைய குடிகளை மயக்குவித்துத் தன்பாற்படுத்தி வருவானாயினான்.

அவன் ஒருநாள், மாயாபுரி நகரத்திலே தனது மந்திராலோசனைச் சபையில் நீலகண்டவேந்தனை வெல்லுஞ் சூழ்ச்சிகள் செய்துகொண்டிருந்தபொழுது, அவனுடைய ஒற்றரிலொருவன் விரைந்து சென்று மாயாபுரி நகரத்திற்கடுத்த மத்திய புவனக் காட்டிலே நீலகண்டவேந்தன் மகன் உயிரிளங்குமரன் வேட்டைக்குப் போய் விளையாடி நிற்பதை அவனுக்கு விண்ணப்பஞ் செய்தான்.

அதுகேட்ட இருண்மலவேந்தன் மந்திரிகளோ டாராய்ந்து, தன்னுடைய வீரர்களு ளிருவரைத் தனது தங்கை மாயை மகளாகிய சிற்றின்பவல்லியோ டனுப்பி அவர்களால் உயிரிளங்குமரனை யகப்படுத்திப் பிடிப்பித்துத் தன்னுடைய காயாபுரியென்னுங் கோட்டையிலே சிறையிடுவித்தான்.

சிறையிடப்பட்ட உயிரிளங்குமரன் சிற்றின்ப வல்லியின் பலவிதமான மோகக் காட்சிகளினால் மயங்கித் தன்னையுந் தனது பெற்றோரையுந் தன்னால் முன்னே காதலிக்கப்பட்ட பேரின்பவல்லியையுந் தனது தோழனாகிய அறிவனையும் மறந்து அங்கே உறைவானாயினன்.

இஃதிங்ஙனமிருக்க, முன்னே பொழிலகத்திலே உயிரிளங்குமரன் வேட்டை போந்த ஞான்று, அவனைக் கண்டு காதலித்த பேரின்பவல்லி, காதல் நோயினால் மிகவும் வருந்தியிருந்தாள். தோழி அவளைத் தேற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில், குறிகூறுங் குறத்தி, ஒருத்தி அங்கேவந்து குறிசொல்லுபவள், பேரின்பவல்லி உயிரிளங்குமரனைக் காதலித்தமையை முன் கூறி, பின்பு, அவனுக்கு இப்பொழுது சிறிது இடையூறு உண்டாயிருப்பதையும், பெரியோனொருவ னருளினால் அவ்விடையூறு நீங்கப்பெற்று விரைவில் வந்து கடிமணஞ் செய்வான் என்பதையும் வற்புறுத்திக் கூறினாள். அது கேட்டுப் பேரின்பவல்லி தேறியிருந்தாள்.

பின்பு, வேட்டைக்குப் போன மகனைக் காணவில்லையே என்று மிகவு மிரங்கி வருந்திய பெருங்கரு

ணைப் பிராட்டியாராகிய சிவகாமியம்மையார் தாம் கண்ட பொல்லாக் கனக்களினாலே தமது மகனுக்கு இடையூறு நேர்ந்துவிட்டதென்பதை யறிந்து, அஞ்சித் தனது நாயகனிடம் முறையிட்டார். அதுகேட்ட நீலகண்ட மன்னன் தேவியாரைத் தேற்றித் தமது அரண்மனையில் சர்வ அதிகாரங்கள் பெற்றிருக்கின்ற சுப்பிரமணிய முனிவரை யழைப்பித்து, உயிரிளங்குமரனைக் கண்டு பிடித்துவரும்படி யனுப்பினான்.

சுப்பிரமணிய முனிவர் தமது ஞான உணர்ச்சியினாலே உயிரிளங்குமரன் காயாபுரிக் கோட்டையிலே சிறை வைக்கப்பட்டிருப்பதை யறிந்து, அங்கே சென்று வாயிற்காவலாளரை உண்மைப்பொருள் பொதிந்த பல விதஅசதி வார்த்தைகளினால் தம்வசப்படுத்திக் கோட்டைக்குட் புகுந்து, சிற்றின்பவல்லியோடு ஏதோ காரணம்பற்றி யூடிக்கொண்டு துக்கத்தோடிருந்த உயிரிளங்குமரனைக் கண்டார். கண்டு, தாம்யாரென்பதையும், அவன் யாரென்பதையும், தாம்வந்த காரணம் யாதென்பதையுமறிவித்தார். உடனே உயிரிளங்குமரன் தான் யாரென்பதை யுணர்ந்து, தனது பெற்றோரையும் பேரின்பவல்லியையும் நினைந்து மிக வருந்தி, தன்னை இக்காயாபுரிக் கோட்டையினின்றும் மீட்டு ஆட்கொள்ளும்படி முனிவரை வேண்டினான். முனிவர் திருவுள்ளமிரங்கிக் காயாபுரிக் கோட்டையிலுள்ள முப்பத்தாறு வீரரையும், அவர்கள் உதவியால் சிற்றின்பவல்லி அவனை அகப்படுத்தப் புனைந்த ஆசை வலையையும், இருண்மல வேந்தனின் சுருங்கா வாணையையும் வெல்லத் தகுந்த ஞானமந்திர

வாளைப், பொருட்களி னுண்மைத்தன்மைகளை உள்ளவா றறிவிக்கும் ஓரற்புதக் கண்ணாடியுடன் உயிரிளங்குமா னுக்குக் கொடுத்து, அவற்றின் உதவியால் பகைவரை வென்று காயாபுரிக் கோட்டையைவிட்டு வெளிப்போந்து ஆண்டுவந்து வெளிப்படும் அறிவனென்னும் தோழன் காட்டுகின்ற சுருங்கை வழியாக வெள்ளியங்கிரிக்கு வரும்படி பணித்துப் போயினர்.

அவர் போயபின், உயிரிளங்குமரன் முனிவர்கொடுத்த கண்ணாடியை அணிந்து தானுறைந்த காயாபுரிக் கோட்டையை நோக்கியபொழுது பலவாற்றானும் அதன் தூய்மையின்மை அவனுக்குப் புலனாக, அதனால் அருவருப்பெய்தி நின்றானை, ஊடலோடிருந்த சிற்றின்பவல்லி வந்து கண்டு, உயிரிளங்குமரன் பண்டுபோலத் தன்னை விரும்பாது, வேறுபட்டிருந்ததற் கிரங்கி அவனைத் தன் வயப்படுத்த முயன்றாள். அப்பொழுது உயிரிளங்குமரன், அவள் முன்பு பேரின்பவல்லியைப் போல வடிவங்கொண்டு வந்து தனக்குச் செய்த தீங்குகளை நினைந்து, அடங்காத வெகுளிகொண்டு அவளைப் பலவாறு வைது விலக்க, அவள் விலகாது எதிர்த்துநின்று அவன் மேற் றன் மாயைவலையை வீசினாள். வீசுதலும் உயிரிளங்குமரன் முனிவர்கொடுத்த ஞானமந்திர வாளினால் அவ்வலையை அறுத்து அவளையும் வலி குன்றச் செய்து துரத்தித், தனது தோழனாகிய அறிவனை நினைந்து இரங்கி நிற்புழி, அவனவ்விடத்து வெளிப்பட்டுத் தோன்றித் தன் வரலாறு கூறினான். பின், இருவரும் இனிமேல் நிகழ்வனவற்றிற்குத் தாம் செய்யவேண்டுவனவற்றைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள்.

இஃதிங்ஙனமாக, உயிரிளங்குமரனின் ஞான மந்திரவாளினால் மாயவலை அறுந்துபோகத் தானும் வலி தொலைந்து சென்ற சிற்றின்பவல்லி தனது மாமனாகிய இருண்மலவேந்தனை அடைந்து நிகழ்ந்தவற்றைக் கூறி இரங்கி அழுதாள். அதுகேட்ட இருண்மலவேந்தன் அடங்கா வெகுளியுடையனாய்க் கண்களில் தீப்பொறி பறக்கப் புருவ நெரித்துப் பல்லைக்கடித்துக் கைகொட்டிச் சிரித்து மந்திரிமாரை நோக்கி வஞ்சினம் பலகூறி அவருடன் எழுந்து உயிரிளங்குமரனைக் கொல்லுமாறு காயாபுரிக் கோட்டைக்குட் சென்றான். அவன் வரவையறிந்து, எழுந்த உயிரிளங்குமரன், ஞானமந்திரவாளைக் கையிலேலங்கிக்கொண்டு அறிவனென்னுந் தோழன் பின்னேநின்றுதவிபுரிய, இருண்மலவேந்தனை எதிர்த்து நெருங்கிய வளவிலே, அவனு மமைச்சரும் வீரருஞ் சிறிதுநேரம் மாறுபட்டுநின்று இகல்புரிந்து, பின்பு ஆற்றாராய்ப் புறங்கொடுத்தோடினார்கள். முதுகிட்டோடுபவரைக் கொல்லுதல் கூடாதென அறிவன் கூறக்கேட்டுக் கோபந்தணிந்து, உயிரிளங்குமரன் வாளை யுறைபுகுத்தி, அவனோடு சென்று காயாபுரிக் கோட்டையின் முகப்பிலுள்ள முக்கோணச் சாளரத்தின் இரண்டுகாலதரையு மடைக்கவே நடுவேயுள்ள சுருங்கைவழி வெளிப்பட்டது. உடனே அறிவனுந் தானும் அதனுள் நுழைந்து செல்லும்பொழுது அங்கே முக்கோணவடிவாயும், நாற்கோணவடிவாயும், ஏழாநாட் பிறைக்கோணவடிவாயும், அதன்மேல் முக்கோணவடிவாயும், அறுகோணவடிவாயும் கட்டப்பட்டுப் பலவித அலங்காரங்களோடு பொலிந்துவிளங்கும் அரண்களையும், ஆண்டாண்டு விளங்கித் தோன்றும் தெய்வங்க

ளையும் கண்டு வணங்கிக்கொண்டு அப்பாற்சென்று ஒரு பெரிய வெளியை அடைந்தனர். அப்பொழுது சந்திர மண்டலத்தினின்று மொழுகிய வமுததாரை அவர்கள் மேற்பட, இளைப்பொழிந்து பேரெழில்பெற்று விளங்கினார்கள். உடனே வெற்றியைக்குறித்து ஊதப்படுவதாகிய ஓங்காரவடிவுடைய வலம்புரிச்சங்கின் ஓசை எழுந்து முழங்கியது. அந்தரதுந்துபிகள் கறங்கின. வானவர் பூமழை பொழிந்தனர். உற்றுநோக்கியபொழுது வெள்ளிமலையும் புலனானது. அங்ஙனம் ஒருகாலுங் காணாத அற்புதக் காட்சிகளைக் கண்டு குமரனுந் தோழனும விம்மித முங் குதூகுலமுமெய்தி நின்றுராக, சுப்பிரமணிய முனிவரும் திருநீலகண்டமன்னனின் உறுதிச் சுற்றமும் அடியார்களு மாண்டுத் திரண்டுவந்து குழுமி, அவர்கட்கு நல்வரவு கூறி, ஆடல் பாடல்களுடன் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் வெள்ளியங் கிரியிலே பெற்றோருக்கு முன்னே விட்டார்கள். மைந்தன் திரும்பிவரக் கண்ட தாய்தந்தையர் அகமிகமகிழ்ந்து கட்டியணைத்து உச்சி மோந்து மடிமீதிருத்தி முறைமுறையே மகிழ்ச்சிகொண்டாடினார்கள். நிகழ்ந்தவற்றை யவன் கூறக்கேட்டு அச்சமும் விம்மிதமும் அடைந்தார்கள்.

பின்பு சுப்பிரமணியமுனிவரின் வேண்டுகோளின்படி தாங்கள் முன்னே இவனுக்கென்றுவளர்த்த பேரின்பவல்லியைத் திருமணஞ் செய்துகொடுத்தார்கள்.

உயிரிளங்குமரனும் பேரின்பவல்லியும் என்றும் அழியா வரம்பெற்றவர்களாய் இடையறாத பெருமகிழ்ச்சியில் எப்பொழுதும் இளைத்து இருந்தார்கள்.

# நாடக உறுப்பினர்

| | |
|---|---|
| திருநீலகண்டன் : | வெள்ளியங்கிரிவேந்தன் |
| சிவகாமித்தாயார் : | திருநீலகண்டன் வாழ்க்கைத்துணைவி |
| நந்தி : | திருநீலகண்டன் அரண்மனைக் காவற்காரன் |
| உயிரிளங்குமரன் : | திருநீலகண்டன் மகன் |
| அறிவன் : | உயிரிளங்குமரன் தோழன் |
| பேரின்பவல்லி : | திருநீலகண்டனுடையமருமகள் |
| வயந்தமாலை : | பேரின்பவல்லியின் காதற்றோழி |
| இருண்மலவேந்தன் : | காயாபுரிக் கோட்டைமன்னவன் |
| கட்டியகாரன்<br>மந்திரிமார் மூவர்<br>ஒற்றன்<br>வாயில்காப்போன் | இருண்மலவேந்தன் அரண்மனையாளர் |
| சிற்றின்பவல்லி : | இருண்மலவேந்தன் தங்கை மாயைமகள் |
| அறவன் மறவன் : | இருண்மலவேந்தன் வீரர் |
| சுப்பிரமணிய முனிவர் : | திருநீலகண்டன்அமைச்சருள் முதல்வன் |
| கண்ணப்பன்<br>நெடுஞ்செவியன் | காயாபுரிக்கோட்டைக் காவற்காரர் |
| குறத்தி : | குறிகூறுங் குறிஞ்சி நிலத்தாள் |
| பறையன் : | முரசு கடிப்பிடூஉம் முதுகுடிப் பிறந்தோன் |

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உயிரிளங்குமரன்

## நாடகம்

### மூத்தபிள்ளையார் வணக்கம்

மணிகொண்ட திண்புயத்து மாயவனுங் காண்பரிய
அணிகொண்ட சுடர்த்திங்க ளவிர்சடையோன் களிறுக

எஞ்சாத புவனமெலா மீன்றருளு மணிவயிற்றின்
அஞ்சாயன் மடநோக்கின் அம்மையொரு பிடியாக

அருளாடல் புரிகின்ற வமையத்தி னுலகுய்ய
வருமானை முகத்தானை மலர்த்தாள்கள் பணிகுதுமே

மன்னுபுகழ் வளருமுயி ரிளங்குமரன் வான்சரிதை
பன்னுதமிழ் நாடகமிப் படியின்மிசை நிலவுதற்கே.

### இளையபிள்ளையார் வணக்கம்

பொன்பூத்த நறுங்கொன்றைப் புரிசடையெம் புண்ணியனார்
கொன்பூத்த நுதல்விழியிற் குலவுமறு பொறியாகி
பனிவரையி னொருபுடையிற் பயில்கமலப் பைஞ்சுனையில்
இனியசிறு குழவிகளா யிருமூவர் பாலருந்தி

பல்லுயிரும் பலவுலகும் படைத்தருளும் பச்சைநிற
வல்லிபுகுந் தெடுத்தணைக்க மருவியொரு வடிவாகி
இளஞாயிற் றெழில்காட்டு மிருமூன்று திருமுகமும்
அழகார்பன் னிருவிழியு மாறிரண்டு தடந்தோளும்
திருக்காரும் நெடுமாலும் மலரயனுந் தேவர்களும்
இருக்காதி மறைமுடிவுங் காணாத விணையடியும்
கொண்டெழுந்து வாணாடு குடியேற்றி யேழையையுந்
தொண்டுகொண்ட வருண்ஞானச் சுடருமிழும் வேன்முருகா.

ஒருமானை யிடம்பிடித்தே யொருமானைக் கரம்பிடித்த
பெருமானைப் போலிரண்டு பிணைமானைப் பிடித்தனையே
பூமாதும் மலர்மாதும் புணரகலத் தொருமாலை
மாமாவென் றழைப்பதற்கோ மருமகனாய் வந்தனையே
ஆகநெக விழிபுரள வருமறையின் பொருடெரியாக்
கோகனகன் றனைக்குட்டிக் கொடுஞ்சிறையில் வைத்தனையே
அஞ்சவரு நஞ்சமுத மாக்குமுந்த னப்பனுக்கும்
கொஞ்சியொரு மொழிகூறிக் குருவாக வந்தனையே;
அதாஅன்று,
அருந்தமி ழுணர்த்தும் பரமா சிரியனும்
நீயே யாதலின் நாயே னுரைக்கும்
உயிரிளங் குமரன் காதை
செயிரிலா தோங்கிச் சிறக்கநல் குதியே.

## செந்தமிழ்த் தெய்வ வணக்கம்

அருமருவு மொருகுடிலை யருள்நோக்கக் கருவாக்கும்
உருமருவு நாதவிந்தின் உறுமியற்கை யொலித்திரளை
வீங்குநீர் வியன்கங்கை வேணியணி வேதியனும்
பூங்கடம்பு புரளகலப் புண்ணியனு முருவாக்கித்
தம்பதங்கள் விதிமுறையே நெஞ்சழுத்தித் தவங்கிடந்த
கும்பமுனி கரங்கொடுக்க வவன்மடியிற் குருந்தாகி
மூவேந்தர் தாலாட்ட முச்சங்கத் தேகிடந்து
பாவேந்தர் செந்நாவில் நடைபழகி மொழிபயின்று
மங்குலுறை வேங்கடமும் வான்குமரிப் பேராறும்
தங்குமிடைத் தமிழுலகம் அரசுபுரி தமிழ்த்தாயே.

மன்னுமருட் தன்மையிலும் வளமையிலும் புதுமையிலும்
உன்னைநிக ரானமொழி யுலகினிலே யொன்றுண்டோ
பாற்கடலின் விடங்கொடுத்த பண்ணவர்கள் நனிநாண
நாற்கடலின்சுவையமுத மரன்செவியில் நுழைத்தனையே
உருக்காணுப் பேரிருளில் ஒருவனுக்காய் ஒருத்தியிடை
இருக்காலுங் காணுனை யிருக்காலு மேவினையே
பெருமுதலை சிறுமதலை தரவருளிப் பெற்றோர்கள்
பொருமுதலுங் கருமுதலும் போக்கமொழி புகன்றனையே.

நிறைமதி பொழிதரு நிலவெனு மெழிலினை
மறைபிணி கதவுடன் வழிவிடு மொழியினை
இருமையு முதவிடு மிசைதரு மதியினை
வருமறி வினரக மகிழ்வுறு துதியினை
வரமிகு புலவர்கள் மனநிறை குறியினை
மதுரையி லரசியல் மருவிய நெறியினை.

பொய்யுரைப்போர் புன்னாவில் பொருந்தியதீட் டோட்டுதற்கோ
செய்யதமிழ்ப் பெருமாட்டி தீயிடைநீ குளித்ததுவே
வேற்றுமொழி தீண்டுதலான் மேனிகழீஇக் கொள்வதற்கோ
ஆற்றெதிரே யேட்டின்மிசை யம்மாநீ நீந்தியதே
எஞ்சலிலா வுயிர்மருந்து யாணென்ப துணர்த்துதற்கோ
நஞ்சமுத மாக்கியெங்கள் நாயகிநீ நாட்டியதே.

நாவினிலே நின்றோய்நீ நல்லமொழி பயின்றோய்நீ
பூவினிலே யமர்ந்தோய்நீ பூவுலகம் புரந்தோய்நீ

உரையுநீ ; பொருளுநீ ; உள்ளுநீ ; புறமுநீ ;
விரையுநீ ; மலருநீ ; வித்துநீ ; முளையுநீ ;
எனவாங்கு,
யாழினுங் குழலினும் பாலினும் தேனினும்
காணினுங் கேட்பினுங் கருதினு மினிக்கும்
அருந்தமிழ்ப் பாவாய்! ஆருயிர் மருந்தே!
இருந்தவக் கொளியே! இசைமுரல் கிளியே!
நந்தா விளக்கே! சிந்தா மணியே!
பூமிசைப் பொலிந்தநின் தோமறு சீர்த்தி
புந்தியிற் கொண்டு சந்ததம் போற்றுவன்
தீதறு முயிரிளங் குமரன்
காதை கூறக் கருணைசெய் குதியே.

## குருவணக்கம்

சுப்பிரமணியன்
மெய்ப்பதவிணைகள்
அற்பொடுபணிவோர்
செப்புவர்தமிழே.

## அவையடக்கம்

வழுத்துமுயர் சைவநெறி நுண்பொருளைக்
கதையாக வகுத்துப் பேரிட்
டெழுத்துமுத லோரைந்தி னியலறியே
னிசையறியே னெளியே னின்று
பழுத்ததமிழ் முழுதுணர்ந்த பாவலர்கா
ணும்முன்னே பயமொன் றின்றிக்
கொழுத்தசிரிப் புமக்குவாக் கூறுகின்றேன்
பிழைபொறுத்துக் கொள்ளு வீரே.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# உயிரிளங்குமரன் நாடகம்

க-ம் அங்கம் : க-ம் களம் :

இடம் : வெள்ளிமலைச்சாரற்கண் ஓர்நறும்பொழில்.

காலம் : முற்பகல்.

நிகழ்ச்சி : பேரின்பவல்லியும் தோழிமாரும் பொழிலகத்து விளையாடி நிற்கின்றார்கள். உயிரிளங்குமரன் தனியே சோலை புகுகின்றான்.

**பேரின்பவல்லி** :— எனதாருயிர்த் தோழீ !

ஆழி சூழுலகத் தாருயிர்த் தொகுதி
ஊழிதோ றாழி யுலப்பிலா வின்பம்
பெற்றக மகிழச் சிற்றிடைப் பேரருட்
பொற்றொடி யொருபால் புணரவீற் றிருக்கும்
தேவ தேவன் றிருநீல கண்டன்
திருவருள் போலக் குளிர்நிழல் பரப்பி
அடியவர் போலக் கடிமல ரேந்தி
மலர்க்கணீ ருகுத்து நெறிப்பட நிற்கும்
பொலன்றரு நீழலிற் புகுந்து
நலந்தரு மாடல் நாம்தொடங் குதுமே.

தோழீ! எமது ஆய மகளிரெல்லோரும் இப் பூஞ்சோலையிலே புகுந்து தாம் தாம் விரும்பிய ஆடல்களைப் பயிலுமாறு பிரிந்தனர். நாமும் அப் புத்தலர்ப் பொழிற்கிழேகி நித்திலப் பந்தடித்து விளையாடுவோம் வருவாயாக.

தோழி:– எம் பெருமாட்டி! உனது திருவுள்ள மது வாயின் அங்ஙனமே செய்வோம் வருவாயாக.

## பந்தடித்தல்:

வன்ன மயில்கள் நடனமாட வண்டு கீதம் பாடவே
மலர்கள் குறிய முறுவல் புரிய வந்துபந் தடித்துமே
மன்னர் மன்னன் வாழ்க வென்று வந்துபந் தடித்துமே
மதலை மாலை மார்ப னூழி வாழியென் றடித்துமே. (௧)

மன்னு துடிகொள் இடைகள் துவள வனச முகைகள் நெகிழவே
வடிகொள் நீல விழிகள் புரள வந்துபந் தடித்துமே
மன்னர் மன்னன் வாழ்க வென்று வந்துபந் தடித்துமே
மதலை மாலை மார்ப னூழி வாழியென் றடித்துமே. (௨)

எம்பெருமாட்டி நான் ஆயிரங்கையடித்து இளைத் தேன், இனி நீ அடிப்பாயாக.

**பேரின்பவல்லி:**– தோழீ! நான் அப்படியே அடித்து வெல்கின்றேன் பார்.

மன்னி வந்து வந்துபந் துயர்ந் திழிந்து கைப்பட
வலமு மிடமு மாறி யோடி வரிகொள்பந் தடித்துமே
மன்னர் மன்னன் வாழ்க வென்று வந்துபந் தடித்துமே
மதலை மாலை மார்ப னூழி வாழியென் றடித்துமே. (௩)

வன்ன வளைகள் குமுறவழக மவிழ மணிக ளுதிரவே
மதிய நுதலில் வெயர்வை யொழுக வந்துபந் தடித்துமே
மன்னர் மன்னன் வாழ்க வென்று வந்துபந் தடித்துமே
மதலை மாலை மார்ப னூழி வாழியென் றடித்துமே. (ச)

என் அன்புடைப் பாங்கி! நான் இரண்டாயிரங் கை பந்தடித்தேன். அதனால் என் கையுங் காலும் நோகின்றன. தலையுஞ் சுழலாநின்றது. ஆதலாலிச்சந்தனமரநிழற் கீழிருக்கும் பளிங்குப் பாறையின் மேலிருந்து சிறிது இளைப்பாற எண்ணுகின்றேன். வா அங்கே போவோம்.

தோழி:—மடமயிலன்னாய்! ஓடியிளைத்த நாயின் நாவைப் போன்ற உன் சீறடி கொப்புளங் கொள்ளவும் காந்தளஞ் செங்கை கன்றவும் நெடுநேரம் பந்தடித்து விளையாடினை. அதனாற் களை[illegible]னை போலும். வருதி அம்மா நிழற்கீழ்ச் சென்று களையாறுவோம்.

பேரின்பவல்லி:— "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்" என்றபடி இம் மரநிழற் கீழ்வர என்னிளைப்பு ஒழிகின்றது. சிறு தென்றல்வீச வெயர்வை நீங்கி உடம்பு குளிர்கின்றது. தோழீ! உனது இன்னிசைகேட்க விரும்புகின்றேன். நேற்றிரா நீ இயற்றிய ஊஞ்சல் பாக்களுட் சிலவற்றை இப்[illegible]ழுது பாடுதி கேட்போம்.

தோ[illegible]ஙனமே பாடுகின்றேன் கேட்பாயாக.

[பாடுகின்றாள்]

முத்தரும்பி மணிதூக்கிப் பவளங் காய்த்து
முகிறடவு கமுகிரண்டு காலா நாட்டி
கொத்தலர்சந் தனக்கோடு விட்டம் பூட்டிக்
குலவுகொடி யிறுகுதிரள் வடமாக் கூட்டிச்
சுத்தவிளந் தளிர்பெய்து மலர்கள் சூட்டித்
தோழியர்கள் இயற்றுசுடர் ஊஞ்சன் மீதே
புத்தமுத மொத்தவளே யாடீ ரூஞ்சல்
பூங்கொடியே யின்பவல்லி யாடீ ரூஞ்சல். (க)

பழகுமிடை பிங்கலைகள் தூண தாக
பயிலுநடு நாடியொரு விட்ட மாக
ஒழுகுகின்ற வமுதகலை வடம தாக
ஓங்கார வட்டமுயர் பீட மாக
எழுகருவு மிருண்மலமுங் கெடுத்த யோகர்
இரு[illegible]தசையு மருளூஞ்ச லியல்பு போல
அழகொழுகும் முத்துமணி யூஞ்சன் மீதே
அம்மையரே யின்பவல்லி யாடீ ரூஞ்சல். (உ)

பேரின்பவல்லி :— தோழி! இவைக ளழகிய செழுந் தமிழ்ப் பாடல்கள். உனது வயந்த பைரவி இராகமும் மிகவும் இனிமையாகவிருந்தது. அதுகிடக்க; அதோ பார், தளிர்த்துத் தழைத்து அரும்பி மலர்ந்து துவளுமந்த மாதவிக் கொடி, அருகே நின்ற சந்தன மரத்தைப் பற்றித் தழுவி மலர்ந்திருக்கின்றது. என்ன விந்தை!

தோழி :— ஆம், ஆம். அதனைக்கண்டு எ[illegible]ங் கவலுகின்றதே.

**பேரின்பவல்லி :—** தோழி! அதனைப் பார்த்து மகிழ்ச்சி யுறாது கவலுவது எற்றிற்கோ கூறுதி.

**தோழி :—** என்னரும்பெறற் றலைவி! கேட்பாயாக. அம் மாதவிக்கொடி தனக்குத் தழுவுந் துணையாகத் தருக்களினுயர்ந்த சந்தனத்தருவைப் பற்றித் தழுவி நின் றின்புறுகின்றது. அதுபோல நீயு முனக்குத் தழுவுந் துணையாக மக்களு ளுயர்ந்தவனாய் குலனு நலனு மெழிலு மறிவு மொத்தவோர் தலைவனைப் பற்றித் தழுவி இன்னு மின்புறா திருக்கின்றனையே யென்றுதான் கவலுகின்றேன்.

**பேரின்பவல்லி :—** தோழி! உனக்கெப்பொழுதும் இவ் வித பகடிதான்; இருக்கட்டும். இவ்விடத்துக் கருங் குவளை மலர்கள் கண்டனையா?

**தோழி :—** அம்மணீ! அச்சுனையின்கண் நின்னுடைய கண்களின் கவினுக்குத் தோற்று நீரில் புகுந்து ஒருதாளிலே நின்று தவஞ்செய்கின்ற கருங்குவளை மலர்களைக் கண்டேன். யான் சென்று அவை களைக் கொய்துகொண்டு வரும்வரைக்கும் இக் குளிர் நிழலில் வீற்றிருப்பாயாக.

[தோழி மலர் கொய்யப் போகிறாள்]

[உயிரிளங்குமரன் தனியே சோலை புகுகின்றான்]

**உயிரிளங்குமரன் :—**

உலகந் துதிக்க வலனேர்பு திரிதரும்
...ஞ் செல்வன் விரிசுடர்க் கஞ்சி
...டி யிருந்தது திருவளர் பொழிலே!

பசுந்தழை யிடையே பன்மல ரீட்டம்
விசும்பிடைத் தோன்று மிந்திர வில்லோ!
மாட்சிசே ரியற்கை வளர்தரு மற்புதக்
காட்சியென் கண்ணைக் கவரா நின்றது
செம்மல ரிடையே தேனின மிசைத்தல்
அம்மவோ! செவிகட் கமுதினை யூற்றும்
தேக்கமழ் மலரிற் செறிந்திடு விரையென்
மூக்கி னுணர்ச்சி முழுவதுங் கவரும்
சந்தனப் பொதியிற் றமிழுடன் பிறந்த
மந்தமா ருதமும் வந்துவந் தெனது
மெய்யினை வருடி வியர்ப்பினை யொழிக்கும்
செம்பொற் றிரள்போற் கொம்பினிற் றூங்கும்
செழுங்கனி நாவிற் றித்திப் பொழுக்கும்
என்ன பேரழகு! என்ன வின்னிசை!
என்ன நறுமணம்! என்ன குளிர்ச்சி!
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறி யைந்தும்
கொண்டிடு மிப்பொழில் குலமட மகளோ;
அதோபார்
இலகு பல்லவங்கள் அலகினிற் கோதிப்
பூங்குயி லீட்டந் தேங்கிசை பாடக்
காவிக் கருங்கட் டூவியந் தோகைகள்
நாடக மாதரின் ஆடுதல் காணூஉக்
கொன்றைபொன் சொரியுங் காட்சி
என்று மிறும்பூ தீந்திடு மன்றே.

ஆகா! என்ன கட்டழகு!! நறு
மணம்!!! நீலவானிடை இந்திரவில் தான்

றினாற் போலப் பசுந்தழையிடையே பன்மலரீட்டம் விளங்கித் தோன்றுங் காட்சி என் கண்ணைக் கவராநின்றது. அவற்றினின்றெழும் நறுமணம் என் மூக்கைக் கவராநின்றது. அங்கே தேனுண்ணும் வண்டுகளி னின்னிசை என் செவியைக் கவராநின்றது. சந்தனப் பொதியிற் றமிழுடன் பிறந்த மந்தமாருதமும் வந்து வந்தென் மெய்யைக் குளிர்வியா நின்றது. கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புல நுகர்ச்சியு மிப் பொழிலகத் துண்மையின் இஃதோர் குலமட மகளை நிகரா நின்றது. அதோ அஃதென்னை?

மாதவி நிழற்கீழ் மாணிக்கப் பாறையில்
கண்ணிணை மயக்கும் மின்னற் கொடியோ!

இல்லை! இல்லை!! அஃதோர் பெண்! பெண்!!

[பாடுகின்றான்]

**விருத்தம்**

திருவளர்செந் தாமரைமேற் குவளை மேவச்
சேர்ந்தகுமிழ் நடுவரும்பச் சீரார் துப்பின்
உருவளரும் பவளவித ழூடே சோதி
ஒண்டரள நிரையொளிகொள் நிலவு கால
மருவளரும் பூகத்தின் கீழே காயா
வ[illegible]வேய்கொண் டிரண்டுமணித் தாளிற் றோன்றும்
அரு[illegible]கொடியாரோ பொன்னோ மின்னோ
[illegible]யரோ மடமகளோ அறிகி லேனே,

காரோ குழல்பிறையோ நுதல்கனியோ துவரிதழ்வாய்
கூரோ விழிவிடமோ விடைகொடியோ நடைபிடியோ
நீரோ நெடுவாளோ மலர்தாளோ வுறைதானம்
யாரோ விவராரோ வுரையாரோ சிரியாரோ.

இவள் யாரோ? திருமகளோ? கலைமகளோ? பொன்னுலக மடமகளோ? மானுட மாதரோ? ஆம். ஆம். என்னை?

திருநுதல் வேர்வரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடி தோயும்—வரிசேர்ந்
திணங்கும் விழிக ளிமைக்கு மிவளோர்
அணங்கல்லள் நெஞ்சே யறி.

அப் பெண்ணணங்கின் பிறைபோலுந் திருநுதலிலே பெரிதுஞ் சிறிதுமாகிய முத்துமணிகளை நிரல்படக் கோத்தாற் போல வியர்வை அரும்பா நின்றது. ஆகத்தணிந்த பூமாலைகள் வாடாநின்றன. சிவந்த மெல்லிய சீறடிகள் பூமியிலே தோயாநின்றன. காட்சிப் பொருள்களை அருகு வரவழைப்பன போலக் கண்களு மிமையா நின்றன. ஆதலின்; இவள் தெய்வப் பெண்ணல்லள். மானிட மாதரே. அவள் என்னைக் காணும்படி வெள்ளிடையிற் சென்று நிற்பேன்.

[அங்ஙனம் வந்து நிற்கின்றான்]

**பேரின்பவல்லி:—** அதோ கார்வர வருப்பிய கடிமலர்க் கொன்றைக் குளிர்நிழற் கீழோர் [illegible]மையிற் போர்வைப் பொன்மான் உலாவு[illegible]ஆ!

அதன் நோக்கமென்னே!! காதல ருள்ளத்தைக் கவர்ந்துகொள்ளும் காரிகையாரின் கள்ள நோக்க மிதன் நோக்கத்தை யொக்கும்போலும். ஓ! அதற்கருகே கோலக் கலாபம் விரித்து நீல மயி லொன் றாடுகின்றது. ஆகா! என்னவழகு!! என்ன ஆட்டம்!!! அடடா! இங்கே கண்ணைப் பொறித் தட்ட மின்னி ஒரொளித்திரள் தோன்றுகின் றதே. இஃதென்னை? விண்ணுறியங்கும் விழுச் சுடர்ப் பரிதி மண்மேலிழிந்ததோ? இஃதோ ராடவனுருவம். இவர் யார்? மாரனோ? இல்லை, இல்லை. ஏன்? உருவமிருக்கின்றது. குமர வேளோ? அவருமன்று. என்னை? ஆறுமுக மில்லை. அயில் நெடுவேலில்லை. அலங்கார மயி லில்லை. இவர் பூமியிலுள்ள புருடனே. இவ ரருணோக்கு என்னுள்ளத்தைக் கொள்ளைகொண் டதே.

**உயிரிளங்குமரன் :—** ஆகா! வீரன்கையில், வேல்போல என் நெஞ்சிற் பாய்ந்து உயிரையு முருக்கும் கண் ணின் நோக்கமென்னே! காதற் குறிப்புண்டு கொல்! ஆம், ஆம், அறிந்தேன்.

"யான்நோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்."

[தோழிமார் வருகிறார்கள்]

**தோ**[illegible]ன்போல் நோக்கும் மதர்விழி மாதராய்! [illegible]ாய்துவந்த நாண்மலர்க் குவளைகளிவை.

ஏற்றருள்வாயாக. பூங்கொடி போல்வாய்! யாங்கள் சோலை புகுந்து நெடுநேரமாகின்றது. இனி வீட்டுக்குப் போவோம் வருவாயாக.

**பேரின்பவல்லி :—** வயந்தமாலாய்! அங்ஙனமே வீட்டுக்குப் போவோம் வா.

[பேரின்பவல்லியுந் தோழிமாரும் போகின்றார்கள். பேரின்பவல்லி உயிரிளங்குமரனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போகின்றாள்.]

**உயிரிளங்குமரன் :—**

"வார்குழல் துகிலொடு சோர மாசிலாப்
பிறைநிகர் நறுநுதல் புரள மறுவறு
பொருசிலைப் புருவம் ஒருவழி நெகிழ்த்துச்
செவ்வரி பரந்த மைவழி நெடுவிழி
[illegible]ழவ லன்பொடு மென்முகம் நோக்கி
[illegible]முதமூற் றிருக்கும் குமுதவாய் மலர்ந்து
மந்த காசந் தந்தவண் நின்ற"
நிலைமையென் நெஞ்சினை நீங்கா தன்றே.

ஆகா! மாணிக்கச் செப்புத் திறந்து தாளநிரை காட்டினாற்போலப் பவளவிதழ் மலர்ந்து முறுவல் நிரை காட்டி அவள் செய்த சிறுநகை என் நெஞ்சைவிட்டு நீங்கிற்றில்லை. ஐயையோ! தோழிமார் சிறிது தாழ்த்து வந்தாரில்லையே. அவள் போகும்போதும் திரும்பித் திரும்பிக் கடைக் கண்ணால் என்னையே பார்த்துப் [illegible]த்துப் போகின்றாள். ஆதலின், காதல் [illegible] உண்

டென்று துணிகின்றேன். அதோ என் பாங்கனும் என்னைத் தேடி வருகின்றான். நாளைக்கு மிந்நறும் பொழிலகத்து வருவோம். வந்தா லவளைக் காணுதல் கூடும். இப்பொழுது போவோம்.

[உயிரிளங்குமரன் போகின்றான்]

" அண்ணலும் நோக்கினா னவளும் நோக்கினாள்
உண்ணெகிழ் காதலின் உள்ள மொன்றினார்
கண்ணொடு கண்ணிணை கலந்து பேசிடின்
பண்ணுறு மொழியினாற் பயனின் றென்பரே."

(க-ம் அங்கம், க-ம் களம் முற்றிற்று.)

**க - ம் அங்கம் :** **உ - ம் களம் :**

**இடம் :** நீலகண்டவேந்தனரண்மனை. அரச[illegible]தனியே யிருக்கின்றான். வாயில்காவல[illegible] வருகின்றான்.

**காலம் :** முற்பகல்.

**நிகழ்ச்சி :** சிவகாமித்தாயார் உயிரிளங்குமரனுக்குற்ற மயக்கத்தை நீலகண்டவேந்தனுக் கறிவித்தல். அவரோர் மந்திரக்கவசத்தைக் கொடுத்து மைந்தனுக்கணியச்செய்து அதனால் மயக்கம் நீங்கிய அவனைக் காட்டகத்தே வேட்டைக்குப் போகுமாறு பணித்தல்.

**காவ**[illegible]ி :— மன்னவர் மன்ன ! வாழி நீடூழி உன்
[illegible]டி தலைமிசைப் புனைந்து போற்றினேன்.

**நீலகண்டன் :—** நந்தி! நீ இங்கு வந்த காரண மென்னை?

**நந்தி :—** எம்பெருமானே! உலக மாதாவாகிய கோப் பெருந் தேவியார் தேவரீரைக் காணவேண்டி மாப் பெருங் கோயிற் கடைத் தலையில் வந்து நிற்கின் றார். திருவுளம் யாதோ வருளிச் செய்வீராக.

**நீலகண்டன் :—** நந்தி! அப்படியா மிகவும் நன்று. தேவி யாரை இங்கு அழைத்து வருவாயாக.

[நந்தி செல்கின்றான்]

**நந்தி :—** எம் பெருமாட்டி! அரசர்பெருமான் உள்ளே புகுதுகவென் றருளினன். இங்ஙன மெழுந்தருள்க. இப்படி வருக. இப்படி வருக.

**சிவகாமி[illegible] தாயார் :—** (வந்து மன்னனைக் கும்பிட்டு நி[illegible]

கண்ணினுண் மணியே! கருத்தினுட் கருத்தே!
என்னுயிர்க் குயிரே! புண்ணிய மூர்த்தி!
தாமரை பழித்தநின் காமரு சேவடி
ஊழிதோ[illegible]ழி யோங்கி
ஆழுரு முலகத் தமர்ந்துவா ழியரோ.

எம்பெருமானே நின்றிரு வடிகளை வணங்கு கின்றேன்.

**நீலகண்டன் :—** என்னுருயிர்க் காதலி! நின் [illegible]ணக்கம் அமையும், அமையும். இதோ இ[illegible] தவி சின்மீ திருப்பாயாக. உலகத்திலுள்ள[illegible]யிர்த்

தொகுதிகள் ஆணும் பெண்ணுமாக அன்புடன் கூடி யமர்ந்து வாழு மில்வாழ்க்கையினும் விழு மிய நல்வாழ்க்கை யாண்டுமில்லை. அந் நல்வாழ்க் கைக்குக் கற்புடை மனைவியே அற்புதத் துணைவி. உன்றுணைகொண்டே யான் "காத்தும் படைத் துங் கரந்தும் விளையாடி" வாராநின்றேன். அது நிற்க, வேய்புரை மென்றோள் ஆய்தொடிப் பாவாய்! முல்லையரும்பிப் பவளம் பூத்த முழுமதி போல ஒளி விளங்கி நிலவு கான்று அழுதொழுக் கும் நின்றிரு முகமண்டிலம் இன்று ஒளி சுருங்கி வாடிய தென்னே? முன்னொரு நாளுமில்லா மனக் கோட்டத்துடன் இன்றிவண் போந்த தென் கரு தியோ? குமுதவாய் மலர்ந்து கூறுதி பூவாய்!

**சிவகாமித் தாயார் :–** எம்பெருமானே! அ... ா இறப் பவும் புனைந்து கூறுதல்வேண்டாம். தேவரீர் திருவடித் தொழும்பினலன்றோ யான் எல்லா வல்லமையுமடைந்து விளங்கா நின்றேன். அது கிடக்க, எங்ஙனுஞ் செறிந்து எல்லா மறியும் எம் பெருமானுக்கு அடியாள் கூறக்கிடப்பது மொன் றுண்டோ? ஆயினும் எம்பெருமான் கூறுக வெனப் பணித்தருளுதலிற் கூறுநின்றேன்.

எம்பெருமான் கேட்டருள்க வெங்களுயிர்க் குயிராம்
அன்...டைய மைந்த னவனியெலாம்—முன்பே
உ... போய்ப்போ யுவந்துவிளை யாடி
... ாருநாள் வனத்தில்—பெருமானும்

வல்லியங் கோளரி மாதங்கங் கேழலொடு
பல்விருக வேட்டை பயின்றுடி—ஒல்லையினில்
மீண்டான் மயங்கி விழுந்தா னறிவெல்லாம்
மாண்டா னமையு மறந்திட்டான்—வேண்டியொன்றும்
உண்ணு னுறங்கா னுரையா னசையாடான்
எண்ணுன் மறவா னிருக்கின்ருன்—புண்ணியனே
கல்லுப்போல் வாளா கிடத்தற்குக் காரணத்தைச்
சொல்லத் தெரியேன் றுயர்கின்றேன்—எல்லா
வுயிர்க்குமுயி ராய்நின்ற வுத்தமனே மைந்தன்
மயக்க மறுக்கு மருந்து—தியக்கமற
ஈவாய் என்னெஞ்ச மிடிக்க வுடல்நடுங்க
ஆவி பதறுகின்ற தையையோ—பாவியேன்
பெற்ற வயிறு பெரிதுங் கொதிக்கின்ற
துற்[illegible]த்தி னுதவியே—மற்றுமெலாஞ்
செய்[illegible]கடவ தெரிந்துசெய வேண்டுகின்றேன்
ஐயா கருணு கரா !

எங்கள் கண்மணிபோன்ற புண்ணிய மைந்தன் உயிரிளங் குமரன் உலக மெங்கணு முருமாறிப் போக்குவரவு புரிந்து வருகின்ருனை இளைப்பொழிக்கும் நிமித்தமாகச் சிறிது நாட்களுக்கு ஓரிடத்தில் தங்கியிருக்கும்படி நிறுத்தி வைத்ததைத் திருவுள்ள மறியுமன்றே, அவனுக் கது நாட் டொட்டோர் மயக்கந் தோன்றியதனு லுண்கின்ருனுமில்லை ; உரைக்கின்ருனுமில்[illegible] உலாவுகின்ருனுமில்லை ; கல்லுப்போல [illegible]க்கின்ருன். அதனைக் காணு வென்னுள்[illegible]கின்

றது. உடம்பு பதறுகின்றது. பெற்ற வயிறு கொதிக்கின்றது. அரசர் பெருமானே! இதற்குச் செய்வகை யாதோ வருளிச் செய்ய வேண்டுகின்றேன்.

**நீலகண்டன் :–** என்னுயிரிடை யெழுதிய ஓவியக் கொழுந்தே! நீ பெருங் கருணைப் பிராட்டியென்பதை யறிகின்றேன். இதற்காகவா இவ்வளவு முகவாட்டம்? கவலை யொழிக. தந்தையினும் பார்க்கப் பெற்ற தாய்க்கே மைந்தன்மாட் டன்பு கூரு மென்பது நின்வயிற் புலனுகின்றது ஒளவைக் கிழவியும் "அன்னையும் பிதாவு" மென வுன்னையே முன்னுரைத்தாள். அது நிற்க, இந்தா இஃதோர் மந்திரக் கவசம். இதனை நம் மைந்தனுக் கணியின் மருட்சி நீங்கும். தெரு[illegible]ண்டாகும். இதனையிட்டு அவனை யிங்கழை[illegible] வருதி.

[கஞ்சுகச் சட்டையையணிய மருட்சி நீங்கிய
உயிரிளங்குமரன் தாயாரொடு வருகின்றான்]

**உயிரிளங் குமரன் :–** என் னரும்பெறற் றந்தாய்! உன தாதியும் நடுவும் அந்தமுமில்லாச் சோதி மெஞ் ஞானத் துணையடி போற்றி; அடியேனை ஈண்டு அழைப்பித்த காரணம் யாதோ திருவுளம்பற்றி யருள்க.

**நீலக[illegible] :–** என் னன்புடைக் குமர! நீ வீங்கு மியாங்கணும் புகழ வாழி நீடூழி வாழி!

மைந்த! நினக்கோர் மயக்கமுற்றது கண்டு நின் அன்னை சாலவும் வருந்தா நின்ருள். உலகடங்க லும் உருமாறிப் போக்குவரவு செய்யாதிருத்தலி ஞல் சோம்ப லுற்றனைபோலும். இதோ உனது தோழனுகிய அறிவன் வெளிப்பட்டு நிற்கின்ருன். நீ இவனுடன் கூடிக் காட்டினிடையே வேட்டம் போய் விளையாடிவருதல் வேண்டும். அவ்விடத்து ஆறலைத்துச் சூறைகொள்ளும் கள்வர்க் கரசனுகிய இருண்மலவேந்த னென்பா னொருவனு முளன். அவன் பெருநிலத்துக் கவர்வழி புகாதே. புகின் உனது தோழன் மறைவான். மறையின் உனக்கு அப்பொழுது நிகழ்வதோர் துன்ப முண்டு. உன்னை நீ அறியும் வரையும் வேட்டம் புகுந்து விளையாடி அறிந்தபின் என்பால் வருதி. [illegible]ல் நின் திருமணமும் நிகழும். போய் வருவா ய்.

**உயிரிளங்குமரன் :—** ஐயனே! "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" அங்ஙனமே சென்று வருகின்றேன்.

(தாயைப் பார்த்து)

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்த தாயாரே—எந்தையார்
ஆணைப் படிவேட்டை யாடித் திரும்பிவர
மாணிழா யீவாய் வரம்.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெ[illegible]நாந்து பெற்ற என் னன்னுய்! எண்ணுக்க[illegible]ழை

களை யியற்றினும் அவைகளை யுடனே மறந்து கண்ணை இமை காப்பதுபோற் காத்துவந்த என் தாயே! உள் ளகங்கொள்ளா உழுவலன்பினால் உதிரம் அமுதாக்கிக் கொள்ளும்படி குறிப்பறிந் தீந்தவென் மாதாவே! எந்தையா ராணைப்படி யான் காட்டகம் புகுந்து வேட்டையாடி விரைந்து திரும்பிவர விடை தந்தருளுவாய்.

[விழுந்து வணங்குகிறான்]

**சிவகாமித்தாயார் :—** (மைந்தனைத் தூக்கி அணைத்துக் கொண்டு)

என் கண்மணிபோன்ற மைந்தா! ஆங்கார மான சிங்கங்களும் அடங்காக் கோபப் புலிகளும் ஆசைப் பெரும் பேய்களும் வாழ்கி[illegible] இந்த மோசமான காட்டிலே நீ சுகமாய்ப் பே[illegible]ருவா யாக. மைந்த! அக்காட்டிலே நஞ்சை யுமிழும் பேழ்வாயினை யுடைய ஐஞ்சு தலை மாநாகமு முண்டு. அதனைக் கண்டு அஞ்சாதே. மேலும் வஞ்சனை செய்து மயக்குகின்ற மோகவல்லி யென் னும் பெண்ணணங்கு மாண் டுண்டென்று கூறு வர். அவளைக் கண்டு நிலை குலையாதே. உன் நண்பனாகிய அறிவனோடு கூடி வேட்டைபோய் விளையாடி விரைவில் வருவாயாக. என் கண் மணியே! உன்னை விட்டுப் பிரிய என் மனந் [illegible]ன்றதில்லை.

[சிவகாமித்தாயார் சோருகின்றாள்]

**உயிரிளங்குமரன் :—** அன்னாய்! நீ மனக்கவலை கொள்ளாதே. நான் வேட்டையாடி விரைவில் வந்துவிடுவேன்.

[மீட்டும் வணங்கிச் செல்கின்றான்]

**உயிரிளங்குமரன் :—** (தனியே) நெருநலை நாளந் நறும்பொழிலகத்துக் கண்ட பெண்ணணங்கை இன்றுஞ் சென்று கண்டு காதல் தீருவேனென்றெண்ணியிருந்தேனை, எனது தந்தையார் காட்டகத்து வேட்டைக்குப் போகப் பணித்தார். நானொன்று நினைக்கத் தெய்வமொன் றெண்ணியதே. என் செய்யலாம். அச்சிற்றிடைச் சிறுமான் நோக்கி என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்டனள். நந்தவனத்திலே அவளைக் காணுமாறு கூட்டுவித்த தெய்[illegible]வளை நான் மணந்துகொள்ளுமாறுங் கூட்டு[illegible]தான். ஆயினும் முயற்சியும் வேண்டும். முயற்சியின்றி யொன்றும் நிகழாது. "தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும்" என்றார் பெருநாவலர். எல்லாம் ஊழே செய்யுமென் றெண்ணி முயற்சியைக் கைவிட்டிருப்பார் சோம்பர். யாம் இப்பொழுது ஒல்லும் வகையாற் றொழில்புரிந்து அப்பெண்ணமுதைப் புல்ல முயல்வோ மென்றால் என் தந்தையார் பணி குறுக்கே கிடக்கின்றது. என் னன்புடைத் தந்தையா ரேவிய [illegible] செய்வதோ? அல்லது காதல் வயப்பட்[illegible]கையை யடைய முயல்வதோ? யாது இப்[illegible]செயற்

பாலது. தந்தையாராணையே செயற்பாலது. என்னை? தந்தை பணி மேற்கொண்டன்றே மலிநீ ரயோத்தி வளநாடு கைவிட்டுப் பாற்கடற் பிறவா வமுதனைய சீதை யென்னும் பசுங்கொடியோடு ஈரேழாண்டு காட்டிடைப்போய்க் கலக்கமடைந்தும் தந்தைசொற் காத்தா னிராமபிரான். மணவினையும் அரசபோகமும் மற்றுள்ள வின்பமும் ஒருங்கே துறந்து விரதங்காத்துத் தந்தைக்கு மணமுடிப்பித் தான் வீடுமன். தனது இளமைப் பருவத்தைக் கொடுத்துத் தந்தையின் நரை திரை மூப்பைத் தானேற்று அவற்கு மகிழ்ச்சியீந்தான் பூரு. ஆதலின் தந்தை பணி செய்வதே மைந்தன் கடமை. அதனையே இப்பொழுது செய்வேம். பின்பு ஆவது ஆகட்டும்.

சிந்தா மணிதன்னைத் தெள்ளமு தத்தையென் சிந்[illegible]ாளிர்
நந்தா விளக்கை யுயிரோ வியத்தை நவமணி[illegible]
அந்தா மரையுறை யன்னத்தை யான்மறந் தாற்றுவனோ
வந்தே முயன்றிடு வேன்வேட்டை முற்றி மணவினையே.

கானிடை வேட்டை போன காதலன் வருத்தம் நோக்கித்
தானினைந் திரங்கி நேயத் தலைவனொ டுரைத்து வாங்கிப்
பூநனை குழலாள் பெற்ற புதல்வனுக் காக்கஞ் சூழ்ந்தாள்
பானினைந் தூட்டுந் தாயிற் பரிவுடை யாருமுண் டோ.

(க-ம் அங்கம், உ-ம் களம் முற்றிற்று.)

**க-ம் அங்கம் :** **௩-ம் களம் :**

**இடம் :** மாயாபுரியில் இருண்மலவேந்தனின் மந்திராலோசனைச் சபை.

**காலம் :** இரவு.

**நிகழ்ச்சி :** கட்டியங்காரன் சபையடக்கஞ்செய்ய அரசன் சபைக்கு வருகின்றான். மந்திரிகளோடு சூழ்ச்சி செய்துகொண் டிருக்கும்போது ஒற்றன் வருகின்றான்.

**கட்டியகாரன் :—** யாவரோ? பூசலிட்டிரைபவர் யாவரோ? அமைமின்! அமைமின்!! அகலுமின் றூர. அஞ்ஞானக்கோலேந்தி அகங்காரத்திகிரியுருட்டிக் கடுங்கலிமிடிதழைய நெடுங்கடற் புவியனைத்தும் கரு[illegible]கொற்றக்குடைக்கீழ் ஒரு தனியாளு மிருண்ம[illegible]தன் சபைக் கெழுந்தருளாநின்றான். எச்சரிக்கை! எச்சரிக்கை!!!

**இருண்மலவேந்தன் :—**

அன்புடை மனத்தா லறிவுநூல் கொளுத்தி
இன்பினுந் துன்பினும் என்னொடு பயிலும்
தந்திர மிகுந்த மந்திரக் கிழவர்காள்!!

நங்கீழ்வாழும் குறுநில வேந்தரெல்லாம் அடியுறையோடு இடுதிறை கொணர்ந்தளித்தார்களா?

**க-ம் மந்திரி :—** மன்னவர் மன்ன! நின்னாணை நீடூழி வாழ்வதாக. திறைதரவேண்டிய குறு[illegible]ன்னரெல்லாருந் திறைகொணர்ந்திட்டனர்[illegible]

**இருண்மலவேந்தன் :**—யார் யாரீந்தனர். அவர் பெயர் கூறுமின் !

**க-ம் மந்திரி :**—

வஞ்சக ராசையர் மோகர் குரோதனர்
வாதினர் சூதினரே
எஞ்சலில் கோப ருலோபர் பொறாமைய
ரிச்சையர் கொச்சையரே
குண்டர் செருக்க வருக்கர் பெருக்கமில்
கோளகர் கீழகரே
வண்ட ரிரண்டகர் மிண்டகர் தண்டர்
மயக்கர் கயக்கர்களே.

இவர்களெல்லோருந் திறைகொணர்ந் தளித்தனர்.

**இருண்மலவேந்தன் :**— அப்படியா நன்று, [illegible] று. மந்திரிகாள்! திறைகொடா வேந்தனுமுண்டோ செப்புதிர்.

**உ-ம் மந்திரி :**— அரசரேறே! அறைகுவன் கேட்டி! வெள்ளிவேதண்டத்துக் கொள்ளிக்கண்ணன்; ஆலமுண்டிருண்ட நீலகண்ட னொருவனே அடியுறையோடு இடுதிறையீயா நெடுமுடி மன்னவன்.

**இருண்மலவேந்தன் :**—

[illegible]று ? ஆகா ! அன்றுதொட் டின்று
[illegible]ங் குலப்பகை யாகி நம்மைக்
[illegible]ரு கின்றான் கடியவன் கொடியவன்

திரிபுரத் தோழரைச் சிரிப்பினி லெரித்தான்
ஒருதுணைக் காலனை யுதைத்துயி ரொழித்தான்
பழிப்பில் காமனை விழித்துட லெரித்தான்
மிடல்கெழு முயலனை மிதித்துடல் நெளித்தான்.

இங்ஙனமே அவன் நம்மவர்க்குச் செய்துவந்த தீமைகளுக்கோ அளவில்லை. அவன் வலிமையை யடக்க எம்மாலியலாது போகின்றது. அதற்கு என்னசெய்யலாம் மந்திரிமார்களே.

**௩-ம் மந்திரி :—** அரசே! சினங்கொள்ளல் வேண்டாம். அந்த நீலகண்டனது ஆணையையும் அருளையும் மாற்றி நமது ஆணையையும் அரசையும் நாட்டும் படி இடங்கடோறும் நமது வீரர்களை யனுப்பி யிருக்கின்றோம். அவர்கள் எங்குஞ் சென்று [illegible]ல்புரிந்து வருகின்றார்கள். பெரும்பாலுங் [illegible]ல் குருமடம் நீதிமன்றமாகிய அவனுணை தங்குமிடங்களில் அவ்வீரர்கள் சென்று அவன் குடிகளை யணுப்பி எங்கள்பாற் படுத்தி வருகின் றார்கள்.

**இருண்மலவேந்தன் :—** வீரர்கள் யாவர்? செய்வன யாவை?

**க-ம் மந்திரி :—** கோபன் கொலைஞன் முதலாகிய யானை மறவரும், காமன் குரோதன் முதலாகிய இவுளி வீரரும், ஆசையன் கலியன் முதலாகிய [illegible]ல் இளை ஞரும், உலகத்திலே சென்றிருக்கின்[illegible] அவர் கள் செய்யுந் தொழில்களாவன [illegible]ஒடு

புகுந்த கொலைஞனென்போன் ஊரூர் தோறுஞ் சென்று ஆங்காங்கு பெருங் கொலைகள் புரிந்து வருதலோடு நீலகண்ட னருள் தங்குமிடமாகிய கோயிலிற் புகுந்து,

அருணெறி யகற்றி மருணெறி பயிற்றி
ஆயிர மாயிர மாடு கோழிகளைக்
கதறக் கதறச் சிதறவெட் டுவித்துக்
கொலைத்தொழில் புரிவியா நிற்கக் கூடிய
புலைய னவற்றைப் புசிப்பிக் கின்றனன்.

**உ-ம் மந்திரி :—**

இன்னுங் கேட்டி மன்னவர் பெருமான் !
கடற்புவி யனைத்துங் கலக்கு மாறு
கருப்பு வில்லுங் கணையுங் கொண்டு
மக்களுந் தேவரும் மாக்களும் பறவைடு
மிக்கவூர் வனவுடன் விரிநீர் வாழ்நவும்
தாவரந் தானுந் தன்னடி வணங்க
மேவரு செருத்தொழில் விளைத்துக் கொண்டே
குருமடம் புகுந்த வுருவிலாக் காமன்
கல்விச் சாலையை யொற்றழிப் பித்துத்
தாய்மொழி மடவார் வாய்மொழி யாக்கிச்
சமயமும் லீலா சமயமாய்ச் செய்து
நிகழில் தீக்கை நிருவாண மாக்கிச்
னங்கள் தந்நிதா னம்விடக்
வுங் குழியிலும் விழுத்திவரு கின்றான்.

**௩-ம் மந்திரி :—**

இன்னுங் கேட்டருள் மன்னவர் பெருந்தகாய்!
கைக்கூலி யென்னுங் காதல னுடனே
ஆசையன் நீதி யருஞ்சபை புகுந்து
தற்கொலை தன்னைப் பொய்க்கொலை யாக்கிப்
பொய்க்கொலை தன்னை மெய்க்கொலை யாக்கிக்
கொலைபுரிந் தோனைச் சிறைபுகா தடுத்துக்
கொலைசெயா தவனைச் சிறைபுக விடுத்து
இறந்தோர் தம்மையும் எழுத்தெழுது வித்து
நீதியை யழித்து வருகின்றான்.

இன்னும்,

புதியவ னென்போன் பூமியிற் புகுந்து
கோலவா டவர்தங் குடுமியை யரிந்தும்
[illegible] ரய முக்கால் வீசங் குறைத்து
ம[illegible] ப ருடையூண் தம்முடை யூணுப்
மன்னிய, பலவித மாறுதல் புரிந்து வருகின்றான்.

இன்னும், பொய்யன் கோளன் முதலாகிய ஏனை வீரர்களும் ஏற்றவிடங்களிற் புகுந்து தத்தந் தொழில்களைச் சோராது புரிந்து வருகின்றனர்.

[வாயில் காவலன் வருகின்றான்]

**வாயில்காப்போன் :—** வேந்தர் பெருமானே! நின் கொற்றம் நீடூழிவாழ்வதாக! நமது ஒற்றரு ளொருவன் வந்து தன் வரவைத் தேவரீருக்[illegible]க்கும் படி சொல்லி வாயிற் கடைத்தலையி[illegible]றான்.

**இருண்மலவேந்தன் :—** காவலோய்! அவனை உள்ளே வர விடு.

**ஒற்றன் :—**

மங்களம் மங்களம் மன்னவ! நினது
செங்கமலப்பொற் சேவடி பணிந்தேன்.

**இருண்மலவேந்தன் :—** ஒற்றா!

களைத்தனை வருதி காரிய மென்னை
ஒழித்திடா தெல்லா மோதுதி விரைந்தே.

**ஒற்றன் :—** எம்பெருமான்! எங்கள் குலப்பகைவனாகிய நீலகண்டன் மகன் உயிரிளங்குமரன் நமது மாயாபுரிக் கருகிலுள்ள மத்திய புவனக் காட்டிலே வேட்டை போய் விளையாடி நிற்கின்றான் [illegible]வனை அறிந்து செய்க.

**இருண்மலவேந்தன் :—** அப்படியா? நல்லது, நல்லது. மந்திரீ! இவனுக்குத் தகுந்த பரிசு கொடுத்தனுப்புவாயாக.

[ஒற்றன் போனபின்]

மந்திரிமார்களே! ஒற்றன் கூறியது கேட்டீரல்லீரோ? அதற்கென்ன செய்யலாம் ஆராய்ந்து கூறுதிர்.

**க-ம் மந்திரி :—** அரசே, நமது படைவீரரொடு புகுந்து அவனைக் கொலைசெய்தலே நல்லது.

**உ-ம் மந்திரி :—** நிருபரேறே! அது இப்பொழுது முடிவதன்று. காலமு மிடனுமறிந்து தொழில்புரிதல் வேண்டும். இப்பொழுது அவனை நமது அறுவகைப் படையொடு புகுந்து எதிர்ப்பினுங் கொல்லுதல் முடியாது. ஏனெனின், அவன் இறவா வரம் பெற்றவன். ஆதலால் அவனை யணுப்பிப் பிடித்துச் சிறையிடுதலே மிகவும் நன்று.

**ங-ம் மந்திரி :—** மன்னவ! உயிரிளங்குமரன் மத்திய புவனக்காட்டில் வேட்டையாடுகின்றான். நமதுவீரர்கள் அக்காட்டிற் புகுந்து அவனைப் பிடிக்க முடியாது. "தன்னிடத்து முயல் தந்தியின் வலிது" என்பது போல உயிரிளங்குமரன் அவ்விடத்து வலியனாய் [illegible]கின்றான். அவன் பேரின்பவல்லி யென்னும் [illegible]ழகிய மடவரல்மீது கெழுமிய வேட்கையுற்றிருக்கின்றானென முந்தைநாள் வந்த சாரணன் கூறக்கேட்டாமன்றே! பேரின்பவல்லியைப்போல் நமது மாயை மடமகள் சிற்றின்பவல்லி வேடம் பூண்டுகொண்டு, அக்காட்டின்கண் போய், உயிரிளங்குமரனைமயக்கி வழிபிழைப்பித்து இழுத்து, எங்கள் மாயாபுரிக்குக் கொண்டுவருதல்வேண்டும். அதன்பின் அறவன் மறவன் என்னு மிரண்டு வீரராலும் அவனைப் பிடிப்பித்துச் சிறையிடலாம். இப்போது சிற்றின்பவல்லியை யழைப்பித்து அவளுக்குக் காரியங்களைக் கூறி வீரரையு முடன் அனுப்புவதே நல்லதென்று நினைக்கின்றேன்.

**இருண்மலவேந்தன் :—** மந்திரிகாள்! உங்களனைவர்க்கு மிஃதுடம்பாடாயின் மாயை மகள் சிற்றின்பவல்லியை யிப்பொழுதே யழைப்பிப்பீராக.

**மந்திரிமார் :—** காவலோயே! நீ விரைந்து சென்று மாயை மகள் சிற்றின்பவல்லியை அரசன் காண விழைகின்றானென்பதை அவளுக்கு அறிவித்து அவளை யிங்கே யழைத்துவா.

**காவலன் :—** அப்படியே செய்கின்றேனையா!

[சிற்றின்பவல்லி வருகின்றாள்]

**சிற்றின்பவல்லி :—**

வந்தனம் வந்தனம் மறவர் தம்பிரான்,
வாழ்கநின் றாயுள்; வாழ்கநின் வலிமை;
வாழ்கநின் றாணை; வாழ்கநின் குடிகள்;
ஒலிகடற் புவியி லொப்புவே றில்லா
வலிகெழு வேந்தே! வாழ்கநின் செங்கோல்.

ஒன்றுக்கும் பற்றாத சிறியேனை ஈண்டு அழைப்பித்த காரணம் யாதோ? திருவுளம்பற்றி யருள்க.

**இருண்மலவேந்தன் :—**

அன்னையில் லாதன் றென்னொடு பிறந்த
மாயையாந் தங்கை மணிவயிற் றுதித்தோய்!
பொற்றொடிப் பூவாய்! நற்றவக் கொழுந்தே!
கிஞ்சுகக் கனிவாய் அஞ்சுகப் பாவாய்!!

நின்னாலென் செங்கோ லோங்கவேண்டியிருக்கின்றது. தொன்றுதொட்டுள்ள வென் பழம்பகை நீங்கவேண்டியிருக்கின்றது. மருகி! எங்கள் பகைவனாகிய நீலகண்ட வேந்தன் மகன் உயிரிளங்குமரன் நமது மாயாபுரிக் கணிமையிலுள்ள காட்டிலே வேட்டையாடி நிற்கின்றானாம். அவனைப் பிடிக்க வேண்டும். அவன் பேரின்பவல்லி யென்னும் பேதையொருத்தியை விரும்பியிருக்கின்றான். நீ அவள்போல வேடம்பூண்டு அங்கே போய் அவனை மயக்கி மாயாபுரிக்கு அழைத்துக் கொண்டுவருதல் வேண்டும். அங்ஙனம் புரிய நின்னாலாகுமா?

**சிற்றின்பவல்லி:**— மாமா! என்னாலாகாத காரியமும் ஒன்றுண்டோ?

[பாடுகிறாள்]

௧. [illegible]மி செந்தா மரைத்தவிசி லுறைகின்ற
    மங்கைதனை மார்பில்வைத்தும்
மணமகளை மணிமன்றல் செய்துமென் மாயையில்
    மயங்கியந் நெடுமாலவன்
ஓசைமலி யீமத்தி லாசைநலி யப்புராண்
    டுன்மத்த னானதிலையோ
உலகுபுரி கடவுள்முன் தான்படைத் திட்டவோர்
    ஒண்டொடியை நனிவிரும்பி
ஆசைமுக னானதிலை யோஇந்தி ரன்கண்க
    ளாயிரம் பெற்றதிலையோ
ஐயையோ காசிபன் மாயைதனை நச்சிமு
    னருந்தவ மிழந்ததிலையோ

மாசிலுல கத்திலே யென்னுடைய மாயையும்
வல்லமையும் யாவரறிவார்
மன்னவன் குமரனை யிதோபிடித் துக்கட்டி
வருகுவன் விடையீவையே.

அண்ணலே! தாங்க ளெண்ணியவண்ணமே உயிரிளங்குமரனை யகப்படுத்தி விரைவி லிவண் வருவேன். என்னுடன் அறவன், மறவன் என்னு மிருவீரரையும் அனுப்புவீராக.

**இருண்மலவேந்தன் :—** போய் வெற்றியடைந்து வருவீர்களாக.

[போகிறார்கள்]

கல்லார் மனமு மிலங்கையிலே
கடுக ளுவைக் குகையிருளு
மல்லால் வடிவுக் கொப்பில்லா
வடல்சேர் மலமன் னவர்மன்னன்
அல்லார் கூந்தற் சிற்றின்ப
வல்லிதன்னைப் பெற நினைந்தான்
எல்லா ரிளங்கோ வினையந்தோ
யாரே கடந்தார் பெண்மயலே.

**உ-ம் அங்கம்:** **க-ம் களம்:**

**இடம்:** மத்திய புவனக்காடு.

**காலம்:** உதயம்.

**நிகழ்ச்சி:** உயிரிளங்குமரன் அறிவனென்னுந் தோழனுடன் வேட்டைக்குப் போகின்றான்.

**உயிரிளங்குமரன் :-** என் பிரிய நண்ப! யாம் வேட்டையாடப் புறப்பட்டு வரும்பொழுது பொல்லாத நிமித்தங்களெதிர்ப்படுகின்றன.

**அறிவன் :-** அரசிளங்குமர! நான் அவைகளைக் கவனித்திலேன். என்ன நிமித்தங்கள் எதிர்ப்பட்ட[illegible]கூறுவாயாக.

**உயிரிளங்குமரன் :-**

அன்புடை நண்ப! அறைகுவன் கேட்டி
இன்புடன் வேட்டைக் கெழுந்திடு காலைக்
காவிச் சீரையன் கமண்டலக் கையினன்
பூதிப் பையினன் பொக்கணக் காவினன்
துறவி யொருவன் குறுகினன் பெருமுடற்
சாரையொன் றென்வழி தடுத்தது நேரினில்
நெய்வார் குஞ்சி நெட்டுடற் பார்ப்பான்
ஒய்யெனப் புகுந்தனன் ஒளிர்சுடர்ப் படைகொண்
டிழிவுடை மாக்க ளெதிர்ந்தனர் எதிரே
புகையும் நெருப்பும் பொருந்துமிந் தனமும்

வகைபெறக் கொண்டு வந்தனள் விதனை
கண்ணுந் தோளும் இடம்துடித் தின்னே
இன்னல் காட்டும் யாவது வருமோ
காடையு மாந்தையுங் கழுகுங் கிரியும்
ஓடுவ வலமா யுங்கிருந் திங்கே
கருடனும் வலியனும் விரைவுட னோடும்
எய்துவ தியாதோ வறியேன்
பொய்தவிர் நண்ப புகலுதி யாய்ந்தே.

நண்பா! இந் நிமித்தங்களினால் என்ன பயன் நிகழுமோ தெரியவில்லையே.

**தோழன் :–** அரசிளங்குமர! பெரியோர் கூறிய நிமித்தங்கள் பிழைப்பனவல்ல. முன்பு கண்ட நிமித்தங்களெல்லாம் எங்களுக்கோர் துன்பமுண்டாதலை யுணர்த்தா நின்றன. பின்பு கண்ட [illegible]தங்கள் அத் துன்பமுமோர் பெரியோரால் நீங்[illegible]பாகப் பின்பு நன்மையுண்டாதலை யுணர்த்தாநின்றன.

அரசே!

"ஆவது விதியெனில் அனைத்து மாயிடும்
போவது விதியெனி லனைத்தும் போகுமால்
தேவருக் காயினுந் தீர்க்கத் தக்கதோ
ஏவரு மறியொணு வீசற் கல்லதே."

என்றார் பெரியோர். வரும்விதி யிராத்தங்காது. "மலையே வரினுந் தலையே சுமக்க" என்றார் எம் குருநாதரும். ஆதலால், ஒன்றுக்கும் அஞ்சலை;

அங்கே! பார்;
இருளொடு கிடந்த வின்னுயிர் மாயை
தருகலை யாதி யைங்கொடு தழுவ
இழந்த வறிவு மிச்சையுந் தொழிலும்
எழுந்திட நிற்கு மியல்பு போல
இரவிருட் செறிவினி விருண்ட வகலிடம்
விரவுவை கறைவர வெளுத்தது காணாய்!
அன்ன நல்லுயிர் மன்னிய பகுதியில்
எழுமறு நான்கும் வளமுறப் பெற்றுப்
புரிவுறு வினையிற் றிரிவன போலக்
கண்படை கழன்ற வெண்பெறு முயிர்கள்
தத்தம் வினைவயிற் சாருதல் காணாய்!
இங்கே;
பொருள்வயிற் பிரிந்த தலைவர் போக்குழி
இருகணீர் மல்க முகமலர்ந் தேற்கும்
தெ[illegible]குல மகளிர் போல மருங்கே
கொழுநீ ரிலஞ்சியிற் செழுந்தா மரைகள்
மலர்க்கணீர் பிலிற்றி மலர்வன காணாய்!
அக்கரையில்;
பயின்ற கொழுநன் றலைவியை யுன்னி
அகன்றன னாக வதுமனம் பொறாது
வாடிய பரத்தையர் முகம்போற் கூடிய
குமுத மாமலர் கூம்புவ பாராய்!
மேலே;
தெறுகதிர்க் கஞ்சிக் கறையிரு ளொருங்கே
பறவை யுருக்கொடு பறப்பன போலப்
பழுமரச் சேக்கை யொருவிக் குழுவுடன்

கரும்புட் பறக்குங் காட்சி காணாய்!
நாழிகை யுரைக்குங் கணக்கர் போலக்
கோழிகள் கூவுங் கூவிளி கேளாய்!
வாகைபெற் றுவரும் மன்னவர் முன்னே
ஓகையிற் பல்லிய மொலிப்பன போலக்
குருவிக ளொலிக்குங் குமிலங் கேளாய்!
கார்த்திகைத் திங்களிற் கார்த்திகை நாளில்
வாய்த்திடு மண்ணா மலையி னுச்சியில்
தீத்திர ளெழூஉந் தோற்றம் போல
உதய மால்வரை யுச்சியிற் றவழ்ந்து
கதிர்கொள் ஞாயிறு தோன்றும்
புதுமை கூறப் போதா நாவே.

**உயிரிளங்குமரன் :—** அறிவுடைப் பாங்க! காப்பியங் கவிகள் புனைந்துரைப்பதுபோல நீ உதயகாலத்து நிகழ்ச்சிகளைப் புனைந்துரைப்பது மி[illegible] அழகாகவிருக்கின்றது அண்ணாந்து பார்! அம்மலையி னுச்சியில் நின்று முழவிரட்டுவதுபோல ஒலித்துக் கொண்டு வீழும் மலையருவியின் வீழ்ச்சி கண்ணைக் களிப்பிக்கின்றது.

காரகிற் றுணியுங் கடகரி மருப்பும்
ஆரக் கோடு மழல்மணிக் குப்பையும்
கையரிக் கொண்டு பைவிரி பாந்தளும்
ஆளரி யேறுங் கேழலு முழுவையுங்
கொட்புற வுருட்டி முட்கனி பலவுந்
தாழையுங் கமுகுங் கோளரைக் கதலியும்
வேரறச் சாடி ஊர்பல கலக்கிக்

கரைக்கட் டிரைக்கையி னுந்தி நுரைத்திரைத்
திழுமென வொழுகு மருவியின் றோற்றம்
உழுவ லன்புடை நண்ப!
அழுகிது சால வயர்ந்து நோக்குதியே.

அதுகிடக்க,

அங்கே பளிங்குக் கற்பதித்து வெண் பொற் சுதைபூட்டி யியற்றப்பட்ட மூன்று பட்டினங்கள் சேணிடை விளங்கித் தோற்றுகின்றனவே. அவை யாவை?

**தோழன் :—** அரசிளங்குமர! அவைகள் விந்துமாநகரத்துள்ள மூன்று அரண்கள். அங்கே அரசர்க்கரசனாகிய உனது தந்தையார் தனது சூழ்ச்சித் துணைவரோடிருந்து உலகங் கைக்கொண் டொழுகவேண்டிய விதிகளையும் விடவேண்டிய விலக்குகளையும் [illegible]ச் செய்துவருகின்றார்.

**உயிரிளங்குமரன் :—** சரி அறிந்தேன். அவ்விந்துமா நகரத்துக்குக் கீழே யதிக தூரத்தில் வெண்மையும் பொன்மையுங் கலந்த நிறமுடையவோர் நகரந் தோன்றுகின்றது. அதுயாது?

**தோழன் :—** அண்ணல்! அதுதான் எங்கள் நீலகண்டவரசனது ஏவல்செய்துவரும் அனந்ததேவ மன்னவனது நியமம். அதன் பெயர் மோகனபுரி. அதற்குக் கீழுஞ் சில நகரங்கள் தோன்றுகின்றன பார். அங்கேயும் அனந்த தேவருக்குக் கீழ்நின்று தொழில் புரிவோர் சிலருண்டு. இந்நகரங்களெல்

லாம் உமது தந்தையாரி னாட்சிக்குக் கீழுள்ளன. தான் விதித்த பணி தவறாது ஒழுகிவரும் நல்லோர்க்கு இவை பரிசிலாகக் கொடுக்கப்படுவன.

**உயிரிளங்குமரன் :—** நல்லது அவைகளையறிந்துகொண்டேன். கீழே வெகு தூரத்திலே பல நிரையான கட்டடங்கள் கூட்டமாகத் தெரிகின்றனவே. அவை யாவை?

**தோழன் :—** இளவரசே! எங்க ளரசபெருமானுடைய ஆணையை மீறி நடந்தவர்களை அடைத்துவைத்துத் தண்டிக்கும் சிறைச்சாலைகளவைகள்.

**உயிரிளங்குமரன் :—**நண்ப! எனக்குமது நினைவுக்கு வருகின்றது. முன்னொர்நாள் என்றந்தையார்க்குச் சில குற்றம் புரிந்தோரைக மற்றவற்றிற்குத் தண்டனையாக வென்னைச் சிறைச்சாலைகளைப்பார்த்து வரும்படியவர் அனுப்பினார். அப்பொழுதிரிந்துவர்களோடு சென்று அப் பாடிகாவல்வீடுகளைக் கண்டேன். ஐயையோ என்ன பயங்கரம்! என்ன நடுக்கம்!! எத்துணை இரக்கம்!!!

என்னுயிர்க் குயிரென மன்னிய நண்ப!
மன்னவர் மன்னன் வழுவற வகுத்த
விதிமுறை மீறிய மதிதபு மாக்களை
வெஞ்சிறை யிருத்தி யஞ்சிட வருத்தும்
தன்மை கூறிட வெந்நா வெழாதால்
உன்னுழி யுடலந் துண்ணென நடுங்கும்
ஆயினுஞ் சற்றே யிறைகுவன் கேட்டி

செக்கர்க் குஞ்சியர் தீயுமிழ் கண்ணினர்
மைக்கடல் நிறத்தினர் வளர்பிறை யெயிற்றினர்
மடித்த வாயினர் எடுத்த மூச்சினர்
துடித்த மீசையர் இடித்த ஓசையர்
கச்சினர் கழலினர் அச்சமில் நெஞ்சினர்
வாளினர் கதையினர் நீளயில் வேலினர்
முத்தலைப் படையினர் கைத்தலைக் கணிச்சியர்
சுருக்கிய கயிற்றினர் வெருக்கொளு முருவினர்
தண்டத் தலைவர்கள் மண்டின ரெய்தி
பொய்யுரை புகலுநர் புன்மைகள் பேசுநர்
ஐயரை யிகழுநர் அருந்தமிழ் பழிக்குநர்
வெய்துரை வழங்குநர் வீண்மொழி பிதற்றுநர்
கோளுரை கூறுநர் குறளைசொல் லுநர்தமை
தாக்கியீர் வாளினால் நாக்கினை யரிவர்
காக்கைக் கருத்துவர் கடுங்கனற் றீய்ப்பார்
ெ[illegible]ளை யுருக்கி நிறையவார்த் திடுவார்
கடுங்கொலை புரியுங் கொடுங்க ளுளரை
நடுங்கிட மோதி யடக்கலு முடம்பினை
உறுப்புகள் கொய்து நெருப்பினிற் காய்ச்சி
உட்கொளக் கொடுப்பர் கட்கொளும் மாந்தருக்
கீயமுஞ் செம்புந் தீயினி லுருக்கி
வாயினில் வார்ப்பர் மற்றவர் பொருளை
வௌவுநர் தமைநாய் கௌவிட வேவிக்
கண்ணினை யகழ்வர் கையினைக் குறைப்பர்
பிறர்மனை நயந்த பேதை மாக்களைத்
தெறுகனற் றூணொடு சேரப் பிணிப்பர்
செக்கினி லிடுவர் திரித்துவே றுக்குவர்

அம்மியி லரைப்பர் இம்மென வெற்றுவர்
ஐயோ ஆஊ ஆவெனு மமலையும்
அழுகையு மனுக்கமுந் தொழுகையுந் துக்கமும்
விஞ்சிட வொலிக்கும் வெஞ்சிறைச் சாலையில்
சாதலி னுடம்பினைத் தந்து
வேதனை செய்தல் விளம்புதற் கரிதே.

நண்பனே! சிறைச்சாலையிலே தண்டத்தலைவர் செய்யுந் தண்டனைகளைக் கூறமுடியாது. அவைகளை யெல்லாம் கண்டஞ்சி இனி ஒருபோதும் அவ்விடத்துக்குச் செல்வதில்லையெனச் சூளுற்றுத் திரும்பிவந்துவிட்டேன். அதுகிடக்க, எங்கள் நீலகண்டவேந்தன் பெருங் கருணையாளனென்று கூறுகின்றனரே. அதற்குமாறாய் இம்மன்னுயிர்த்தொகுதியை வருத்தித் தண்டிப்பித்தல் முறையாகுமா?

**அறிவன் :—** இளவரசே! எங்கள் மன்னவன் பெருங் கருணையாளன் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை. அவனிங்ஙனம் மன்னுயிர்களைத் தண்டித்தல் அவர்கள்மேற் கொண்ட பெருங் கருணையாலேயாம். அது எதுபோலெனின்,

"தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி
வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவர்..........."

அது அவர்கள்மேற் கொண்ட பரிவினாலே அன்றோ? அதுபோலவே எம் மரசர்க்கரசனுஞ் செய்கின்றானென்று அறிகுதி.

**உயிரிளங்குமரன் :—** ஆம் அறிந்துகொண்டேன். அது கிடக்க, அந்த வெல்லைக் கப்புறத்தே ஒரு இருணிறக் காடு தெரிகின்றதே. அது யாது?

**தோழன் :—** அதுதான் ஆறலைத்துச் சூறைகொள்ளும் மறவனாகிய இருண்மலவேந்தனும் சூழ்ச்சித்துணைவரும் அவனது ஏவலாளரும் இருக்கும் மாயாபுரி நகர். அதற்குச் செல்லும் கவர்வழிகளும் இக்காட்டிலுண்டு. அவ்வழியே செல்லவேண்டாமென்று எங்களரசன் கட்டளைசெய் தனுப்பினதை மறந்தனையோ?

**உயிரிளங்குமரன் .—** ஆம், ஆம், நண்ப! நான் அதனை மறந்துவிட்டேன். அஃதிருக்க, ஆண்டுத்தெரிகின்ற காட்டினிடையே நாங்கள்சென்று வேட்டையாடுவோம் வா. பண்டும் பண்டும் இக்காட்டகத்து வேட்டையாட வந்துள்ளோன். இங்கே ஆங்காரமான சிங்கங்களும், ஆசைவரிப்புலிகளும், அடுசினக்கடங்கலுழியானைகளும், கொடுங்குணக் காடிகளும், ஐவாய்வேட்கையரவினங்களும், கண்டோரைமருளமயக்கும் மாய மான்களும் நிரம்பவுமுண்டு. அவைகளைக் கொன்று வேட்டையாடுவோம் வருவாயாக.

**தோழன் :—** அங்ஙனமே செய்வோம்.

ஆங்கார மான சிங்க மவாவெனு முழுவை கோபம்
நீங்காத புழைக்கை வேழம் நிறையழுக் காற்றுக் கேழல்
தூங்காத ஐவாய் நாக மிவற்றினைத் துரத்தி யாடி
பாங்காக வென்றோர் மேலைப் பயன்பெற வந்தோ ராமே.

(உ-ம் அங்கம், க-ம் களம் முற்றிற்று.)

உ - ம் அங்கம் : உ - ம் களம் :

**இடம் :** மாயாபுரிக்காடு

**காலம் :** நண்பகல்

**நிகழ்ச்சி :** சிற்றின்பவல்லிபோய் உயிரிளங் குமரனை அனுப்பி மாயாபுரியிலுள்ள மணிமண்டபத்துக்கு அழைத்து வருகின்றாள். அறவன் மறவன் என்னுமிருவர் அவனை யகப்படுத்துகின்றார்கள்.

**வீரர் :—** அம்மணீ! தாங்கள் முன்னொருபொழுது மணிந்துகொள்ளாத வண்ணப்பட்டாடை யுடுத்து அணிகலன்கள் பூண்டு ஓசனை கமழும் வாசனை யணிந்து வந்திருக்கின்றீர்கள். கண்ணை மயக்கு மிவ் வண்ணப் பூம் பட்டுடைகளை யாண்டுப் பெற்றீர்கள். இவைகள் சீமையிலே நெய்யப்பட்டனவா?

**சிற்றின்பவல்லி :—** இல்லை! இல்லை!! வீரர்காள்! சீமையாருக்கு மிவ்வித பட்டாடைகள் நெய்யத் தெரியுமா? இவ்வித நூல்கள் அங்கே கிடைக்குமா? இவைகளெல்லாம் எங்கள் நாட்டிலே பண்டைக்காலத்திலே நெய்யப்பட்ட துகில்கள்.

**வீரர் : —** ஆகா! எங்கள் நாட்டவருக்கும் முன்னே நெசவு தொழில் தெரியுமா? இவர்கள் பருத்தியை வளர்த்துப் பஞ்செடுத்துச் சீமைக்கனுப்ப அங்கேதானே பலவித உடைவகைகள் தொழில் செய்யப்பட்டு வருகின்றன என்கிறார்களே. நீங்கள் கூறுவது பெரும் புதுமையாக விருக்கின்றதே.

சிற்றின்பவல்லி :— அப்படியா நீங்கள் நினைத்தீர்கள். சீ! சீ! அது தவறு. முற்காலங்களிலே எங்கள் நாடெங்கும் நெசவுதொழிலே பெருகியிருந்தது. இல்லங்கடோறும் மகளிர் பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும் அற்புதமான வுடைகளை யுண்டுபண்ணினார்கள். இரண்டாயிர மாண்டுகட்குமுன்னே தொண்டியென்னும் நகரிலே நெய்யப்பட்ட பட்டுச் சீலைவகைகளைக் கூறுகின்றேன் கேளுங்கள்.

கோசிகம் பீதகம் பச்சிலை யரத்தம்
வாச நுண்டுகில் வடகஞ் சுண்ணம்
பஞ்சுட னிரட்டு பாடகங் கோங்கலர்
கோபஞ் சித்திர கம்பி குருதி
கரியல் பேடகம் பரியட்டக் காசு
வேதங்கம் புங்கர்க் காளகஞ் சில்லிகை
துரியப் பங்கம் தத்தியம் வண்ணடை
கவற்றுமடி நூல்யாப்புத் திருக்குத்தே வாங்கு
பொன்னெழுத்துக் குச்சரி தேவகிரி கார்த்தூலம்
இறஞ்சி யுடனே மூவகைப் பொத்தியும்
அறைந்தன வெல்லா மரும்பட்டு வகையே.

இவைகளெல்லா மிப்பொழுது இல்லாதொழிந்தன. அதுகிடக்க. வீரர்காள்! அரசனேவிய பணியை யாமினிச் செய்து முடிக்குதும் வருவீராக.

வீரர் :— இளவரசி! தாங்கள் காலாற்கீறியதை நாங்கள் நாவாலளிக்கக் காத்திருக்கின்றேம் அப்படியே செய்வேம்.

**சிற்றின்பவல்லி :—** வீரர்களே! அங்கே தெரிகிற மண்டபத்தின் பக்கத்திற் பற்றை மறைவிலே யொழித்திருங்கள். யான் தனியே சென்று உயிரிளங் குமரனை யழைப்பி அவ்விடத்திற்கு அழைத்து வருகின்றேன். அவனைக் கண்டவுடன் நீங்கள் என்ன செய்வீர்கள் வீரர்களே!

**வீரர் :—** அவனைக் கண்டவுடனே நாங்கள்;

"அடிப்போ மடல் கெடுப்போம் முகத்
திடிப்போங் குட லெடுப்போ மிடுப்
பொடிப்போம் வசை துடைப்போம் உயிர்
குடிப்போம் வழிதடுப் போம் பழி
முடிப்போ மினி நடப்போம்."

**சிற்றின்பவல்லி :—** வீரர்காள்! அவனுயிர்க்கு ஒரு கேடும் செய்கலிர். அவனை உங்களுக்குக் காட்டித் தந்தவுடன் யான் மறைந்துவிடுவேன். அவனைக் கட்டிக்கொண்டுபோய் அரசனிடஞ்சேர்ப்பது உங்கள் கடன். யான் போகின்றேன்.

[போகும்பொழுது தாயைத் துதிக்கின்றாள்]

நிற்பன நடப்பன தத்துவ தவழ்வ
பறப்பன வூர்வன வகைப்படு முயிர்கட்
களவறு பூமியு மாக்கையுங் கருவியும்
வளமலி நுகர்வும் வழங்கிமற் றவற்றை
மண்ணினும் பொன்னினும் பெண்ணினும் மயக்கிக்
கண்ணுத லானைக் கடங்கா திழுத்துத்
தன்னுடன் பிறந்தான் பொன்னடி விழுத்தும்

சிற்றிடைக் கயல்விழிப் பொற்றொடி மடந்தை
தாயா யெனைத்தரும் மாயா தேவி
சேவடி பரவிச் சேறுதும்
காவல னேவல் கடிதுமுற் றுதற்கே.

[சிற்றின்பவல்லி மத்தியபுவனக் காட்டை நோக்கிச் செல்கின்றாள்]

**உயிரிளங்குமரன் :—** யானிக் கடுமான்பின் னோடிவந்து மிகவுங் களைத்தனன். ஐயையோ வழியுந் தப்பி விட்டேன். எனதன்புடைப்பாங்கனையுங் காணேன். யான் மீண்டுபோகும் வழியுந் தெரியவில்லையே. என்னசெய்வேன்.

[திகைத்துநிற்கின்றான்]

[சிற்றின்பவல்லி உயிரிளங்குமரன் நிற்குமிடத்திற் கணித்தாகவந்து மறைந்துநின்று பாடுகின்றாள்]

**சிற்றின்பவல்லி :—**

கொங்குலவு பூங்கோதை குழல்திருத்தி வேய்ந்து
குடங்கையி லேயணைத்துக் கொண்டுச்சி மோந்து
எங்குமிலா வின்னமுத மிதழ்ச்சுவைத்து மாந்தி
இனியகிளி மொழிவினவி யிளகிமன முருகி
அங்கமல முகையவிழ விடைதுவள மாழ்கி
அமரருங்கா ணாதசுக வானந்த மூழ்கி
நங்கைமார் தோள்புணரா நாளென்ன நாளே
நாரிமார் பெயர்கூறா நாவென்ன நாவே.

[சிற்றின்பவல்லியின் பாட்டைக் கேட்டு இறும்பூதெய்திக் கூறுகின்றான்]

**உயிரிளங்குமரன் :-**

நாமகளின் கரத்திருக்கும் சகோட யாழின்
நரம்பொலியோ நயந்தவள்கண் டத்தெழுந்த
தூமதுரத் தீங்குரலோ குயில்களோதும்
சுவையொலியோ கிஞ்சுகங்கள் சொல்லுஞ் சொல்லோ
மாமலையிற் பிறந்தபசுந் தமிழி னின்ப
மதுரவிசை யோவலது மார னூதும்
காமர்மணித் தீங்குழலோ அன்று கானில்
கண்டவளின் தேன்மொழியோ கருதி லேனே.

எங்கேயோ வினியவொலி கேட்கின்றது. நாமகளின் கரத்திலிருக்கும் சகோடயாழின் நரம்பினின் றெழூஉம் இனியவோசையோ? அல்லது அவள் கண்டத்தினின்று கனியும் தீங்குரலமுதமோ? இல்லை, இல்லை மாங்குயிலிசைக்கும் வேய்ங்குழற்கீதமோ? கிஞ்சுகக்கனிவாய் அஞ்சுகமிழலையோ? இல்லை, இல்லை. ஓர் பெண்ணின் குரல். இது முன்பழகிய குரலாயுமிருக்கின்றதே. ஒரு வேளை யான் காதலித்திருக்கும் கண்மணிபோன்ற பேரின்பவல்லியினது குரலாயிருக்குமோ? அவள் இங்கே ஏன் வருகின்றாள். ஒருகா லென்னைக்காண விரும்பி யிங்குவந் திருப்பாளோ? இவ்வழியே சென்றுபார்ப்பேன். (போகின்றான்). அங்கேயொரு மங்கைநல்லாளின் எழிலுருவங் காணப்படுகின்றது. ஆகா அவளனது உயிர்க்குயிராகிய பேரின்பவல்லியைப் போலத்தான் தோன்றுகின்றாள்.

[பாடுகின்றான்]

"முருகனிடமேன் முறைசொல்வாய் கிளியே" என்ற சந்தப்படி.

பல்லவி

மானேமட மாமயிலோ குயிலோ குயிலோ
குயிலோ குயிலோ—இந்த
மாதிவளுக் கேதுநிகர் காதலுடனேத இவள்
மழை குழலோ விழி கயலோ
மதி நுதலோ வரி சிலையோ .... மானே
மன்னுந் துவரிதழோ வகை
சின்னஞ் சிறுமுகையே நகை ... மானே
மனத்திலா தரவே மிக
மலர்க் கணுடி யுண்ணீருக .... மானே
மதன் சரம் புகுந் தினம்
மதந் தருந் தினந் தினம் .... மானே

அநுபல்லவி

தேனே அவள் தேமலர்த் தூமொழி
தீமதுரப் பாகுவிதத் தோடளவு மாரமுதோ. மானே

சரணம்

சாந்துணையுந் தவமே பெரிதே முயல்
வேந்தரையும் மயலே வெறிதேபுரி
வாய்ந்த செஞ்சரணக் கலசந் தோய்ந்த
வஞ்சிப் பூங்கொடி சீருடை
பஞ்சிச் சீறடியே நடை
செஞ்சொற் றேமொழி தாவிடை
கஞ்சத் தேவளர் மாதிவள் .... மானே

எனது பேரின்பவல்லியைப் போலத்தானிருக்கின்றாள். இன்னு மணுகிப்போய்ப் பார்ப்பேன்.

[கிட்டப்போய்ப் பேசுகின்றான்]

மாணிக்கவல்லிபோல்வாய்! அனிச்சப்பூவின் மிதிக்கினுங் கொப்புளங்கொண்டுபதைக்கும் நினது மெல்லிய சேவடி நோவ விந்நாட்டகத்தே யுலாவி வருகின்ற நீயார்? பவளவாய்திறந்து பகருதி.

**சிற்றின்பவல்லி :-** கைவில்லுங் கணையுமில்லாக் காமனையனையீர்! நான் யாரென்பதை யறியாது மறந்திருப்பீராயின் நான் கூறுவதிற் பயனில்லை. ஆயினும் முன்போல் நறும் பொழிலகத்துக் கண்டஞான்று வைத்த என்னுள்ளத்தை உம்மிடத்துப் பதித்து வருந்தாநின்றேனாதலின் நும்மொடு சில மறைமொழிகள் பேச விரும்பாநின்றேன். அங்கே சிறிது தூரத்தில் ஓர் தாமரைவாவிக்கருகே நறுமலர்க் கடிமணஞ் சிறுதென்றல்வீசு மிளமரக்காவி னொருபுடை யழகுடைப் பளிங்குமண்டபமொன்றுளது. அங்கே வருவீராயின் யானவைகளைக் கூறுவேன். வருவீரா?

**உயிரிளங்குமரன் :-** (தன்னுள்ளே) இவளைப்பார்த்தால் ஒருகா லறிமுகமானவள்போற் றோன்றுகிறாள். ஒருகா லறிமுகமில்லாதவள்போற் றோன்றுகிறாள். இவளொடு கூடப்போவதற் கச்சமுண்டாகின்றது. ஆயினுங் கூடிப்போய்ப் பார்ப்போம். (சிற்றின்பவல்லியைப் பார்த்து) மாதர் திலகமே! நீ விரும்

பியவாறு அம் மணிமண்டபத்திற்குப் போவோம் வருவாயாக.

[போகிறார்கள்]

**விருத்தம்**

தலைப்பட்டு நண்ப ரோடு தனிவனம் புகுந்தே யாடிக்
கலைப்பட்ட மான்பின் ஓடிக் காதலன் றன்னை நீங்கி
நிலைப்பட்ட மாயை வல்லி நிலைகண்டு நினைவு சோர்ந்து
வலைப்பட்டான் குமரன் மூன்னாள் வல்வினை வலிய தந்தே.

(உ-ம் அங்கம், உ-ம் களம் முற்றிற்று.)

**உ-ம் அங்கம் : ௩-ம் களம் :**

இடம் : மாயாபுரி எல்லையிலுள்ள ஓர் காடு.

காலம் : நண்பகல்.

நிகழ்ச்சி : இருண்மல வேந்தனின் வீரர்களாகிய அறவனும் மறவனும் மறைவிலிருந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுது சிற்றின்ப வல்லி உயிரிளங்குமரனை அழைத்து வருகின்றாள். வீரர்கள் அவனை யகப்படுத்தி இருண்மல வேந்தனிடங் கொடுக்க அவன் காயாபுரிக் கோட்டையிலே சிறையிடுவிக்கின்றான்.

*அறவன்* :— அடே மறவா! இடார்க்கீழகப்பட்ட எலி போல இம்மறைவின் கீழிருந்து மிரள மிரள விழிக்கின்றனையே. உயிரிளங்குமரனுக்கு அஞ்சினை போலும்.

**மறவன் :—** ஆகா! நன்று சொன்னாய். தம்மரபிற்குரிய கலங்கா வீரத்தைத் தங் குழவிகட்குப் பாலுட னூட்டி வளர்க்கும் மறக்குடித்தோன்றிய வீரத் தாயின் வயிற்றிற் பிறந்த யான், உயிரிளங்குமர னுக் கஞ்சுவனோ? மூதிற் குடியிற் பிறந்த வீரத் தாயி னியல்பறியாயோ? கேள்.

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோண்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்று பலர்கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவன் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" என்று ஒருவர் அவரியல்புகூறினர். பெண்டிர்க் கித்துணை வீரமிருப்பின் ஆடவர்வீரங் கூறவும்வேண்டுமோ?

**அறவன் :—** நல்லது இருக்கட்டும், "பசித்தவன் பழங் கணக்குப் பார்ப்பதுபோல" பழைய வேடிக்க ளவிழ்த்து உங்கள் வீரத்தைப் படிக்கின்றீர்கள். இப்பொழுது அவ்வீரச்செய லுடையவர்களைக் காணோம். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?" அஃதிருக்க, நீ பின் யாது நினைத்துக்கொண்டிருந் தாய்?

**மறவன் :—** நாங்கள் கடந்துவந்த காட்டின் நிலப்பரப்பு எத்துணைப் பெரிது என் றெண்ணிக்கொண்டிருந்

தேன். அறவா இஃதெவ்வளவு பெரிய காடு. இஃதெப்பொழுதுங் காடாயிருந்ததா?

**அறவன் :—**

இல்லை இல்லை இது முன்னே,
கடல்குடித் தெழுந்த கமஞ்சூல் மாமழை
நெடுவிசும் பேறி நறுநீர் பொழிந்தென
அணைமுரித் தோடுங் கடும்புன லொலியும்
வளமுறு முழவர் வாழ்த்திடு சும்மையும்
குளிர்புனல் சிறைசெயுங் களமர் கம்பலையும்
செழுநீர்க் குவளையுஞ் சீரிய வறுகும்
வளமுறத் தொடுத்த மணங்கெழு மாலை
விளங்குகதிர் விரியலொடு மேழியிற் சூட்டி
உளங்கதித் தோது மேர்மங் கலமுங்
கம்புளும் நாரையுங் கானக் கோழியுஞ்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்கும்
நீர்நிறக் காக்கையும் புள்ளும் புதாவும்
வேறுவே றாற்று மாறிலாக் கவ்வையும்
மன்முடி திருந்த நென்முடி நடுநர்
கருஞ்சேறு தெளித்துக் களிகொள மளியு
மருங்களை களைகுநர் பெரும்பே ரமலையுங்
கருங்கயல் நெடுங்கட் கடைசியர் குரவையும்
போர்புனை யோதையும் பொலிவிடு முகவையுந்
தண்பெருங் கழனி மன்பெரு முழவனைத்
தெண்கிணைப் பொருநர் வாழ்த்து மோதையும்
மழைவளஞ் சுரக்க வானவர் தலைவனுக்
கழகுற வெடுக்கும் விழவி னோதையும்

மாரூத் தண்பணை வயல்நில மாகித்
தொடுப்பி னாயிரம் வித்திய து விளைய
வடுப்படா திருந்தது மற்றிது மன்னே
இப்பொழுது ;
வானுயர் பாலையும் வன்கருங் காலியும்
தேனிமிர் செருந்தியுந் தில்லையும் முல்லையும்
ஆவிரை வேரல் பூவிரி சண்பகம்
மருதங் கோங்கம் விரிசினைக் காயா
இருப்பை யசோகு மருப்பொலி கூவிளம்
காஞ்சி வஞ்சி பூஞ்சினை நாகம்
குருந்து வேங்கை பொருந்துவ பிறவும்
தும்பையுந் துளாயுந் தோன்றியும் படர்ந்து
வச்சிர மருப்பு மதமா முழக்கமும்
கொடுவரி யுழுவை விடுகடுங் குரலும்
துளையெயிற் றரவின் இரைப்புங் கிளையொடு
புற்றிடந் துண்ணுங் கரடியின் குமுறலும்
முற்றும் மலிந்து முதிர்கா டானதே.

என்று எனது பாட்டனார் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அக்காலத்து இவ்விடத்திலே நெல் முதலிய தானியங்கள் ஏராளமாகப் பயிரிடப்பட்டுவந்தன. இங்கே யிருந்து பிறவூருக்கு மவைகள் ஏற்றப்பட்டு வந்தன.

**மறவன் :—** அறவா ! இது பின் காடானமைக்குக் காரணமென்ன ?

**அறவன் :—** முன்னொருகாலத்திலே நீலகண்ட வேந்தனுடைய படைவீரர்களாகிய ஊக்கன் தொழிலன்

முதலியோருக்கும் எங்க ளரசரின் படைவீரர்களாகிய சேரம்பன் கலியன் முதலியோருக்கும் சண்டை நடந்தபொழுது எங்கள் படைவீரர்கள் நீலகண்டன் படைவீரர்களைக் கொன்று இவ்விடங்களையுந் தீக்கிரையாக்கினர். அதுதொடங்கி யிது பாழடைந்து காடாய்க் கிடக்கின்றது.

**மறவன் :**—ஐயோ! செய்யத் தொழிலும் உண்ண உணவுமின்றி வாடுகின்ற இக்காலத்திலே மக்களிங்கே வந்து இல்லங்கோலிக் குடிபுகுந்து காடுகொன்று நாடாக்கிக் கோடுதிருத்திக் குளந்தொட்டு வழுவில்லா உழவு தொழில் பெருகப் புரிந்து வருவாராயின் எவ்வளவு நன்மையுண்டாகும். முன்நாளில் சர்மன் நாட்டை ஒருதுடைக்கீழரசாண்ட கேசவனென்னும் மிடல்கெழுவேந்த னுலகடங்கலும் நடுங்குமாறு பல்லாண்டுகளாகப் புரிந்த பெரும்போரினல் வாணிபந் தடைப்பட உணவின்றி மன்பதை வருந்திய வருத்தம் இன்னும் மாறவில்லையே. மீட்டு மவ்வாருகப் பெரும்போர் நிகழ்வதாயின் வறுமை வருமென்பதையறிந்து வெள்ளம் வருவதற்கு முன்னே அணைகோலி வையாதிருக்கு மிம்மாந்தரின் மடமை என்னே! என்னே!! ஏடா! ஊர்க்கதை பேசி நமக்குவரும் ஊதியமென்னை? அதுகிடக்க, சிற்றின்பவல்லி போய் நெடுநேர மாகின்றதே. இன்னு மவளை வரக் காணவில்லையே.

**அறவன் :—** அதோ சிற்றின்பவல்லியும் உயிரிளங்குமரனும் வருகின்றார்கள்.

[சிற்றின்பவல்லி குறிகாட்ட வீரர்கள் உயிரிளங்குமரனை அகப்படுத்த வருகின்றார்கள். அவர்களைக் கண்டு உயிரிளங்குமரன் தன்னுள்ளே சொல்கின்றான்.]

**உயிரிளங்குமரன் :—**

பல்லவி

செய்வதை யறியேன் — ஐயோ
தெய்வமே சிறியேன்

நாடு நகர்கடந்து காடுதனி லேபுகுந்தே
ஆடுதற்கு நான்படர்ந்தேன் தேடி யெனைப்பிடிக்க
அங்கு நின்றிதோ — மிகப்
பொங்குகின்றனர் .... .... (செய்வதை)

முன்பு பொழிலிற்கண்ட வின்பவல்லி யென்றிவளை
அன்பு மிகத்தொடர்ந்தேன் துன்பு புகுந்ததுவே
ஆசை யெந்நாளும் — மதி
மோசமே சூழும் .... .... (செய்வதை)

கண்ணினுண் மணிபோலென்றும் நண்ணியென்றனோடுதுன்றும்
நன்னய மிகுந்தநண்பன் என்னைவிடுத் தேயகன்றான்
நாச காலமோ — விதி
வீசு சாலமோ .... .... (செய்வதை)

[வீரர்கள்வந்து உயிரிளங்குமரனை வழிமறிக்கின்றார்கள்]

**உயிரிளங்குமரன் :—** நீங்கள் யார்? என்னை ஏன் வழி மறிக்கின்றீர்கள்?

**வீரர் :—** நாங்கள் யாரென்பதை உனக்குச் சொல்லும்படி கட்டளையில்லை. உன்னைக் கட்டிக்கொண்டு வரும் படியே எங்களுக்குக் கட்டளையுண்டு.

**உயிரிளங்குமரன் :—** யார் கட்டளை செய்தார்?

**வீரர் :—** நாங்கள் யாரிடத்தே உன்னைக் கட்டிக்கொண்டு போய் விடுக்கிறோமோ அவர்தான் கட்டளை செய் தாரென்று அறிவாய்.

**உயிரிளங்குமரன் :—** என்ன குற்றத்திற்காகக் கட்டி வரும்படி கட்டளை செய்தார்?

**வீரர் :—** நீ செய்த குற்றம் எமக்குத் தெரியுமோ? உனக் குத் தெரியுந்தானே. மறவா! கயிற்றைக் கொண்டு வந்து இவனைக் கட்டு.

**உயிரிளங்குமரன் :—** (வாளை உருவிக்கொண்டு) கிட்டவந் தால் வெட்டிவிடுவேன், வாருங்கள் பார்ப்போம்.

**அறவன் :—** மறவா! இவனோடு போர்புரியப் போவோ மாகில் நமக்கு உயிர்க்கேடு உண்டானாலும் உண் டாகும். அரசன் கட்டளை தவறிவிடும். ஆதலால் சிற்றின்பவல்லிதந்த மாயவலையை வீசி இவனைக் கட்டுவோம்.

[கட்டுகிறார்கள்]

**வீரர் :—** அங்குந்தப்பி யிங்குந்தப்பி யகப்பட்டுக்கொண்டார் தும்மட்டிப்பட்டர். அடே வாய்பேசாதே நில்.

[கட்டிக்கொண்டு போகிறார்கள்]

**மறவன் :—** நடவடா நட, போ போ, மரம்போல் நிற்கிறான். வலியன் மற்றிவன் சிரம்போய்வீழச் செங்கைவாளோச்சவோ.

**அறவன் :—** வெட்டலே, வெட்டலே. வாளுறை புகுத்துதி. தொட்டிழுத் தரசன் தொழுகழல் வீழ்த்துதும். வா வா.

[உயிரிளங்குமரனைக் கொண்டு அரசனிடம் போகின்றார்கள்]

**வீரர் :—** வாழி வாழி மன்னவர் பெருமான்
ஆழிசூ ழுலக மடிக்கீ ழமர
வாழி வாழி மன்னவர் பெருமான்.

அரசரேறே! கட்டளைப்படியே உயிரிளங்குமரனைக் கட்டிவந்தனங் கண்டருள்புரிமோ?

**இருண்மலவேந்தன் :—** ஆகா! அகப்பட்டுக் கொண்டாரா? உங்கள் வீரம் மிகவும் நன்று, நன்று. யான் பெரிதும் மெச்சுகின்றேன். உங்கட்குத் தகுந்த பரிசிலும் பட்டமும் எமது பிறந்தநாள்விழவு நிகழுங்காலந் தருவேம். உங்களைத் திரும்ப வழைக்கும்வரைக்கும் வெளியேபோய் நில்லுங்கள்.

**வீரர் :—** வேந்தர் வேந்தே! திருவுளப்படியே செய்கின்றோம்.

[வீரர்கள் போகின்றார்கள்]

இருண்மலவேந்தன் :— மந்திரிமார்களே !

பல்லவி

ஆலமுண்டிருண்டபொல்லா நீலகண்டன் மைந்தனிப்போ
தகப்பட்டுக் கொண்டான் நல்ல வீரியம்
ஆராய்ந்து சொல்வீர் செய்யுங் காரியம் .... (ஆல)

அநுபல்லவி

நாக்குடனே மூக்கறுத்துத் தூக்கினிலே தூக்குவமோ
தாக்கியுடல் வீக்கிச்சிதை வாக்கிஉயிர் போக்குவமோ
(அக)

சரணங்கள்

தட்டி யெயிறுதிரை கொட்டிச் சிரம்நடுங்கக்
குட்டி யிரண்டுகாலும் வெட்டி விழுத்துவோமோ
எட்டிப் பிடித்திழுத்து முட்டி வயிறுகெட
கெட்டி யுதையுதைத்துக் கிட்டி யழுத்துவோமோ (அக)

குறைத்தே கையை யறுத்தே மெய்யை
மறுத்தால் பல்லை யிறுத்தே மெல்ல
குத்திக்குத்தி யிவனை மொத்திமொத்திக் காலால்
எத்தியெத்திக் குத்தி விக்கிவிக்கிக் கக்கக்
கொன்றுபழி தீருவோமோ
அன்றிச்சிறை யிடலாமோ .... (அக)

மதி மந்திரிமார்களே ! நமது குலப் பகைவ ஞகிய நீலகண்டன் மகனிப்போது அகப்பட்டுக் கொண்டான். அவனை யென்னசெய்யலாமென்று ஆராய்ந்து கூறுதிர்.

**மக்திரிமார் :—**

கடல்புடை சூழ்ந்த நெடுநில வரைப்பும்
மேலுங் கீழுங் கோலிய வுலகமும்
பரந்தநின் னாணை யிரந்துமுன் னிற்கும்
இவனைக் கொன்று விழுக்கடை யும்மே.

ஆதலால் இவனைக் கொல்லாது காயாபுரிக் கோட்டையிலே சிறையிடுவித்தலே நன்று. அது கேட்டு இவனைச் சிறைமீட்க நீலகண்டன் வரினும் வருவான். அப்பொழுது அவனையும் ஒருகை பார்த்துவிடுவோம்.

**இருண்மலவேந்தன் :—**

காற்றாண் நிறுத்திக் கைமர மமைத்துச்
சாற்றிய முள்ளந் தண்டொடு முகட்டில்
பழுக்கழி நிரைத்துச் சிரைக்கயி றார்த்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
ஐம்புலச் சாளர மமைத்தே யும்பரில்
சென்னி மணிக்கூட மேற்றி மன்னிய
கூந்தற் பசுங்கொடி நாட்டி யாய்ந்துசெய்
ஐந்துசா ளரத்து மைவர் காக்க
ஏனைய வைவர் மேவிய வினைசெய
வருவளி பத்தும் உறுதிச் சுற்றமாய்
கரண நான்கு மமைச்ச ராக
அரண மாக வமைத்துவைத் திருக்கும்
மாயா புரத்துக் காயா புரியில்
இன்னே யிவனை யடைக்குதிர்
மன்னிய சூழ்ச்சி மந்திரிமார் களே.

அமைச்சர்காள்! கண்ணப்பன், நெடுஞ்செவியன், புழைமூக்கன், பேழ்வாயன், தொடுதோலன் என்னும் காவலர் ஐவரினுற் காக்கப்பட்டுச் சிற்றின்பவல்லிக் குறைவிடமாக விருக்கப்பட்ட எங்கள் மாயாபுரத்துக் காயாபுரிக்கோட்டையிலே இவனைச் சிறையிடுவிப்பீராக.

**மந்திரிமார் :—** நிருபரேறே! திருவுள்ளப்படியே செய்விக்கின்றோம். (வாயிற் காவற்காரனைப் பார்த்து) காவலாளரே! அறவன் மறவன் என்னுமிருவீரரையு மீண்டு அழைத்துவருவாயாக.

**காவலன் :—** அப்படியே செய்கின்றேன்.

[காவலன் வீரர்களை யழைத்துவர அவர்களைப்பார்த்து]

**மந்திரிமார் :—** வீரர்களே! இவனை யழைத்துக்கொண்டு போய்க் காயாபுரிக் கோட்டையிலே சிறையிட்டு வாருங்கள்.

**வீரர்கள் :—** அப்படியே செய்கின்றோம்.

[உயிரிளங்குமரனைக் காயாபுரிக்கோட்டைக்குக் கொண்டுபோகின்றார்கள்]

## விருத்தம்

வீசியவலையிற்சிக்கி வீரராற்கட்டப்பட்டு
கூசிடாமறவர்மன்னன் கோட்டையுளடைக்கவாங்கே
மாசுசேர்மோகவல்லி மயக்கினில்மறந்துவாழ்ந்தான்
ஆசையாம்வலையிற்பட்டோர் அருங்கதியடையாரன்றே.

(உ-ம் அங்கம், ரு-ம் களம் முற்றிற்று.)

௩-ம் அங்கம் : க-ம் களம் :

**இடம் :** வெள்ளியங்கிரியில் கன்னிகாமாடம்.

**காலம் :** முற்பகல்.

**நிகழ்ச்சி :** பேரின்பவல்லி தோழிக்குத் தன் வருத்தங் கூறுதல். குறத்தி குறிசொல்லுதல்.

**தோழி :—** எம்பெருமாட்டி! நெருநலைநாட் பூக்கொய்தற்குப் பொழிலகம்புகுந்து வந்ததுதொட்டு நின்னிடத்துப் பல வேறுபாடுகள் தோன்றுநின்றன. நேற்றிராக் குளிர்மதியைத் தழன்மதியென்றும், இளந்தென்றலை உயிருண்ணவந்த கூற்றமென்றும் பூசிய சந்தனக்குழம்பை விடமென்றும், மாறுபடக் கூறிப் புலம்பினை. குயிலினிய வொலியை வெறுத்தாய். அன்றிலைப்பகைத்தாய். கடலொலியை இடியென நிந்தித்தாய். அதுமட்டோ! பகலினும்,

அம்மனை கழங்கு பந்தாடல் செய்கிலாய்
பொம்மைகள் புனைகிலாய் பூக்கள் கொய்கிலாய்
நம்மொடும் பேசிலாய் நகைப்பும் நீங்கினை
இம்மென வுயிர்த்துநொந் திருத்தி யென்கொலோ.

எம்பெருமாட்டிக்குத் திருவுள்ளமாயின் அதனை அருளிச்செய்ய வேண்டுகின்றேன்.

**பேரின்பவல்லி :—** எனதாருயிர்த்தோழி! நன்றே வினவினய். தாய்க்குமறைத்த சூலில்லை. அதுபோல உனக்கு மறைத்தொரு எண்ணம என் மனதிலுண்டோ? சொல்லுவேன் கேள்.

நீலவரி விழியாய் கேட்டி நெருநலைநாட்
காலைமலர்ச் சோலை கடிதேகி—வாலியபொற்
பந்தடித்துப் பாவை புனைந்து கழங்காடிச்
சுந்தரப்பூக் கொய்து சுனைகுடைந்து—வந்து
மலர்மா தவிக்கீழ் மணியூச லாடி
அலராய்ந்து கோதை யமைத்தேதம்—குலவுமிசைக்
கோலக் குயிலோடு கூவிவிளை யாடுதற்கும்
நீலமயி லோடுடனின் றாடுதற்கும்—நீலநிறக்
கிஞ்சுகவா யைஞ்சொற் கிளியோடு பேசுதற்கும்
வஞ்சியர்கள் போய்ப்போய் மறைந்தார்கள்—அஞ்சியெனை
என்றும் பிரியாத என்தோழி நீயுமெழில்
ஒன்றுங் குவளைகொய்ய ஓடினப்—கொன்றை
மரநிழலில் நின்விழியை மானும்மா றென்று
வரவதனைக் கண்ணுற்று நின்றேன்—ஒருவர்கழைக்
கைவில்லும் பூங்கணையு மில்லாத காமனே
செய்யமயி லின்றிவருஞ் செவ்வேளோ—மெய்யெல்லாங்
கண்ணில்லா விந்திரனே காம னுடன்பிறப்போ
மண்ணுலகை யாளுமிள மன்னவனே—மின்னும்
வடிவோடு வந்து மலர்க்கண்ணால் நோக்க
அடியேனும் நோக்கினேன் அம்ம—வுடனே
அழிந்தது நாண மகன்றதென் னச்சம்
எழுந்தது காத லிருவிழியே—வாயாய்

புகுந்த தவருருவ முள்ளே புகுந்து
மிகுந்தது துன்ப விரகம்—மிகுந்தவுடன்
வாழியவென் னெஞ்சவர்பாற் றூதாய்ப்போ யின்றளவும்
மீளவில்லை யென்செய்வேன் மெல்லியலே—நாடோறும்
கண்ணுள்ளே நிற்கின்றார் காணவுருக் காட்டிலார்
மண்ணு ளிவரியாரோ மற்றறியேன்—அண்ணல்
அருள்நோக்குஞ் செந்தா மரைமுகமு மாசை
யிருள்போக்கும் புன்சிரிப்பு மெல்லாம்—உருவெளியாய்க்
காலையிலே யுச்சியிலே காரிரவி லாரிருளில்
மாலையிலே தோன்றி மறையுமால்—சோலை
மயில்போல்வா யீதென் மனவருத்த மாய்ந்தே
யியல்வது செய்வா யினி.

வாரிருங்கூந்தல் வளர்மதித் திருநுதற் சீரிய நன்மதித் தேமொழித் தோழி! அன்று நீயும் யானும் ஆயமும் பொழிலகம் புகுந்து விளையாடா நிற்புழி ஆயமகளிரெல்லாரும் ஒவ்வோர் விளையாட்டின்மேற் பிரிந்துசென்றார். என்னை யொருகாலமும் விட்டுநீங்காத நீயும் சுனைக்குவளை கொய்தற்குப் புடைபெயர்ந்தாய். யானங்கே ஓர் நறுநிழற் கொன்றையின்கீழ் ஒரு பொறிமான் புகுந்துலாவ வதனைக் கண்ணுற்று நின்றேன். அவ்விடத் தொருவர் கதுமெனத்தோன்றி யென்னை நோக்கினர். யானும் பிறிதொன்றுஞ் சிந்தியாதே யவரை நோக்கினேன். அவர் நோக்கிய நோக்கம் என் னெஞ்சையு முருக்காநின்றது. துயிலிடைக் கனவிலும் அவரையே காண்கின்றேன். வெள்ளிடையிலும் அவருரு வெளியே புலப்படாநின்றது.

அதுவே யென் வேறுபாட்டிற்குக் காரணம். அன்று நாணத்தினால் உன்னுடன் கூறிற்றிலேன்.

**தோழி** :— கருங்கயல் நெடுங்கட் கற்பகக் கொழுந்தே! அம்மணீ! நினக்குற்றது நோயோ, அல்லது பேயோ என்றெண்ணியிருந்தேமுக்கு இன்று காரணம் வெளியாயிற்று. நமது நீலகண்ட வேந்தன் மகன் உயிரிளங்குமரனே அங்கு வேட்டைக்கு வருபவன். அவனை நீ கண்ட இளைஞனாதல்வேண்டும்.

**பேரின்பவல்லி** :— ஆம்! ஆம்! அவர்தான்! அவர்தான்! அவரை யானினி என்று காண்பேனோ? அவர் குளிர்ந்த முகத்தை எப்போது பார்ப்பேனோ?

[சோருகின்றாள். பின்பு பாடுகின்றாள்]

அன்றேவிரிந்தசெந்தாமரைபோலும்அணிமுகமுங்
குன்றே விரிந்த மணித்திர டோளுங் குளிர்விழியும்
நன்றே விரிந்த நகையும் உடையும் நடையுமெல்லாம்
என்றே யினியடி யேன்கண்டு கொள்வ திளங்கொடியே.

**தோழி** :— அம்மணி! நீ கவலைகொள்ளற்க. காட்டி வைத்த தெய்வங் கூட்டிவைக்கும். யாரோவொருவர் வருகின்றார். யார் என்று பார்ப்பேன்.

[குறத்தி வருகின்றாள்]

**குறத்தி** :— யாரம்மா இந்தவூட்டுக்காரர். இந்தவூட்டுக்கு நன்மைவருகின்றது.

தோழி :— அம்மா! நீயார்?

குறத்தி :— நானு? சொல்றேன் கேளுங்க.

வண்டிருக்குங் கருங்கூந்தல் மதியிருக்குந்
 திலதநுதல் மைசேருண்கண்
தண்டிருக்கு மலர்கரத்துத் தடித்திருக்குஞ்
 சிறியவிடை தளிர்சேர்சாயற்
கண்டிருக்கு மதுரமொழிக் கனிவிருக்குந்
 துவரிதழ்வாய்க் கனியைநாவில்
கொண்டிருக்குந் தமிழ்முனிவன் குடியிருக்கும்
 பொதியமலைக் குறத்திநானே.

வேறு

மந்தமா ருதம்வளரும் மலையெங்கள் மலையே
மதுரமிகுந் தமிழ்பிறந்த மலையெங்கள் மலையே
கந்தவேள் விளையாடும் மலையெங்கள் மலையே
கடலருகே வளர்நகுல மலையெங்கள் மலையே.

வேறு

பச்சைமலை பவளமலை யெங்கள்மலை யம்மே
பழனிமலை பொதியமலை யெங்கள்மலை யம்மே
கொச்சிமலை குடகமலை யெங்கள்மலை யம்மே
கொல்லிமலை குமரிமலை யெங்கள்மலை யம்மே
அச்சமலை கதிரைமலை யெங்கள்மலை யம்மே
அழகர்மலை கோணமலை யெங்கள்மலை யம்மே
நச்சுமலை யருவிதிரை யுவரிபுகக் கொழிக்கும்
நல்லமலை நகுலமலை யெங்கள்மலை யம்மே.

**தோழி :–** நீங்கள் என்ன தொழில் செய்து உயிர்வாழ் கின்றீர்கள் ?

**குறத்தி :–** எங்கள் தொழிலைச் சொல்றேன் கேளம்மா.

வேறு

"கொழுங்கொடியில் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம் [போம்
பசுந்தழையு மாவுரியு மிசைந்திடவே யுடுப்போம்.

செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்துகுகன் மலரடியில் விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த பண்பிதுகா ணம்மே."

**தோழி :–** அப்படியாயின் நீங்கள் ஊரூராய்ச் சென்று வருதலேன் ? அம்மா !

**குறத்தி :–** கேளுங்களம்மே.

வேறு

வெள்ளி மலைக் குறவன்—பெற்ற
வேலன் குறிஞ்சி மலைக் கிழவன்
வள்ளி தனை மணந்த—அன்று
மலையெல்லா மவனுக்குச் சீதன மாச்சே
உள்ள பொருள் கவரேம்—நாங்கள்
ஊரூராய்ப் போயிரந் துண்ணுகின் றோமே.

**தோழி :–** நீ இங்கே ஏன் வந்தாயம்மே ?

குறத்தி :– நான் இங்கே குறிகள் பார்த்துச் சொல்லவந் தேன் அம்மே.

தோழி :– என்னென்ன குறிகள் சொல்வாய் ?

குறத்தி :–

கையின்குறி முகக்குறி—இரு
கண்ணின்குறிமனத்தில் எண்ணுங்குறிகள்
மெய்யின்குறிதுடிக்குறி— இன்னும்
வேண்டுங் குறிகளெல்லா மீண்டுரைப்பன்யான்
பல்லி பலுக்குங்குறி—நல்ல
பாவையர்கள் பேசுங்குறி தும்முங்குறியும்
நல்லதொடு குறிகளும்— முற்றும்
நாடியறிந்து சொல்வேன் சேடிமாரே.

தோழி :– சரி, எம்பெருமாட்டியின் குறிகளைப் பார்த்துப் பலன்சொல்லுவாயா?

குறத்தி :– ஆம், ஆம். அப்படியே சொல்வேனம்மா.

வேறு

சந்தனத்தால் தரைமெழுகு திருக்கோ லம்செய்
தந்திமுகன் றனைநிறுத்தி நிறைநாழி வை
சுந்தரவி நாயகனை வந்தனைகள் செய்
தூவிமயில் வாகனனைத் தோத்திரங்கள் செய்

வேறு

தூயவகில் குங்கிலியம் தூபமணம் போடு
சோதிமணி நெய்விளக்கை யிங்குவைத்துக் கொழுத்து

மேயநிறை குடமதனை மூலைதனில் வைப்பாய்
விரைமலர்கள் சொரிந்துநின்று விநயமுடன் துதிப்பாய்.

வேறு

"முந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லை யென்முன்னே வையம்மே
உன்னுமுன் மருதடியிற் பிள்ளையார்வந் துதித்தார்
உனக்கினியெண்ணினகரும மிமைப்பினிற்கைகூடும்
இந்நாழி நெல்லையுமக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட வெண்ணியபோ தொற்றைபட்ட தம்மே
என்னுணை எங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகா ணம்மே."

அம்மே! நிமித்தங்கள் நல்லாயிருக்கின்றன. மருதடியிற் பிள்ளையாரும் வந்துதிக்கின்றார். முந்நாழி நெல்லை முக்கூறுசெய்து அதிலொருகூற்றை இரட்டைபட வெண்ணினேன். அது ஒற்றைபட்டது. இனி நீ மனதிலெண்ணிய குறிகளைக் கூறுகின்றேன். கேள்:

வேறு

வள்ளிக்கு வாய்த்தவன் அட்டகிரி வேலன்
வானவர் நாயக னாறுமுகன்
புள்ளி மயில்வீரன் என்னுளத்தே நின்று
புகலுங் குறிகளைக் கேளுமம்மே.

சந்தப் பொதியினில் வந்த குறுமுனி
தந்த தமிழ்த்தெய்வ மென்னுவில்

வந்து குறிகளைத் தந்திட நெஞ்சினில்
வாங்கிக்கொண்டே சொல்வன் கேளுமம்மே.

முன்ன மொருநாளில் வன்ன மலர்ச்சோலை
மொய்குழலாரொடும் நீயடைந்தாய்
அன்னமன்னார் செல்லத் தன்னந் தனியேநீ
யங்குநின் றுயம்மே செங்கமலம்.

காலகாலன் நெற்றித் தீயினில் வேவாத
காமனைப் போலொரு மாபுருடன்
சோலை தனில்வந்து கண்டனன் நீயுமத்
தோன்றலை நோக்கினாய் செங்கமலம்.

நோக்கிக்கொண் டாசை தேக்கிக்கொண் டுருரு
வாக்கிக்கொண் டெண்ணந் தூக்கிக்கொண்டீர்
தாக்கிக் கொண்டீர்மனம் போக்கிக்கொண் டினித்
தப்பாது கைகூடும் செங்கமலம்.

அம்மா! உங்கள் பெருமாட்டி சோலைக்குச் சென்றபொழுது ஒரு வீசைக்காறக் கொம்பனைக் கண்டு காதல்கொண்டிருக்கிறு. திருமணமும் விரைவிற் கைகூடும். ஆனால் சிறிது தாமதமிருக்கின்றது. அம்மா உங்கள் கையைக் காட்டுங்கள் பார்ப்போம்.

வேறு

செங்கமலப் பூப்போலுங் கையைக் காட்டாய் பார்க்கநான்
செங்காந்தள் மலர்போலுங் கையைக் காட்டாய் பார்க்கநான்
எங்குநவநிதி பொழியுங் கையைக் காட்டாய் பார்க்கநான்
எங்களுக்கன் னங்கொடுக்குங் கையைக் காட்டாய் பார்க்கநான்.

வேறு

ஆழி மடுக்குங்கை யன்னங் கொடுக்குங்கை
நாழி யெடுக்குங்கை நல்லகை யுன்கையம்மே
யாலை தொடுக்குங்கை வன்னப்பந் தாடுங்கை
சேலை கொடுக்குங்கை செல்வக்கை யுன்கையம்மே.

வேறு

ஆனமணிக் கட்டிலையே மூளைத்தெட்டி
ஆயுள் படர்வதும் பாரம்மே—உனக்
காயிர மாண்டுபல் லாண்டம்மே.

வேறு

ஞானச் சந்திர மண்டல மீதிலே
நங்கை யோர்குறி கண்டுகொண் டேனடி
வானத் திந்திரன் சுந்தர கோவிந்தன்
வைகுந்த மும்மேலுஞ் சேருமடி.

அம்மா! உனது கையை அந்தப்புறந் திருப்பிக்காட்டு. அங்கே யொரு ரேகை பார்க்கவேண்டும். அம்மா விதுதான் கலியாண ரேகை அது மிகவும் நன்றாயிருக்கின்றது. அம்மாவினுடைய உருவத்திற்கும், குலத்துக்கும், அழகுக்கும், அறிவுக்கும், வயதுக்கும், வரிசைக்கும் ஒத்தவோர் வீசைக்காரக் கொம்பன் மணவாளனாக வரப்போகின்றான். அவனுக்கு இப்போது ஒரு துன்பம் நேர்ந்திருக்கின்றது. அதுவும் ஓர் பெரியோனருளால் நீங்கிப்போக அவன் விரைவில்வந்து அம்மாவை மணக்கப்போகின்றான். அம்மா சிரிக்க

வேண்டாம்; நான் சொன்ன குறி தப்பாது. எனக்கு ஏதாவது கொடுத்துவிடுங்களம்மே.

**தோழி :–** உனக்கு என்ன வேண்டுமம்மா.

**குறத்தி :–** எனக்கு உடுக்க ஒரு பழந்துணியும் குடிக்கக் கஞ்சியும் தலைக்கெண்ணெயுந் தந்தாற்போதும்.

[தோழி கொடுக்கின்றாள்]

**குறத்தி :–** மகாராசியாய், பாக்கியவதியாய், என்றைக்கும் நிறைந்த செல்வியாய், ஆல்போற்றழைத்து அறுகுபோல வேரோடி மூங்கில்போற் சுற்றம் முடியாது வாழவேண்டும். உங்கள் கலியாண வீட்டிற்கு யான் வருவேன். இப்போது போகின்றேன் அம்மா.

## விருத்தம்

அற்புடன்கண்டஞான்றே அவனையுள்ளத்திருத்தி
பொற்புடனிளங்குவாளைப் புகுந்தொருகுறத்திதேற்ற
விற்பொலிநுதலாள்தேறி விருப்புடனிருந்தாளென்றால்
கற்பினிற்சிறந்ததொன்று காசினிதன்னிலுண்டோ.

(௩-ம் அங்கம், ௧-ம் களம் முற்றிற்று)

ரு - ம் அங்கம்: உ - ம் களம்:

**இடம் :** நீலகண்டவேந்த னந்தப்புரம்.

**காலம் :** இரவு.

**நிகழ்ச்சி :** சிவகாமித்தாயார் தான்கண்ட கனவை நீலகண்ட வேந்தனொடுகூறி உயிரிளங்குமரன் வராமையைப்பற்றி இரங்குதல்.

**சிவகாமித்தாயார் :—** எனது காதற்றோழி! எங்களாசைக்குமரன் வேட்டைக்குப்போய் இன்னுந் திரும்பிவரவில்லை. நாட்கள் பல கழிந்தன. சிங்கம் புலி முதலாகிய பொல்லாத மிருகங்கள் இடையூறு புரிந்தனவோ? காட்டிலே வழிதப்பி அலைகின்றானோ? அல்லது ஆறலைத்து உயிர்கொள்கின்ற இரக்கமில்லாத மறவர்களுடைய கையிலே அகப்பட்டுத் திகைக்கின்றானோ? ஒன்றுந் தெரியவில்லையே. தோழி! எனக்கு முந்தைநாட்டொடங்கி வலக்கண்ணுந் தோளுந் துடியாநின்றன.....

**தோழி :—** எம்பெருமாட்டி! எங்கள் மன்னவர்மன்னன் அதோ எழுந்தருளி வருகின்றார்.

[நீலகண்டமன்னவன் வருகின்றான்]

**சிவகாமித்தாயார் :—** எம்பெருமானே! இப்படி எழுந்தருளுக. இப் பொற்றவிசின்மே லிருப்பீராக.

**நீலகண்டன் :—** பவளத் துர்வாய்ச் சிறுநகைப்பாவாய்! என்னை! நின் திருமுகமண்டலம் வாடி யிருக்கின்

றது. நெஞ்சிடைப்பொருந்திய துன்பம் யாது? கூறுவாயாக.

**சிவகாமித்தாயார் :—** உலகெலாங் காக்கும் ஒருபெரு வேந்தே! எல்லாமறியும் ஞானமுதல்வ! அன்று எங்களருமைமகன் உயிரிளங்குமரனை வனத்திற் போய் வேட்டையாடி வாவென்று அனுப்பினீர். அவன் சென்று பலநாட்களாயின. இன்னும் வரக்காண்கிலேன். அவனுக்கு என்ன துன்பங்கள் நேர்ந்தனவோ.

எம்பெருமான் வனத்தினில்கோ ளரியுழுவை
யனுருஞற்ற விடர்ப்பட் டானோ
துன்புதரும் சூரணங்கு தொடத்துன்ப
மடைந்தானோ துதைந்த காட்டில்
முன்புவழி தெரியாது கலங்கியலை
கின்றனனோ மூர்க்க ரான
ஐம்புலவே டுவர்குழுவில் அகப்பட்டு
விட்டானோ வறிகி லேனே.

என் ஆருயிர்த்தலைவ! துன்பத்தைக் காட்டுகின்ற சில குறிப்புகளும் தோன்றுகின்றன. எனது வலதுகண்ணுந் தோளுந் துடிக்கின்றன. காரணமின்றி உடம்பு நடுங்க மூக்குளைந்து தும்மலும் உண்டாகின்றது. என்ன விளைந்ததோ தெரியவில்லையே.

[பாடுகின்றாள்]

### பல்லவி

மைந்தனைக் காண்கிலனே—என்னுசை
மைந்தனைக் காண்கிலனே.

### அநுபல்லவி

எந்தன் வலக்கண்ணுந் தோளுந் துடிக்குதே
இருதயம் படபட வென்றே யிடிக்குதே .... மைந்த

### சரணம்

வந்தவழிதப்பி வேறுவழிபுக
மாயவிலங்குகள் கொன்றனவோ
வஞ்சநரிக்குழாந் தின்றனவோ
வந்துபதிவி லிருந்துபிடிக்கின்ற
மாயமறவர்கள் கிட்டியே
மறித்துப்பிடித்தாரோ கட்டியே .... மைந்த

அன்புற்ற மைந்தனை யென்னிரு கண்ணை யதன்மணியை
யின்புற்ற வெந்த னுயிர்க்குயி ராகு மிளங்குருந்தைத்
தென்புற்ற செல்வத்தைக் காண்கிலன் றீயிற் றளிரதுபோல்
என்பெற்ற குக்கி கொதிக்கின்ற தென்செய்வ னெம்மிறையே.

அதுவேயுமன்றி, எம்பெருமானே நேற்றிராப் பொல்லாத கனவுங் கண்டேன்.

### பல்லவி

கண்டேன் நான் நேற்றிராப் பொல்லாத கனவொன்று
கருணைமிகுந்த வுயிர்நாதா—எங்கள்
காதலனுக் கேதோ தீதா.

அநுபல்லவி

அண்டமட்டும் முட்டி மண்டுகொடுங் காட்டில்
ஆசைமகன் சென்றுபாதை
அறியாது நின்று திகைத்தா னப்போதே .... சண்

சரணம்

விழிகளெரியு மிழுவரிகொள் வெடிவா லோச்சி
வீரப்புலியிரண்டு தாவி —மகனை
மேவிப்பிடிக்கக்கண்டேன் பதைக்குதென்னாவி....க

எம்பெருமானே! எங்கள்மைந்தன் காட்டிலே வேட்டையாடிக்கொண்டு நின்றபொழுது இரண்டு வீரப்புலிகள் வந்து அவனைத் தாவிப் பிடித்துத் தூக்கிக்கொண்டு சென்று ஒரு மலைமுழைஞ்சியில் புகுத்திவைக்கக்கண்டு பயந்து விழித்துவிட்டேன். இக் கனவின் பலன் யாதோவறிகிலேன். அதனைத் திருவுளம்பற்றுவீராக.

**நீலகண்டன் :—**

மஞ்சுசூழ்ந்து பிறைபதிந்து
வானத்திருவி லிரண்டுகுலாய்
நஞ்சுசூழ்ந்தின் னமுதுறையும்
நாட்டம்பொலிந்த முகத்தினாய்
நெஞ்சம்பதைக்க வுடல்நடுங்க
நினையாதெல்லாம் நினைந்துநின்றே
அஞ்சவேண்டா நின்மகனை
யழைத்துத்தருவேன் ஆற்றுதியே.

பெண்மணி! பொல்லாச் சனுக் கண்டேனென்று வருந்தலை. எங்கள் மைந்தனுக் கிடையூறு யாதுமில்லை. கவலைகொண்டமேற்க. எங்களரண்மனையில் அதிகாரம்பெற்றிருக்கின்ற சுப்பிரமணிய முனிவரை அழைப்பித்து அவர்மூலமாக உன் மகனை இங்கே வருவிக்கின்றேன். அதுவரையும் நீ ஆற்றியிருப்பாயாக.

## விருத்தம்

மாயப்புலிக ளுறைகின்ற வனத்திற்போன தன்மகனை
நேயத்தோடும் நினைந்துகண்ட கனவாலுள்ள நிறைதளம்பித்
தூயகணவற் கெடுத்துரைத்து மகனைமீட்கும் தொழில்புரிந்தாள்
தாயிற்சிறந்த வன்புடையார் வேறுமுண்டோ தாணியிலே.

(௩-ம் அங்கம், ௨-ம் களம் முற்றிற்று.)

**௩-ம் அங்கம் :** **௩-ம் களம் :**

**இடம் :** காயாபுரிக்கோட்டை.

**காலம் :** முற்பகல்.

**நிகழ்ச்சி :** காவலர் கலந்துபேசுதல். சுப்பிரமணிய முனிவர் காயாபுரிக்கோட்டைக்கு வருகின்றார். காவலன் கண்ணப்பனுக்கும் முனிவனுக்கும் சல்லாபம் நிகழுகின்றது.

**நெடுஞ்செவியன் :—** அண்ணா கண்ணப்பா! என்ன? வாய் பேசாது இருக்கின்றாய்? காயாபுரிக்கோட்டையைக் காவல்காத்துக் களைத்தனையோ?

**கண்ணப்பன் :–** தம்பி நெடுஞ்செவியா! அன்னை தன் வயிற்றி லென்னுடன்பிறந்த துணைவனாகிய நீ இருக்க யான் களைப்பேனோ? சீவகன் தனது தம்பி யாகிய நந்தட்டனைக் கண்டபொழுது,

"திண்பொரு ளெய்தலாகுந் தெவ்வரைச் செகுக்கலாகு
நண்பொடு பெண்டீர்மக்கள் யாவையு நண்ணலாகு
மொண்பொரு ளாவதையா வுடன்பிறப் பாக்கலாகா
வெம்பியை யீங்குப்பெற்றே னென்னெனக் கரியது"

என்று கூறினான். அதுபோல உன்னைத் துணைவனாகப்பெற்ற எனக்கு அரியதொன்றில்லை.

**நெடுஞ்செவியன் :–** சரி உனது வேலையை விழிப்பாகப் பார். யானுங் கூடநின் றுதவிபுரிகின்றேன்.

[சுப்பிரமணியமுனிவர் வருகின்றார்]

**சுப்பிரமணியமுனிவர் :–** (பாடுகின்றார்)

திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்
திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்

"பொருப்பைப் பண்பொடு குனித்துச் சண்டவெம்
புரத்தைப் பொன்றமுன் சிரித்துக் கண்டவன்
கரப்பொற் குன்றடுந் திறத்துச் சிங்கமென்
கருத்துட் டங்குமைஞ் செழுத்துச் சம்புவண்
டரக்குக் கொண்பதஞ் சலிக்குத் தென்றலந்
தழைப்பத் தொங்தொமென் றிசைத்துச் சந்ததந்
திருத்தச் செம்பதம் புரிப்பித் தன்புறும்
திருச்சிற் றம்பலம் திருச்சிற் றம்பலம்"

வேறு

'நந்தாகரர் செந்தாமரை வந்தார்தொழு மெந்தாய்
நாதாவதி பூதாசதுர் வேதாவித கீதா
பந்தார்விரல் வண்டார்வரி வண்டார்குழல் கொண்டாள்
பாகாவென தாகாபர யோகாசிவ லோகா
முந்தாதர கங்காதர சங்கார விடங்கா
மூலாகம நூலாகுண சீலா திரிசூலா
தந்தாவென நின்றாடிய பொன்றாள்மணி மன்றார்
தாளா வருளாளா நினதாளா வெனையாளே.''

வேறு

சம்போ சம்போ சங்கரா சம்போ சம்போ சங்கரா
கீச்சிக் கீச்சித் தம்பலம் கீயோ கீயோ தம்பலம்
மாய்ச்சி மாய்ச்சித் தம்பலம் மாயோ மாயோ தம்பலம்
சம்போ சம்போ சங்கரா சம்போ சம்போ சங்கரா.

**கண்ணப்பன :—** (தன்னுள்ளே) யாரோவொருவன் பாடிக்கொண்டு வருகின்றான். அவனை யாரென்று வெளியிற்போய்ப் பார்ப்போம் (முனிவரைக் காண்கின்றான்) கண்டவுடன் அடே அங்கே நில்லு. போகவேண்டாம் நில்லு. நீயார் சொல்லு.

**சுப்பிரமணியமுனிவர் :—** அப்பா! நான் யாரென்று கேட்கிறாயா? தெரியாது, ஆனாலுஞ் சொல்லுகிறேன் கேள்.

நானாரிவனார் நீயாருவனார் நன்றாய்த் தெரியவில்லையே
தாயார்தந்தை யிவாாருவரார் சரியாய்த் தெரியவில்லையே
தேனார்கமல மானார்விழியாள் சேர்வாரொருவர் கூர்வாரேல்
தேர்வாரயலார் தோரார்வானோர் தோரார்நீயோ தேர்வாயே.

அடே அப்பா! நானார் நீயாரென் றறியாது நானும் மயங்குகின்றேன். உலகமு மன்றுதொட்டின்றுவரையுந் தேடியறியாது கலங்குகின்றதாம்.

[முனிவர் சிரிக்கின்றார்]

**கண்ணப்பன் :—** அடே! என்ன பெரிய பாசாங்குபண்ணுகிறாய். நில் இங்கே. நீ எங்கே இருக்கின்றவன் சொல்.

**சுப்பிரமணியமுனிவர் :—** அப்பா! நாடோடிப் பரதேசிக்கு இருக்குமிடம் எங்கே.

அங்கேயிருப்பே னிங்கேயிருப்பே னறியமாட்டாயே
அகத்தேயிருப்பேன் புறத்தேயிருப்பே னறியமாட்டாயே
எங்குமிருப்பே னிராமலிருப்பே னெய்தமாட்டாயே
இதிலுமிருப்பே னதிலுமிருப்பே னெய்தமாட்டாயே.

**கண்ணப்பன் :—** ஆகா! இவன்பேச்சு வெகு விநோதமாயிருக்கின்றதே. அடே சடையாண்டி! நீ யார் மகன் சொல்லடா.

**சுப்பிரமணியமுனிவர் :—** நானா? நான் அம்மையப்பர் மகன்.

**கண்ணப்பன் :—** நன்றாயிருக்கின்றது. உன்னப்பனார் மகன்?

**சுப்பிரமணியமுனிவர் :—** அப்பனா! அவரென் அன்னை மகன்.

**கண்ணப்பன் :—** வெகு நேர்த்தி! வெகு நேர்த்தி!! (கைகொட்டிச் சிரித்து), நல்லது உன் அன்னை ஆர் மகள்?

சுப்பிரமணியமுனிவர் :— அவள் என் அப்பன் மகள்.

கண்ணப்பன் :— என்னடா முறைதெரியாச் சருக்கம் பேசுகிறாய். உன்னப்பன் உன் அன்னையைப்பெற உன் அன்னை உன் அப்பனைப் பெற்றாளா ? என்ன வேடிக்கை !

சுப்பிரமணியமுனிவர் :— ஆம், ஆம். அப்படித்தான் எல்லாரும் சொல்லுகிறார்கள். மெய்கண்டதேவரும் அப்படித்தான் சொன்னார். மாணிக்கமும் அப்படித் தான் சொன்னது. கேள்

அப்பனென் அன்னையைப் பெற்றான்—பின்னர்
அன்னையென் அப்பனை அவனியிற் பெற்றாள்
ஒப்பி லிருவருங் கூடி—யிந்த
உலக மனைத்தையும் பெற்றெடுத் தாரே.

கண்ணப்பன் :— சரி இருக்கட்டும், உன்னுடைய அம்மையப்பருக்குப் பெயரென்ன ?

சுப்பிரமணியமுனிவர் :— என் அன்னைக்குப் பெயர் முடிச்சு மாதாத்தை. என் அப்பனுக்குப் பெயர் முடிச்சறுத்த சங்கரன். விளங்கிற்றா ?

கண்ணப்பன் :— (விலாவொடியச் சிரித்து) அடடட ! இவன் பேச்சைக்கேட்டு விலாவெலும்பு பதினாறு மொடிகின்றதே. நல்லது இருக்கட்டும். அவர்க ளிருக்கு மிடமேது ?

சுப்பிரமணியமுனிவர் :— ஆப்பா ! அவர்கள் இருக்கு மிடமா கேட்கிறாய் ? சொல்லுகிறேன் கேள்.

அகம்புறஞ் சிதம்பரம் அவரிருந் திடுமிடம்
அருந்தவ ரணைந்தன ரறிந்தனர் புகுந்தனர்
இகம்பர மிரண்டையு மினைந்திட வழங்குவர்
இருந்தன ரிழந்தன ரெழுந்தவ ரடைந்தனர்.

**கண்ணப்பன் :—** நீ கூறுவதெல்லாம் அறம்புறம் சிதம்பரமாய்த்தான் இருக்கிறது. அது இருக்கட்டும். உன்னுடைய ஆச்சி அப்பருடைய தொழிலென்ன?

**சுப்பிரமணியமுனிவர் :—** அவர்கள் தொழிலா கேட்கிறாய். சொல்லுகின்றேன் கேள். ஆச்சி உலகங்களெல்லாவற்றையும் முடிகிறது. அப்பர் முடிய முடிய அவிழ்க்கிறது. இதுதானப்பா அவர் தொழில்.

**கண்ணப்பன் :—** சரி, உன் தொழில் என்ன!

**சுப்பிரமணியமுனிவர் :—** என்தொழிலா? நான் நடுவே நின்று சிக்கெடுத்துக்கொடுக்கிறது.

**கண்ணப்பன் :—** நல்லது நல்லது போகப்போக விசையாகப் போகிறது. இருக்கட்டும் உன் பெயரென்ன?

**சுப்பிரமணியமுனிவர் :—** ஆயிரம்பேர் ஆயிரம்பேர் சொன்னார்கள் முன்னே ஐயையோ அப்பெயர்கள் அயர்த்துவிட்டேன்பின்னே.

**கண்ணப்பன் :—** ஆயிரம்பேர் ஆயிரம்பேர் சொன்னார்களாம். அதில் ஒன்றுவது இவனுக்கு நினைப்பில்லையாம். ஒன்று சொல்லடா.

**சுப்பிரமணியமுனிவர் :—** அப்பா ! சொல்லவா. பெயர் சொல்லவா. என்பெயர் கருவாட்டுத்தலையன்.

**கண்ணப்பன் :—** சாடிக்கு மூடி வாய்த்தாற்போல உன் தொழிலுக்குப் பெயர் மிகவும் பொருத்தமாயிருக்கிறது. அதுபோக நீ என்ன அற்புதங்கள் செய்வாய்.

**சுப்பிரமணியமுனிவர் :—**

அன்றொரு சட்டியி லலைவாய்க்கொக் கவித்துட்கொள்ள
அடிவயிற்றிற் குத்தமிகு சத்திகாத் தெடுத்தே
ஒன்றுதலை வலிகண்டேன் மற்றதனை யுடனே
ஒருகோழி மயிலாக வருமாறச் செய்தேன்
என்றுமொரு புல்லதனைப் புலியாகச் செய்வேன்
எழில்நாக மாதங்க மென்னவியை விப்பேன்
இன்றுமெழு கடலையள்ளிக் குடங்கையினிற் றருவேன்
இரும்பினையுங் கரும்பொன்றை வியைவிப்பேன் யானே.

அப்பா, நான் அன்றொருநாள் கடல்நடுவிலே வந்த கொக்கை அவித்து உட்கொள்ள அடிவயிற்றிலே குத்த கையிலே சத்தியெடுத்துத் தலைவலி கண்டேன். அதுவுமல்லாமல் புல்லையெடுத்துப் புலியாகக் காட்டுவேன். புலியைத் தூக்கிப் புல்லென்று சொல்வேன். இன்னு மநேக விநோதங்கள் செய்வேன். எல்லாவற்றிலும் மேலாக ஏழு கடலையள்ளிக் குடங்கையிற் காட்டுவேன் அப்பா.

**கண்ணப்பன் :—** எடேயப்பா! எல்லாம் செய்தாய். எல்லாம் செய்வாய். கிடக்கட்டும். ஏழு கடலைக்

குடங்கையிற் காட்டுவேனென்று சொன்னாயே. அதை இப்போது செய்துகாட்டு. அல்லது இந்த வாளினாலே உன்றலை தத்திப்போகும்படி வெட்டு வேன்.

**சுப்பிரமணியமுனிவர் :—** (மடியிலிருந்து ஏழு கடலைக் கொட்டைகளை எடுத்துக் காட்டுகிறார்) அப்பா! இதோபார் ஏழு கடலை என்கையிலேயிருக்கின்றன. எண்ணிப்பார்.

**கண்ணப்பன் :—** அடே சடையாண்டி! நீ என்ன ஆசப் புருடாப் பண்ணுகிறாய். நீ படித்தவனா? என்ன படித்திருக்கிறாய்?

**சுப்பிரமணியமுனிவர் :—** எல்லாம் முடிந்து படித்தது கேட்கிறாயா? நல்லது நான் படித்தது சொல்கின் றேன் கேள்.

அரிவரிக்கு முதலெழுத்துப் படித்திருக்கிறேன் ஓம் ஓம்
அப்பாலு மைந்தெழுத்துப் படித்திருக்கிறேன்

**கண்ணப்பன் :—** ஆகா! நீ நல்ல படிப்புக்காரன், இருக் கட்டும். நீ இங்கே ஏன்வந்தாய் சொல்லு.

**சுப்பிரமணியமுனிவர் :—** நானிங்கே மலங் கழிக்க வந்தேன்.

**கண்ணப்பன் :—** இந்தக் காயாபுரிக் கோட்டைதானா உனக்கதற்கிடம். நீ வந்த காரியத்தைச் சொல்லு. அல்லது உன்னை வெட்டுவேன்.

[முனிவர் அதற்கு மறுமொழிகொடாமற் பாடுகின்றார்]

"எண்சா ணுடம்படியே ஏழிரண்டு வாயிலடி
பஞ்சாயக் காரரைவர் பட்டணமுந் தானிரண்டு
அஞ்சாமற் பேசுகிறாய் ஆக்கினைக்குத் தான்பயந்து
நெஞ்சார நில்லாமல் என்கண்ணம்மா
நிலைகடந்து வாடுறேனடி.

பையூரி லேயிருந்து பாழூரி லேபிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
பையூரும் மெய்யூரும் என்கண்ணம்மா
பாழாய் முடியாதோ."

**கண்ணப்பன் :–** (தனக்குள்ளே) ஐயோ இவன் முழுப் பைத்தியக்காரனா யிருக்கின்றான். இவனைக் கொல்வதால் யாதும் பயனில்லை. காயாபுரிக் கோட்டைக்குள்ளே சிற்றின்பவல்லியோடு ஊடிக்கொண்டிருக்கும் உயிரிளங்குமரன் துக்கத்தோடிருக்கின்றான். இவனை அங்கே அழைத்துப்போனால் இவனுடைய அசதி வார்த்தைகள் உயிரிளங்குமரனுக்கு மகிழ்ச்சியை யுண்டாக்கும். சிற்றின்பவல்லியினூடல்தீர்தற்கும் அதுவோர் மருந்தாயினுமாகும். ஆதலால் இவனை யுள்ளே அழைத்துப்போவோம்.

அடே சடையாண்டி! நீ காயாபுரிக் கோட்டைக்குட் போ.

**சுப்பிரமணியமுனிவர் :–**

கீச்சுக்கீச்சுத்தம்பலம் கீயோகீயோதம்பலம்
மாய்ச்சுமாய்ச்சுத்தம்பலம் மாயோமாயோதம்பலம்

[என்று சொல்லிக்கொண்டு உள்ளே போகின்றார்]

**உயிரிளங்குமரன் :—** யாரோ ஒருவர் அழகிய கோலத்துடனே இங்கே வருகின்றார். இவர் யாரோ? முன்னே அறிமுகமானவர்போலும் தெரிகின்றது சுவாமி! இப்படிவருக. இத்தவிசின்மே லிருக்க. நீர் இங்கேவந்த காரணமென்ன? சொல்லவேண்டுகின்றேன்.

**சுப்பிரமணியமுனிவர் :—** நான் வந்த காரணத்தைக் கேட்கின்றாயா? கூறுகின்றேன் கேள்.

ஐயாவொரு சிங்கக்குட்டியை—இங்கு
ஐந்துநரிபற்றி முட்டியே—மிகு
ஆசைவலையினிற் கட்டியே—இரு
வினைபோயற மலமாறற
வெகுவாழ்வுற மகிழ்வேயுற
வெட்டிவிடவந்தேன் கிட்டியே.

ஐயா, இங்கே ஒரு சிங்கக்குட்டியை ஐந்து நரிகள் பிடித்துக் கட்டி வருத்துவதை அறிந்து அவைகளை வெட்டிவிட வந்தேன். அறிந்துகொண்டாயா?

**உயிரிளங்குமரன் :—** சுவாமீ! நீங்கள் கூறுவது மிகவும் மறைபொருளா யிருக்கின்றது. அடியேனுக்கு விளங்கவில்லை. கருணைகொண்டு அதனை விளங்கும்படிக்குக் கூறியருள்வீரா?

**சுப்பிரமணியமுனிவர் :—** மகனே! நான் கூறுவதைக் கவனமாய்க் கேட்பாயாக.

வெள்ளியங் கிரியின் மேய வேந்தர்கள் வேந்த னான
ஒள்ளிய நீல கண்டன் ஒருதிரு மகனீ யன்றோ
கள்ளர்கள் வேட்டை போன காட்டிடை வஞ்சஞ் செய்ய
மெள்ளநீ சிறையி லக்கு விடப்பட்டாய் மறந்திட் டாயே.

மகனே! நீ வெள்ளியங்கிரியிலே யிருக்கின்ற நீலகண்டராசன் மகனல்லவோ. சிவகாமித்தாயார் உனது தாயல்லவோ. பேரின்பவல்லியை நீ முன் காதலித்திருந்ததில்லையோ? நீ காட்டுக்கு வேட்டைக்குப் போனபோது வழிதப்பிக் கள்ளர்கையிலகப்பட்டு இருண்மலவேந்தனால் இக் காயாபுரிக் கோட்டையில் அடைக்கப்பட்டிருக்கின்றாய். உன்னை மயக்கஞ்செய்து அழைத்துவந்த சிற்றின்பவல்லியை உன் காதலியென்றும், இங்கேயுள்ள ஏனையோரை நின் சுற்றத்தாரென்றும் வேறுபட வெண்ணி மயங்கியிருக்கின்றனை. உன் தாய் தந்தையர்களை அயர்த்தனை. உன்னையும் நீ மறந்தாய். நின்னைக்காணாது நினதுபெற்றோர் கவலையடைகின்றார்கள். அவர்கள் உன்னைக் கண்டுபிடித்து அழைத்து வரும்படி அனுப்ப இங்குவந்தேன். யான் சுப்பிரமணிய முனிவன்.

**உயிரிளங்குமரன் :—**

அன்னையை மறந்தேன் பெற்ற வப்பனை மறந்தேன் மேலு
மென்னையு மறந்தே னிந்த விருவினைக் கோட்டைக் குள்ளே
மின்னன கொடியாள் மாய வல்லியை விரும்பி யந்நாள்
என்னுயிர்க் குயிரா மின்ப வல்லியை மறந்திட் டேனே.

பேரின்பவல்லியின் வடிவங்கொண்டு வந்து என்னறிவை மயக்கி வீரர்கையிலகப்படச்செய்து, பின் இக்காயாபுரிக் கோட்டையிற் சிறையிடுவித்த இக்கொடிய பெண்ணணங்கினால், என்னை வருந்திச் சுமந்துபெற்ற தாயாரையும் மறந்தேன்; கண்ணை இமை காப்பதுபோல வேண்டுவன தந்து காத்து வந்த எனது தந்தையாரையு மறந்தேன்; பூஞ் சோலையிற் கண்டநான்றே என்னுள்ளத்தைக் கொள்ளைகொண்டு உயிரினிடத்து வீற்றிருந்த என் ஆசைக்காதலியையும் மறந்தேன். அதுமட்டோ! என்னையும் யார் என்று அறியாது அயர்த்து, இக் காயாபுரிக் கோட்டையே எனது இடம் என்றும், ஆண்டுள்ளவர்களே எனது துணைவரென்றும், அச் சிற்றின்பவல்லியே எனது காதலியென்றும் எண்ணியிருந்தேனைச் சுவாமி தேவரீர் தேடிவந்து உண்மையையுணர்த்தி வலியஆட்கொண்டீர். எனக் குற்றதுணையாக என்னோடு கூடிவந்த பாங்கனையுங் காட்டில்விட்டு வந்துவிட்டேன். நான் இச் சிற் றின்பவல்லி புனைந்த ஆசைவலையினின்று நீங்கவும், இக்காயாபுரியிலுள்ள வீரர்களையும் இருண்மல வேந்தனையும் வென்று வெள்ளியங்கிரி சென்று அங்கே எனது பெற்றோரை அடையவும், அடைந்து பேரின்பவல்லியைக் கடிமணம்புரிந்து என்றுமழியா வின்பமெய்தி வாழவும் தேவரீர் திருவருள்புரியவேண்டும். வாடிய பயிருக்கு மழை கிடைத்ததுபோலவும், வறியவனுக்குப் பணப் புதையல் கிடைத்ததுபோலவும் இன்று எனக்குத் தேவரீர் வந்து அகப்பட்டீர். உமது திருவடிகளே தஞ்சம்.

[திருவடிகளில் விழுகின்றான்]

**சுப்பிரமணியமுனிவர் :—** மகனே எழுந்திரு. ஒன்றற்கு மஞ்சலை. உன்னுடைய தீங்கு நீங்கி நன்மையடையுங் காலம் வந்துவிட்டது. இந்தா இஃதோர் மந்திரஞான வாள். இதனாற் சிற்றின்பவல்லியின் ஆசைவலையை அறுத்துக் காயாபுரிக்கோட்டையிலுள்ள வீரர்களை வென்று இருண்மலவேந்தனை வலிதொலைத்து, நாளைக்கு உனது அறிவன் வெளிப்படுவான். அவன்காட்டும் சுருங்கைவழியே வெளிப்போந்து வெள்ளியங்கிரியை யடைகுதி. அங்கு வந்தபின்பு உனது திருமணம் நிகழும். யான் போய் வருகின்றேன். (சுப்பிரமணியமுனிவர் திரும்பிவந்து) இன்னுமோர் பொருடருகின்றேன். இதனையும் பெற்றுக்கொள். இதனை இட்டு நோக்கினால் இக்காயாபுரிக் கோட்டையின் தாய்தன்மையும் சிற்றின்பவல்லியினது மாயமும் நன்கு விளங்கும். அவளோர் பரத்தை. அதனையுமறிந்து கொள். இந்தா இஃதோர் அற்புதஞானக்கண்ணாடி.

[உயிரிளங்குமரன் அதனை ஏற்றுக் கண்களிலொற்றிக் கொள்ளுகின்றான். முனிவர் போகின்றார்]

**விருத்தம்**

பொருவறு மன்னவன் போக விட்டிடு
மருளறு சுப்பிர மணிய மாமுனி
வரமுறக் குமரனும் மாயை நீங்கினன்
குருவரு ளெய்திடில் யாவுங் கூடுமே.

(௩-ம் அங்கம், ௩-ம் களம் முற்றிற்று.)

## அங்கம்: ச

ச - ம் அங்கம் : க - ம் களம் :

**இடம் :** காயாபுரிக்கோட்டை

**காலம் :** பிற்பகல்

**நிகழ்ச்சி :** உயிரிளங்குமரன் காயாபுரிக்கோட்டையின் தூய்தன்மைகண்டு அருவருத்தல். சிற்றின்பவல்லியோடு சல்லாபம்.

**உயிரிளங்குமரன் :—** (முனிவர் கொடுத்தருளிய ஞானக் கண்ணாடியை யிட்டுக்கொண்டு காயாபுரிக்கோட்டையை உற்றுநோக்குகின்றான்.) அடடட! இஃதென்னவிந்தை! நானிதுநாள் வரையும் மிகவும் தூய்தாகிய வாமென் றெண்ணியிருந்த விக் காயாபுரிக் கோட்டையி னிழிவெல்லாம் இப்பொழுதன்றோ எனக்குவெளியாகின்றன. இது நான்முழுத் தொன்பது பீற்றற்கொட்டில். அதோபார்!

பீளையும் நீரும் புறப்படு மொருவழி
சழியும் நீருந் தவழு மொருவழி
உமிழ்நீர்க் கோழை யொழுகு மொருவழி
வளியும் மலமும் வழங்கு மொருவழி
ஒன்பது வழியுந் துன்பமே காட்டும்
இங்கே
முழுமலக் குப்பை கெழுமிய தோரறை
அழுகிடு தொழுநோய் தழைவுறு மோரறை

எற்புத் திரட்சி யிலங்கிடு மோரறை
நரம்புக் கூட்டம் நண்ணிடு மோரறை
மூளையுஞ் சேறும் நாறிடும் ஓரறை சீ.

எத்திக்கை நோக்கினு மத்திக்கெல்லாம் புலால்நாறு மிக்கோட்டைக்குள் மனம்பொருந்தி யிருந்தேனே. இருந்துவிழலுக்கிறைத்தேனே.

ஆறாத தீம்பா லருள்கறவை யங்கிருக்க
ஈறு மலடுகறந் தெய்த்தேன் பலகாலம்
கட்டிக் கரும்பின் கமழ்தீஞ்சா றுண்ணாது
எட்டி யிருப்பு கடித்தெய்த்தேன் பலகாலம்
அளிமுரலும் பூஞ்சோலை யழகுவழி யங்கிருக்க
குழியில் விழுந்து குலைந்தேன் பலகாலம்.

இங்ஙனம் விளக்கிருக்க மின்மினி தீக்காய்ந்து நொந்த எளியேனையும் ஒருபொருளாகத் திருவுளங் கொண்டு நானிருந்த விடந் தேடிவந்து தானாகவே இவ்வுண்மைகளை யுணர்த்தியருளிய என்னரும் பெறற் குருநாதனின் பெருங்கருணைப் பெருக்கு இருந்தபடியென்னே! என்னே!! எழுமை எழு பிறப்பு மவன்செழுமலர்ச்சேவடிகட்குத் தொழும்பு பூண்டொழுகுவதேயன்றி அடியேனாற் செய்யத் தகுவது ஒருகைமாறு வேறுமுண்டோ?

[குருவைநினைந்து பாடுகின்றான்]

வாடும் பயிர்க்கினிய மாமழைபோற் பக்குவத்தில்
தேடியெனை வந்தாண்ட தேசிகனைக் காண்பதெப்போ

வாசலிலே கண்டவுடன் வாவென் றெனையழைத்த
ஆசைக் குருமணியை அடியனேன் காண்பதெப்போ
என்னையெனக் கறிவித் திக்கட்டு நீக்கவழி
சொன்ன குருமணியின் சோதிமுகம் காண்பதெப்போ
நெஞ்சில் நினைத்ததனை நீயிந்தா கொள்கவென்று
புன்சிரிப்பி னோடளித்த புண்ணியனைக் காண்பதெப்போ
வாராரோ யின்னொருகால் வந்து மனத்துயரம்
தீராரோ தீர்த்தாற் சிறப்புற் றிருக்கேனோ
மாயை வலையறுத்த வஞ்சகரைக் கொன்றின்ப
நாயகியை மேவி நபக்குந்நா ளெந்நாளோ
காயா புரிக்கோட்டைக் கள்வர்தமை வென்றெனது
தாயார் திருவடியைச் சாருந்நா ளெந்நாளோ
செப்பு மலவேந்தன் தீமைகளின் நீங்கியென
தப்ப னடியை யடைகுநா ளெந்நாளோ.

[சிற்றின்பவல்லி வருகிறாள்]

**சிற்றின்பவல்லி :—**

அரசே! என்னாசைக்கண்ணாளா! நெருநலைநாட் டொடங்கித் தாங்கள் பருவரலுற்றிருக்கின்றீர்கள். முன்னே என்னைக் கணப்பொழுது பிரியினும் ஆற்றாது வருந்தி இருக்குமிடந் தேடிவந்து குழல் திருத்திக், கோதைவேய்ந்து, நுதல்நீவி, முதுகுதைவந்து, முத்தமிட் டணைத்து, இனியமொழி வினவி, அன்புபாராட்டிய தாங்கள் இன்று என்னையேறெடுத்துப் பார்க்கின்றீர்களுமில்லை. ஏதிலார் போல நோக்கி முகத்தைத் திருப்பிக்கொண்டிருக்கின்றீர்கள். அடிச்சி ஏதாவது குற்றஞ்செய்ததுண்டா? உண்டாயின் கூறவேண்டுகின்றேன்.

குழல்வாரிச் சிக்கறுத்த முடித்த காலம்
கொண்டைதனிற் பூமாலை தொடுத்த காலம்
நிழல்போலப் பிரியாது சென்ற காலம்
நெற்றியின்மேற் குங்குமப்பொட் டிட்டகாலம்
வழுவாம லணைத்துமுத்தந் தந்த காலம்
மலரணைமே லுடனுறங்க வருந்துங் காலம்
விழலாக விக்காலம் எல்லாம் போக
வேறுபட்ட கலிகாலம் விளைந்த தேனே.

[சிற்றின்பவல்லி உயிரிளங்குமரனைத் தழுவப் போகின்றாள்]

**உயிரிளங்குமரன் :—** (அவளை விலக்கிவிட்டு) எல்லாக் கொடுமைகட்கும், எல்லாத்துன்பங்கட்கும் எனது இறப்புக்கும் பிறப்புக்கும் காரணமாயிருந்த அடி மோசக்காரி! உன்னுடைய திருட்டும் புரட்டும், அந்தத் தித்திரிப்பும் ஆளை மருட்டுந் தொழிலும் மயக்கும் உருட்டுகளும் எல்லாம் இன்று வெளி யாயின. ஆயிரகோடிவஞ்சனைகள் மனதிலே யடை கிடக்க அவைகளெல்லாவற்றையும் மறைத்துக் கொண்டு ஒன்றுமறியாதவள்போல நடித்து என்னை மடக்கிவைத்திருந்த நீலி கிட்டவாராதே நீ போடி.

**சிற்றின்பவல்லி :—** (அழுதுகொண்டு) அரசே!

காகத் திருகணுக் கோர்மணி போலக் கலந்தொரிரண்
டாகத்து ளோருயி ராயணைந் தேயிருந் தோமதுபோய்
சோகத்தி னலடி யேன்மிக வாடித் துயாமுற
வேகத் தகுமொழி கூறியென் னேநீ வெறுப்பதுவே.

வாகச் சுரிகுழலிற் பூசிமலர் புனைந்து
வாரி முடித்ததில்லையா—மணிமார்பிலே

மாலை தொடுத்ததில்லையா
வார்சிலை நேர்நுதல் நீவியன் பாயே
ஆதர வோடெனை மார்பணைத் தாயே .... வாச

**உயிரிளங்குமரன் :—**

நாறும் மலர்பொழிலில் நானே தனியிருக்க
நாடிக் கெடுக்கவந்தாயே—அடிமூடி நீ
நாடிக் கெடுக்க வந்தாயே
நாச குணமுள்ள நீசரை யேவியே
நாணிப்பிடித்த முகடி மூதேவியே.... .... நாறும்

**சிற்றின்பவல்லி :—**

அந்நாளி லோர்கணமும் அகன்றிருக்க மனம்பொருந்த
தாசையுடன் தேடிவந்தீரே—என்னரசே
ஆசையுடன் தேடிவந்தீரே
என்னுசை நாயகனே என்னிரண்டு கண்மணியே
இன்னாளில் வந்ததென்னையா—என்னரசே
இன்னாளில் வந்ததென்னையா.

**உயிரிளங்குமரன் :—**

மையேறு கண்ணினாலும் மதுரமொழி தன்னினாலும்
வாசநடை யுடையினும்—அடியேநீவி
வாசநடை யுடையினும்
பொய்யான மாயவலைப் போட்டு மயக்கிவைத்த
பொல்லாதநீலி நீயடி—அடி
பொல்லாதநீலி நீயடி.

**சிற்றின்பவல்லி :—**

தேனே யமுதே திரவியமே யென்றுரைத்த
கோனேயிப் போதுவெகு கோபமதாய்—ஆனது

வாடியென்றும்போடியென்றும் வம்புசொல்லவந்ததென்ன
மோடியைய னேயுரைப்பாய் முன்.

என்னரசே! அந்நாளில் தேனே! அமுதே! திரவியமே யென்று சொல்லியழைத்த உம்முடைய திருவாயினால் இப்பொழுது வாடியென்றும் போடியென்றும் வம்புசொல்ல வந்த காரணம் ஏதோ தெரியவில்லையே.

**உயிரிளங்குமரன் :—**

இந்திரசா லக்கள்ளி யேமாற்றுக் காரியென
வுன்றனையா னின்றே யுணர்ந்துவிட்டேன்—வந்தவழி
மீளுவதே நல்லபுத்தி வீண்வார்த்தை பேசுதியேல்
நாமூலந்து போவாய் நட.

அடி மோசக்காரக்கள்ளி! கண்ணாலும் வாயாலும் நடையாலு முடையாலும் நீ காட்டிய விந்திர சாலமெல்லாம் பொய்யாய் பழங்கதையாய் கனவாய் மெல்லப்போயின. உண்மை யறிந்துகொண்டேன். வந்தவழியேபோ. அல்லது உயிரிழப்பாய்.

**சிற்றின்பவல்லி :—** அரசே! வீண்மொழி பேசுவதிற் பயனில்லை. நேற்றுப்பகல் ஓர் சடைச்சந்நியாசி இக்காயாபுரிக்கோட்டைக்கு வந்தானென்றும், அவனைக்கண்டு நீர் கட்டி அழுதீரென்றும், அவனுமது செவியிலே ஏதோ மிணுமிணென்று கூறினானென்றும் கேள்விப்பட்டுள்ளேன். அவன் சொன்ன பொய்யை மெய்யென்று நம்பி, இப்பொழுது என்னை வெறுக்கின்றீர். அதுவேயுமன்றி வீரவார்த்

தைகளுங்கூறி வெருட்டாநின்றீர். பனங்காட்டுநரி சலசலப்புக்கஞ்சுமா? வீர னூரலானுல் உரலின் பெருப்ப மெவ்வளவாகுமென்று அறியீரோ?

**உயிரிளங்குமரன் :—**

ஏதடி நீமெத்த வாதுகள் பேசுருய்
எங்குரு நாதனை யேசுருய்
ஓதடி நீசெய்த சூதடி யுன்னிடத்
தோடடி மூடியிப் போதடி.

**சிற்றின்பவல்லி :—**

அடடா கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட
தவ்வித மென்னை வெருட்டுருய்
விடடா வுன்றன்வீரம் மிஞ்சிப் பேசாதேநீ
வெல்ல முடியாது போடா.

**உயிரிளங்குமரன் :—**

கிட்டிக்கிட்டி யென்னை முட்டி வராதேநீ போடி—வந்தால்
வெட்டி விழுத்துவேன் வாளிங்கிருக்குது வாடி.

**சிற்றின்பவல்லி :—**

என்னடா நீமெத்த வாங்காரம் பேசுருய் மூடா—சற்றும்
என்னை யறியாயோ வுன்னைப் பிடிக்கிறேன் வாடா.

(சிற்றின்பவல்லி ஓர் மாயவலையை யெடுத்து உயிரிளங்குமரனைக் கட்டும்படி அவன்மேல் வீசுகின்ருள்.) (அப்பொழுது உயிரிளங்குமரன் முனிவர் கொடுத்த ஞான மந்திரவாளைக் கையிலெடுத்து

அவள் வீசிய வலையை வெட்டி அவளையும் பிடித்துத் தள்ளிவிடுகின்றான்.)

சிற்றின்பவல்லி :—

(தனக்குள்ளே) ஓ! அடடா! இந்த வாளின் முன்னே எல்லாரையும் மயக்கி யகப்படுத்துகின்ற வென் மாயவலையின் வலி தொலைந்தது. யானு மதன்முன்னே நிற்க வஞ்சுகின்றேன்.

[புலம்புகின்றாள்]

ஓதநீர் வேலி யுலகமொரு குடைக்கீழ்
தீது மலிய வரசாளுஞ் செல்வாவோ
மாதா வுடன்பிறந்த மாமாவோ மாமாவோ
பேதையொருவன் பிழைசெய்ததோர்ந்திலையோ (க)

யானெனும் வில்லும் எனதெனும் கூர்ங்கணையும்
மானமறுநாளும்கொண்டவென் றன்மைத்துனவோ
ஈன னொருவன் எனக்கிப் பொழுதுபுரி
ஊனங் கெடுக்கவிரைந் தோடியிங்கு வாராயோ. (உ)

(சிற்றின்பவல்லி யெழுந்து நின்று) அடே பாதகா! பெண்பாலென்றும்பாராது என்னை மயிர் பிடித்திழுத்து விழுத்தி இந்த வம்புசெய்தனையே. என்னுடைய மாமாவாகிய இருண்மலவேந்தனைக் கொண்டுன் சென்னியறுப்பித்து உயிரைக் கூற்றுவன் நகர்க்கேற்றி உடம்பைக் காக்கைக்கு விருந்திடுவியாவிட்டால் நான் மாயை மகள் சிற்றின்பவல்லி அல்லள்.

[எழுந்து போகிறாள்]

உயிரிளங்குமரன் :-

நுண்ணறி வுடையோர் நுவன்றமூன் றுசையில்
மண்ணும் பொன்னும் வலியில வாகப்
பெண்கொடி தென்பர் கண்ணிய புலவர்
தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழூஉம்
மெய்வரு கற்பின் மெல்லிய லாருடன்
நல்லற மாகிய இல்லறம் புகுந்து
நாற்பொருள் நசைஇ ஐம்புல னோம்பி
மூவர்ப் பேணி வாழ்வது நிற்க
வண்ணப் புருவ வரிசிலை கோட்டிக்
கண்ணிணை யெஃகம் தொடுத்து நுண்ணிய
நெஞ்சையும் பிளக்கும் வஞ்சகம் மிகுந்த
இருமனப் பெண்டிர் கவர்நெறிச் சேறல்
கொடிது கொடிது கொடிதுமற் றம்ம!
கருங்குழல் காட்டர ணாக விருந்தனம்
மலையர ணாக விலைபல பேசி
உடையா மாயப் படைகளை வீசி
அறிவினை மயக்கிக் குழியினில் விழுத்திக்
கொழுஞ்சாறு பிழிந்து கோது புறமிடூஉம்
ஆலையைப் போலச் சாலவுந் தள்ளுவர்
வெற்றிலை வைத்து விருப்புட னணைத்து
வேப்பிலை கொடுத்து வெறுப்புட னோட்டுவர்
செஞ்சொலிற் றேனைப் பிலிற்றி நெஞ்சினில்
கடுவிடம் வைத்துக் குளிர்ந்து கொல்லுவர்
நாவினால் நக்கி நல்லுயிர் கோறும்
ஆமா விவர்க்கொப் பாமா வாமாம்
இசையினி விழுத்துப் பறையினிற் கொல்லும்

வேட்டுவ ரனைய ரினையர் வேட்டெழூஉம்
ஆடவ ரசுண மாவினை யனையர்
விண்ணுறு மிந்திரன் மகளே யாயினும்
எண்ணிமீ சைம்பொன் அங்கையி லிட்டால்
குக்கி யெக்கி வால்குழைந் தனுங்கி
எச்சில் நச்சும் சுணங்கன் போல
பின்னிலை நிற்பர் தன்னிலை திரியார்
பெட்டியி லடங்கிய பிணம்புழுத் தாங்கு
மட்டறப் புழுத்த வஞ்சனை யடக்கி
வார்குழற் சுருளினும் வாசனைப் பொருளினும்
சீருறு நடையினும் செங்கையின் வீச்சினும்
நகையினு மணியினு மிளைஞரை மயக்கி
பாங்குறப் பயின்று தீங்கு பலபுரிந்
தப்பா லுலகமு மில்லை யாக்கிடும்
வெப்பார் கூற்ற மிவரே யாக; அவர்தமைத்
தேனே பாலே தெவிட்டா வமுதே
மானே பிணையே மயிலே குயிலேயென்
றேத்தி யேத்தி யிணையடி தொழுவோர்
பேய்த்தேர் முகந்த பெற்றி யோரே.

அடுகரி தொடரவீழ ஐந்தலை நாகங்காண, இடிகிணற்றருகின் வேரைப்பற்றி நான்றிட அவ்வேரைக் கடுகவோ ரெலியும்வந்து கறித்திட அவ்வமையத்தில் மேலே மரக்கொம்பிற் றொடுத்த தேனிறால் சிதைந்தொழுக அதிலோர் துளியை நாவினால் நக்கியுண்டு மகிழ்ச்சி யடைந்தவன்போலச் சிற்றின்பவல்லியாகிய பரத்தையின் மாயத்தை

இன்பமென்று மயங்கி இருந்தேன். இன்றோ டதுவுமொழிந்தது. இனி என்னை என்னசெய்யப் போகின்றாள் பார்ப்போம்.

விருத்தம்

நேச முற்றவள் போலவந் தல்வழி நிறுத்தி
மாசு றத்திவேற் றுமைப்படுத் தியமட வாலை
ஆசெ னத்துடைத் தருளிறூற் றாயவ னுறூன்
ஆசை விட்டவர்க் கில்லையா லச்சமென் பதுவே.

ச-ம் அங்கம் : உ-ம் களம் :

இடம் : காயாபுரிக்கோட்டை.

காலம் : மாலை.

நிகழ்ச்சி : அறிவனென்னுந் தோழன் வெளிப்பட்டுத் தன் கதை கூறுதல். உயிரிளங்குமரன் பேரின்பவல்லியை யுன்னிச் சோகமுறல்.

உயிரிளங்குமரன் :— ஆகா! அருந்தவமே ஓருருக் கொண்டு எழுந்தருளிவந்து அடியேனை ஆண்டு கொண்ட என்னண்ணலாசிரியன் தன் மாறுப் பெருங் கருணையால் எனக்கீந்த ஞான மந்திரவா ளின் பெருமை யென்னே என்னே! அதனை யுறைகழித் தொண்கையி லேந்தியவுடனே அத் தீய பாசத்தை வீசிய மாயவலை யறுந்தது. அவ ளும் கோம்பியைக் கண்டு இரை கவரா தஞ்சி

ஒதுங்கிய கலை மஞ்ஞைபோல அவ்வாளைக்கண்டு அஞ்சி யொதுங்கி வலியிழந்து ஓடினாள். அவள் போய் இருண்மலவேந்தனிட மிவைகளைக் கூறி னுங் கூறுவாள். அவன் கோபங்கொண்டு தனது படைவீரருடன் போருக்கு வரினும் வருவான். அதற்கென்னை, வரட்டும் ஒருகை பார்ப்போம். யானினி ஒன்றுக்கு மஞ்சுவேனல்லேன்.

[பாடுகிறான்]

ஆரறிவி லன்பென்னும் வயலில் நீங்கா
அருளென்னும் வித்திலே முளைத் தெழுந்த
சீரியஞா னப்பயிரைத் தேனைப் பாகைத்
தெவிட்டாத தீங்கனியைச் சேரா தார்க்குத்
தூரியனை அண்மையனை யென்சித் தத்துத்
தூண்டாத மணிவிளக்கின் சோதி யானை
ஆரியனை அடிபோற்றுந் தவம்பெற் றுள்ளேன்
அஞ்சுவனோ எதுவரினும் அஞ்சேன் யானே. (க)

வந்தென்னைப் பொருட்படுத்தி ஆண்டு கொண்ட
வற்றாத பெருங்கருணை வாரி தன்னைச்
சுந்தரத்தோல் லுருவெனக்குக் காட்டி னானைச்
சுப்பிரமண் ணியனைமணிச் சோதி யானை
பந்தவினை வேரறுக்கப் பார்க்கின் றானை
பங்கயத்தாள் என்றலையிற் படிவித் தானை
அந்தணனை அடிபோற்றுந் தவம்பெற் றுள்ளேன்
அஞ்சுவனோ வெதுவரினு மஞ்சேன் யானே. (உ)

நாளஞ்சேன் கோளஞ்சேன் நமனை யஞ்சேன்
நாடிவரு பிணியஞ்சேன் வினையை யஞ்சேன்
வேளஞ்சேன் வேள்துணையா யென்னை வாட்டும்
வேல்விழியாள் மயலஞ்சேன் வீர ரோச்சும்
வாளஞ்சேன் வேலஞ்சேன் மறவர்க் கஞ்சேன்
வஞ்சகரோ ரைவர்க்கு மஞ்ச மாட்டேன்
ஆளஞ்சேன் குருமணிதா ளடையப் பெற்றேன்
அஞ்சுவனோ எதுவரினு மஞ்சேன் யானே. (௩)

இன்புடைய தாயினிலு மின்பா னானை
என்னுயிரை இருவிழியின் மணியா னானைத்
தன்பெருமை தானறியா தென்னை யாளும்
தத்துவனை யுத்தமனைச் சார்பா னானைத்
துன்புவரும் போதுவந்து துணைசெய் வானைச்
சுடுநோய்க்கு மருந்தருந்தித் துயரந் தீர்க்கும்
அன்புருவைக் கலம்பகனை யடையப் பெற்றேன்
அஞ்சுவனோ எதுவரினும் அஞ்சேன் யானே. (௪)

செம்பொன்னை மாமணியைச் சித்தத் துள்ளே
தித்திக்குந் தெள்ளமுதைத் தேனைப் பாகை
முன்பென்னை வினைகடியக் கடிந்து நோக்கி
முதிருமருட் பெருக்கினிலே முழுது மாண்ட
நம்மன்னை மிடிகெடுக்கும் பெருஞ்செல் வத்தை
நாயடியேன் சிறுகுடிலில் நயந்து தோன்றும்
அன்பன்னைக் கலம்பகனை யடையப் பெற்றேன்
அஞ்சுவனோ வெதுவரினு மஞ்சேன் யானே. (௫)

ஆ! ஆ! இந்தநேரத்தில் என் னுருயிர்ப்பாங்கன் என்னுடன் நிற்பானாயின் எனக்கு எவ்வளவு துணையாகும். தீங்குவரு மமையத்திலன்றோ சிநேகனின் இன்றியமையாமை தெரியும். அவனைக் காட்டினிடத்தே விட்டுவந்தேனே. அங்கே அவன் என்ன துன்ப மடைந்தானோ? என்னைத் தேடி வருந்துகின்றானோ? அவனை யின்னுங் காண்பேனோ?

[பாடுகின்றான்]

மண்ணுல கத்தின் மாசறு மனமுடை
அன்பனின் பெருமை யறைகுதற் கெளிதோ!
அகநக நட்ட வவனியல் கூறின்
குறிப்பினில் வேண்டுவ நெறிப்பட வுதவி
ஆதரித் தணைத்தலின் அன்னையே போன்றும்
மிகுதிக் கண்ணே மேற்சென் றிடித்துத்
தகுதி கூறலில் தந்தையே போன்றும்
உடனு யுறைதலின் உடன்பிறப் பொத்தும்
இன்பந் தருதலின் வந்திழை போன்றும்
ஏவிய புரிதலில் இளஞ்சிறார் போன்றும்
தீநெறி விலக்கி நன்னெறி யுய்த்தலில்
மேவிய விருவிழி மணியே போன்றும்
துணையா யிருத்தலில் தோளிணை போன்றும்
அருந்தொழில் புரிய வருகுநின் றுற்றலில்
விரும்பிய செங்கைப் பெருவிரல் போன்றும்
பகைகெடக் கோறலிற் படைக்கலம் போன்றும்
அறிவு கொளுத்தலி லருநூல் போன்றும்

சென்ற விடமெலாம் சிறப்புத் தருதலின்
கன்றிய பலதுறைக் கல்வி போன்றும்
பயன்கோ டாமையின் வியன்முகில் போன்றும்
இன்பினுந் துன்பினும் என்னியல் காட்டலின்
பன்னிய பளிங்கின் பான்மை போன்றும்
இன்றியமை யாமையி னின்னுயிர் போன்றும்
என்னினை வறிதலி னிறையவன் போன்றும்
மன்னிய நண்பனை வாய்ப்புறப் பெற்றோர்
எய்தா வொண்பொரு ளிலையென
பொய்யா நாவினர் புகன்றிசி னோரே.

கோப்பெருஞ் சோழற்குப் பிசிராந்தையார் போலவும், சீவகனுக்குப் பதுமுகன் போலவும், இராமபிரானுக்குக் குகன்போலவும், உதயணனுக்கு யூகிபோலவும், எனக்கு வந்து வாய்த்த அறிவன் என்னுந் தோழன் எப்போது வெளிப்பட்டு வருவானோ? அப்போதே நானுய்ந் தேன். ஆளரவங் கேட்கின்றது. (திரும்பிப் பார்க் கின்றான்.) அதோ அவன் யாவன்? என் காதற் பாங்கனோ? என் கண்களை நான் நம்பலாமா? இல்லை, இல்லை. ஓ! அஃது என் நண்பன்தான். (ஓடிப் போய்க் கட்டி அணைக்கின்றான்.) என்னன்பிற்குரிய இன்புடைப் பாங்க! பரிதியைக்கண்ட பங்கயம் போல வுன்னைக்கண் டென் முகம் மலராநின்றது. நிலவையுண்ட நிலாமுகி போல உள்ளங் குளிரா நின்றது. பிரிந்த சேயை யடைந்த தாய்போல அன்பு பெருகி உளம்நிறைந்து புறம்பொசிதலினால்

மயிர்க்காறோறும் திவலை பொடியாநின்றன. நாத் தழுதழுக்கின்றது. என்னையறியாமலே என் கைகள் உன்னைக் கட்டியணைக்கின்றன. கண்கள் குளிர்ந்து இன்பக் கண்ணீர் சொரிகின்றன. என்னன்பனே! என்னைவிட்டுப் பிரிந்து என்செய்தனை? யாண்டுறைந்தனை? இங்கே எங்ஙனம் வந்தனை? இவையெல்லாவற்றையுங்கூறி என்செவியைக் குளிர்விப்பாயாக.

**அறிவன்:—** பெருகிய அன்புடையரசிளங்குமர! நீ நீடூழிவாழி. துணையைக்கெடுத்த அன்றில் அதனையடைந்தவழி இன்புறுதல்போல உன்னையடைந்து இன்புறுகின்றேன். எம்பெருமான்! அன்று மத்திய புவனக் காட்டிலே யாம் வேட்டைபோந்து விளையாடாநிற்புழி, நீ ஓர் பொறிமயிற் போர்வைக் கவர்மருப்பிரலையைத் துரத்திச்சென்றாயாக, யானும் ஆண்டுவந்ததோர் எய்ப்போத்தினைக்கண்டு அதனைக் கொல்லவிரும்பி வரிவிற் குனித்து நெடுநாண் பூட்டி ஓர் சுடுசரந் தொடுத்தேன். எவுண்டதால் வெகுளிபெருகி வெறிகொண்ட அவ்வெய்ப்போத்து கடுவிசையிற் கால்பெயர்ந்தோடி ஓர் விடகரம் புக்குமறைய, அதனைத் துரந்துசென்ற யான் கடுவிடாய்கொண்டு சுனைநீர் தேடி மலையெலாமலைந்து ஆங்கோர் பூவுறை கமல வாவியைக்கண்டு தலைப்பட்டு விடாய்தீரத் தெளிபுனல் மாந்தி இளைப்பொழிந்தேன். பின்னர் நினக்கும் உண்ணீர் மொண்டுவரவெண்ணித் தேக்கிலை பறித்துத் தொன்னை

கோலி அது நிறையச் செழும்புனல் மொண்டு கொண்டு நின்னைநாடி வந்தேன். அங்கே ஏந்தலே! உன்னைக் காணாது அவலித்தரற்றிக் கவலித்து கையாற்றின் நெஞ்சழுங்கி நின்றேன். நின்று எங்கணுந் தேடி அலமந்து திரிந்தேன். அங்ஙனம் ஒருநாட் கழிந்தது. பின்பு ஓர் அருந்தவ முனிவன் அருளினால் உனக்குற்ற துயர் கேட்டுக் கவன்று அவனருளிய மந்திரவலத்தால் உருமாறி அருவமாகி நீ இங்கே சிறையிடப்பட்ட அற்றை நாளே இங்கு வந்து நினக்குக் கட்புலனாகாது உடனுறைவேனாயினேன். "சிற்றின்பவல்லியை வெறுத்தொதுக்கிய ஞான்று நீ வெளிப்பட்டு அரசிளங்குமரனை யடைவாய்" என்று முனிவர் பிரான் கூறியபடி இன்றுன்னை யடையப்பெற்றேன்.

**உயிரிளங்குமரன் :—** உழுவ லன்புடைய நண்ப! இறைவனுயிர்க்குயிராய் மறைந்திருப்பதுபோல நீயுமிங்கு தோன்றாத்துணையாய் மறைந்திருந்தனை. சிற்றின்பவல்லியை வென்றுவிட்டேன். வெள்ளியங்கிரியை யடைதல்வேண்டும். இதற்கு இனி யாம் செய்ய வேண்டியதென்ன? ஆராய்ந்து கூறுதி.

**அறிவன் :—** இளவரசே! முனிவர் கூறிய மறைபொருள் இன்னுமொன்றுண்டு. வெளிப்புறத்தை நோக்கப் பலவகையாலும் அருவருப்பையும், வாலாமையையுங் காட்டுகின்ற இக் காயாபுரிக்கோட்டையினுள்ளே மிகவு மழகியதொரு சுருங்கைவழி இருக்

கிறது. இக்கோட்டையி னுச்சியிலேயுள்ள முக்கோண வடிவுடைய சாளரத்தி னிரு கதவையுங் காற்றியங்காது மூடிவிட உள்ளே யொருவழி தோன்றும். அவ்வழிவழியே உள்நுழைந்து மேலேறிச் சென்றால் பலவித வடிவமைத்துக் கட்டப்பட்ட ஆறு மண்டபங்களைக் காணலாம். அவை கடந்து மேற்போனால் ஓர் பெருவெளிதோன்றும், அவ்வெளியைக் கண்டவுடன் வெள்ளியங்கிரியை யடையலாம். நாமதற்கு முயற்சிசெய்தல் வேண்டும். அதுகிடக்கச் சிற்றின்பவல்லியா லேவப்பட்டு இருண்மலவேந்தன் எங்கட் கேதஞ்செய்யநினைந்து இங்கேவருவன். அவனையும் வலி தொலைத்தபின்பே யாம் வெள்ளியங்கிரி புகுதல்வேண்டும்.

**உயிரிளங்குமரன் :—** என் மனதொத்த நண்ப! நானிது நாள்வரையில் இக்காயாபுரிக்குள் இருந்தும் நீகூறிய சுருங்கைவழியை யறிந்திலேன். நீ அதை முனிவர்பாலறிந்துவந்தது நமக்கு வாய்ப்பாயிற்று. அதுகிடக்க நீகண்ட முனிவர்பால் என்னுயிர்க்குயிரான பேரின்பவல்லியைப்பற்றி ஏதாவது கேட்டாயா? கேட்டதுண்டேற் கூறுதி.

**அறிவன் :—** பெருந்தகாய்! ஆம், ஆம்! அவளைப்பற்றியுங் கேட்டேன். உன்னைப் பொழிலிடைக்கண்ட ஞான்று தொட்டு உன்மேலே காதலுங் கருத்துமுடையளாய் மிகவும் வருந்தாநின்று ஒருநாள் ஓர் ஊழிபோற் கழிக்கின்றா ளென்றும், கட்டுவித்தி ஒருத்தி சொன்ன குறிகேட்டுத் தோழிகள்

தேற்றத் தேறியிருக்கின்ருள் என்றும் அவர் கூறினர்.

**உயிரிளங்குமரன் :—** அப்படியா? ஐயையோ! பொழிலிடைப் பார்த்தபொழுதே தன் காதற்குறிப்பைக் கண்ணிஞற் காட்டிச்சென்ற அப்பெண்ணமுதைத் தீவினையேன் இதுநாள்காறும் மறந்திருந்தேனே. அவளுடைய வுருவம் அனைத்தும் இப்பொழுது என் கண்முன்னே தோன்றுகின்றன. காதல் பெருகாநின்றது. உள்ள முருகுகின்றது. என்புதானும் உலேமெழுகாகின்றது. ஆகா! அவளை யான்,

மலையிடைப் பிறவா மணியென் பேனே
அலையிடைப் பிறவா வமுதென் பேனே
மலரிடைப் பிறவா மணமென் பேனே
யாழிடைப் பிறவா விசையென் பேனே
சொல்வது மறியேன் செய்வது மறியேன்.

[சோருகின்ருன்]

**அறிவன் :—** (அவனைத் தூக்கித் தேற்றி) அன்பனே! கவலையொழிக. எண்ணிய பொருளை விரைவினிலடைவோம். உறுதியாக விருப்பாயாக.

**உயிரிளங்குமரன் :—** நண்பா!

பரிதிகண் மறைந்தனன் பறவைபாட் டடங்கின
குருதிவிண் ணடைந்திட மருண்மாலை குறுகுமால்
குருதிவிண் ணடைந்திட மருண்மாலை குறுகுமேல்
அரிதரி துயிர்நிலை யாற்றேன்நான் அன்பனே.

நண்பனே! தணந்தாரை விரைந்துகொல்லும் இம் மருண்மாலை என்னுயிரை வாங்காதிராது. அதோ பார்!

இருள்நிற மிருநீ ராக விரவிய
கொண்மூ வெண்ணுரைக் கூட்ட மாக
நாண்மீ னினங்கள் காண்மீ னாக
விண்ணினு மொருகடல் நண்ணுதற் குண்டென
அடிவா னத்தை யிடனாக் கொண்டு
வடவையஞ் செந்தீ புடைபெயர்த் தெழுந்தென
விங்குவந் தெழுந்தது திங்களங் கொழுந்தே.

தெள்ளமுதத் துடன்பிறந்தும் சிவன்முடியி லேவளர்ந்தும்
எள்ளலிலாத் தண்கதிரென் றிசைபடைத்தும்எதிராக
உள்ளமெலாம் நைந்துருக வுடலெரிந்து கரியாக
அள்ளியழல் சொரிகுதியால் ஐயையோ யவிர்மதியே.

என்னகம் புண்ணாக எரியுமிழும் தழல்மதியே
உன்னகம் பெருநெருப்பென் றொருசிறிது மறியாதே
பொன்னாகப் புத்தேளிர் புத்தமுதென் றனைவிழுங்கிப்
பின்னாக வுமிழ்ந்திடுவார் பேதமைக்கு மிகவுளைந்தே.

வேறு

கன்னற் சிலையும் பூங்கணையும் கையு மாக வருமதனா
பின்னற் குஞ்சி சடையன்று சடையிற் புரிகள் பிறையன்று
வன்னப் பசப்பு நீறன்று மங்கை பாகன் நானல்லன்
என்னைப் பொருதல் சரியன்றால் என்னே யென்னே
யுன்னியல்பே.

வேறு

வேனிலான் கணைபட்ட விழுப்புண்ணின் விதுவுமிழ்
பானிலா வழல்படப் பதைப்பதும் பாராதே
நானிலா வகைசெயச் சிறுதென்றல் நஞ்சூற்ற
மேனிலா வன்றினும் கூவுமால் விதியேயோ.

நண்ப! நீ செய்வது என்னை! மன்மதனெய்த மலர்வாளிபட்ட புண்ணிடையே திங்கள் தீச்சொரியத் தென்றல் விடமூற்றா நின்றது. அது தீர்க்கவென்றெண்ணி நீ சிவிறிகொண்டு வீசுமது எரியுங் கொள்ளியை ஏறத்தள்ளுவதுபோல் எனக் கின்னலே புரிகின்றது. நண்ப! இவ்விரவு விடியாதோ! கடலொலி யவியாதோ! ஊழிக்காலம் புரண்டுவந்ததோ! என்னேயிது!

ஆழிவாய்ச் சத்த மடங்காதோ எல்வரக்கூஉம்
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஊழி
திரண்டதோ வின்று தினகரனுந் தேரும்
உருண்டவோ பாதாளத் துள்.

அறிவன் :— ஐயா! அரசிளங்குமர! மனநிலை தளராதே. ஆயிரங்கிரணத் தலரிவானவன் குணதிசைக் குன்றில்உதயமாகப்போகின்றான். நீஎழுந்திருப்பாயாக.

விருத்தம்

உண்கணை மயிர்கொள் முன்கை யுளநிறை மாய வல்லி
தன்கணை யிட்ட மாயத் தாம்பினை யறுத்து வென்ற
பொன்புனைகுமரற்கின்பம்பொருந்திடவறிவன் போந்தான்
நண்பனை யுடைய பேர்கள் நானிலத் துயர்ந்தோ ராமே.

(சு-ம் அங்கம், உ-ம் களம் முற்றிற்று)

ரு - ம் அங்கம் : க - ம் களம் :

**இடம் :** வெள்ளியங்கிரி நகரவீதி.

**காலம் :** முற்பகல்.

**நிகழ்ச்சி :** உயிரிளங்குமரனுக்கும், பேரின்பவல்லிக்கும் திருமணம் நிகழுமென்பதை முரசு கடிப்பிடூஉம் முதுக்குடிப்பிறந்தோன் முரசடித்து அறிவித்தல்.

[உயிரிளங்குமரனது ஞானமந்திர வாளினல் மாய வலை அறுந்துபோகத் தானும் வலி தொலைந்து சென்ற சிற்றின்பவல்லி தனது மாமனுகிய இருண்மலவேந்தனை யடைந்து நிகழ்ந்தனவற்றைக் கூறி யிரங்கியழுதாள். அதுகேட்ட இருண்மலவேந்தன் அடங்கா வெகுளி யுடையனுய்க் கண்களில் தீப்பொறி பறக்கப் புருவம் நெரித்துப் பல்லைக் கடித்துக் கைகொட்டிச் சிரித்து மந்திரிமாரை நோக்கி வஞ்சினம் பல கூறி அவருடன் எழுந்து உயிரிளங்குமரனைக் கொல்லுமாறு காயாபுரிக் கோட்டைக்குட் சென்றுன். அவன் வரவையறிந்து எழுந்த உயிரிளங்குமரன், ஞானமந்திரவாளைக் கையிலேந்திக்கொண்டு, அறிவன் என்னுந் தோழன் பின்னே நின்றுதவிபுரிய இருண்மலவேந்தனை யெதிர்த்து நெருங்கிய அளவிலே, அவனும் அமைச்சரும் வீரரும் சிறிது நேரம் மாறுபட்டுநின்று இகல்புரிந்து, பின்பு ஆற்று

ராய்ப் புறங்கொடுத் தோடினார்கள். முதுகிட்டோடு வோரைக் கோறல் தீதென வறிஞன் கூறக்கேட்டுக் கோபந்தணிந்த உயிரிளங்குமரன் வாளை யுறைபுகுத்தி அவனோடு சென்று, காயாபுரிக்கோட்டையின் முகப்பி லுள்ள முக்கோணச் சாளரத்தின் இரண்டு காலதரையு மடைக்கவே நடுவேயுள்ள சுருங்கைவழி வெளிப்பட்டது. உடனே அறிவனும் தானும் அதனுள் நுழைந்து செல்லும்பொழுது, அங்கே முக்கோண வடிவாயும் நாற் கோண வடிவாயும் ஏழாநாட் பிறைக்கோண வடிவாயும் அதன்மேல் முக்கோண வடிவாயும் அறுகோண வடி வாயும் கட்டப்பட்டுப் பலவித அலங்காரங்களோடு பொருந்தி விளங்கும் அரண்களையும், ஆண்டாண்டு விளங்கித் தோன்றுந் தெய்வங்களையுங் கண்டு வணங் கிக்கொண்டு அப்பாற்சென்று ஒரு பெரிய வெளியை யடைந்து நின்றபொழுது, சந்திரமண்டலத்தில்நின்று மொழுகிய அமுததாரை யவர்கள்மேற் பட இளைப் பொழிந்து பேரெழில்பெற்று விளங்கினார்கள். உடனே வெற்றியைக் குறித்து, ஊதப்படுவதாகிய ஓங்கார வடி வுடைய வலம்புரிச் சங்கின் ஓசை யெழுந்து முழங்கி யது. அந்தர துந்துபிகள் கறங்கின. வானவர் பூ மழை பொழிந்தார். உற்று நோக்கியபொழுது வெள்ளி மலையும் புலனாயது. அங்ஙனம் ஒருகாலும் காணாத வற்புதக் காட்சிகளைக் கண்டு குமரனும் தோழனும் விம்மிதமுங் குதூகலமு மெய்திநின்றாராக, சுப்பிர மணிய முனிவரும் திருநீலகண்ட மன்னனின் உறுதிச் சுற்றமும் அடியார்களும் ஆண்டுத் திரண்டுவந்து குழுமி அவர்களுக்கு நல்வரவு கூறி ஆடல் பாடல்களுடன்

அவர்களை யழைத்துக்கொண்டுபோய் வெள்ளியங்கிரியிலே பெற்றோருக்குமுன்னே விட்டார்கள். மைந்தன் மீண்டு வந்தமையைக் கண்ட தாய் தந்தையர் அக மிக மகிழ்ந்து கட்டியணைத்து உச்சிமோந்து மடிமீ திருத்தி முறை முறையே மகிழ்ச்சிகொண்டாடினார்கள். நிகழ்ந்தவற்றைக் குமாரன் கூறக்கேட்டு அச்சமும் விம்மிதமுமடைந்தார்கள். பின்னர் குமாரனுக்குத் திருமணஞ் செய்யப் பல்வேறு ஆயத்தங்களையும் செய்வித்தார்கள்.

உயிரிளங்குமரன் மீண்டு வந்ததைத் தோழிமார் வாயிலாக வறிந்த பேரின்பவல்லி அடங்கா மகிழ்ச்சியடைந்து 'திருமணம் எப்போது நிகழுமோ?' என்ற ஆவலுடன் காத்திருந்தாள்.

அப்போது சுப்பிரமணிய முனிவர் உயிரிளங்குமரனுக்கும் பேரின்பவல்லிக்கும் திருமணத்துக்குரிய நல்ல நாளையும் ஓரையையுங் குறித்து, அதனைத் திருநீலகண்ட மன்னனுக்கறிவிக்க, அவர் முரசுகடிப்பிடூஉம் முதுகுடிப்பிறந்த வள்ளுவனை அழைப்பித்து மாநகர்க்குத் தெரிவிக்குமாறு பணித்தார். அவன் வீதிகள் தோறும் சென்று மணநிகழ்ச்சியை அறிவியாநின்றான்.]

**நாதப்பறையன் :—**

தந்த தத்தன தனத தத்தன
தந்த தத்தன தான தத்தன.

அந்த மின்றிய சிவசி தம்பரன்
அம்மை சங்கரி யோடு கூடவே. (க)

அம்மை சங்கரி குடிலை பார்த்திட
அங்கு வந்தனர் விந்து நாதரே. (உ)

விந்து நாத ரெழுந்து கூடிட
வந்து தோன்றின பறையர் நாங்களே. (ந)

தனந்த தத்த தனதன தத்த
தனந்த தத்த தனதன தத்த.

பயின்று நின்றே தரிகிட தத்தம்
பரம்பொன் மன்றில் அநுதினம் நிர்த்தம்
முயன் றிடுங்கால் அருகினில் நித்தம்
முழங்கு கின்ற பறையெம தத்தம். (க)

இயைந் தெழுந்த இசையினில் நிற்கும்
இனந் தெரிந்த வரியினில் நிற்கும்
சிவன் கரஞ்செந் துடியினில் நிற்கும்
தெரிந்த எங்கள் பறையொலி யத்தம். (உ)

வேறு

வேத நான்கும் தோன்றமுன் றோன்றிய
நாதப் பறையர் நாங்களே. (க)

விந்து நாதம் நின்றமுன் றோன்றிய
சந்தப் பறையர் நாங்களே. (உ)

வேத வேதியர் தோன்றமுன் றோன்றிய
நாதப் பறையர் நாங்களே. (ந)

நீதி லயன்மால் தோன்றமுன் றோன்றிய
ஆதிப் பறையர் நாங்களே. (ச)

வேறு

பிள்ளையார் சுழி எங்கள் கையிலே
பெரிய மந்திரம் எங்கள் கையிலே
தெள்ளு செந்தமிழ் எங்கள் கையிலே
சீர்கொ ளாரியம் எங்கள் கையிலே.

**குடியானவன் :—** இழை நக்கி நூல் நெரிடும் ஏழைப் பறையா, என்னடா மிச்சம் புகழ்ந்துகொண்டு நின்று கூத்தாடுகிறாய். என்ன சங்கதி.

**பறையன் :—** என்னவாக்கும் வன்னியசேகர முதலி. என்ன? நயினைத்தையு மிப்படிச்சொல்லுகிறது. இழை நக்கி நூல் நெரிடுவது இழிந்த தொழிலாக்கும். நயினத்தை எப்பன் நின்று கேட்க :

ஆண்டை மார்களே ! நயினத்தை மார்களே !
ஈண்டுக் கூறுதல் வேண்டிக் கேண்மினோ !
மண் டிணிந்த கரும பூமியில்
வந் தெழுந்த மனித உயிருக்
கின்றி யமையா விரண்டு காரியம்
உண்டி யொன்றே உடைமற் றொன்றே
ஏரி னுழுத லுண்டி யுதவும்
நூலி னெசவு சீலை யுதவும்
ஏரி னுழவும் நூலி னெசவும்
ஒன்றி னுயர்ந்த தொன்ற தல்ல
ஈடு கூற வேறு முண்டோ
உடையை யுதவும் நெசவு தொழிலோ
மானங் காக்கும் வளங்க ளாக்கும்

ஈனம் போக்கும் எழிலைச் சேர்க்கும்
பொன்னைக் கொடுக்கும் புகழை யெடுக்கும்
அடிமை நீக்கும் மிடியைப் போக்கும்
அரசை மீட்கும் குடியைக் காக்கும்
சோம்பை வீக்கும் தொழிலை யாக்கும்
நெசவு தொழிலை யிழிவு தொழிலாம்
ஆண்டை மார்களே! நயிந்தை மார்களே!
தெள்ளிய நீதி வள்ளுவன் செய்த
எள்ளலில் தொழிலும் நெசவு தொழிலே
ஏந்தும் புகழ்ச்சிக் காந்தி யடிகள்
தேர்ந்து கொண்டதும் நெசவு தொழிலே
ஆதி சிதம்பர நாத னெங்களுக்
கம்மை சுந்தரி யோடு தந்திடு
நீதி யான நெசவு தொழிலை
நீங்கள் விடுத்த நேரந் தொடங்கி
வறுமை வந்தது. பெருமை நின்றது.
அரசு போனது. அடிமை யானது.
பெண்கள் தந்தொழில் விட்டுக் கெட்டனர்.
பேதை மார்கள் சோம்பிக் கெட்டனர்.
பாவை யெடுங்கள். தறியை நடுங்கள்.
காலை மாலை நூலை நூலுங்கள்.
ஆடை நெய்யுங்கள் பீடை போய்விடும்
இழந்த வரசியல் பெற்று
வளம்பெற வாழலாம் வாய்மையீங் கிதுவே.

**குடியானவன் :—** அடே சாம்பான், சொல்விளம்பி நிரம்பப் பாவித்தாயா? இவ்வளவு வெறிக்கள்ளு எவ்விடத்தில் அம்பிட்டது.

**பறையன் :—** நான் நயிந்தை! நான் குடித்த கள்ளு உங்கே ஒருவரும் குடிக்கவில்லை. அவர்கட்குக் கிடைக்கவும் மாட்டாது. நயிந்தை சொல்லுறேன் கேட்க :—

முக்கோண மான நெடுந்தீவி லங்கு
முளைத் தெழுந்ததோர் தாலப்பனை
அக்கோண மாறையுந் தாண்டி நிமிர்ந்தெழுந்
தப்பாலும் போனதத் தாலப்பனை. (க)

அந்தப் பனையிலோர் வெள்ளைப்பா ளைவந்து
அறிவன் தடியினுற் றட்டிவிட
முந்தி யொழுகிய வெள்ளைக்கள் ளைச்சப்பி
மூக்குமுட் டக்குடித் தேன்நயிந்தே. (உ)

ஆறுதலங் கண்டேன் அப்பால் வெளிகண்டேன்
அவ்வெளி யூடொரு சோதிகண்டேன்
ஏறுவெறி கண்டேன் அந்த வெறியினுல்
என்னையுங் கண்டில னென்னயிந்தே. (ங)

**குடியானவன் :—** தீண்டாத சாதிப் பறையா! கள்ளைக் கொள்ளையாகக் குடித்துவிட்டுவந்து அறம்புறமாய் வெறிகொண்டாடுகிருய்? அப்புறம் போடா.

**பறையன் :—**

தீண்டாத சாதிரா மென்றே—எம்மைச்
சேராது விடவேண்டாம் ஆண்டமாரே
ஆண்டவ னூர்படைப் பில்—நாங்கள்
அரியபடைப் பாமையே யாண்டமார்களே

அரசன் பணி புரிகுவோம்—கலி
யாணமுரசினுக் கறைந்தறி விப்போம்
உரிமை செசவு தொழிலால்—உங்கட்
கோதுமுடை தந்துமது மானங்காப்போம்
சாவுக் குரிமை யுடனே—வந்து
தக்கபறை கொட்டுகுடி மக்களியாமே
வாழ்வுக்கு முங்கள் முன்றிலில்—வந்து
வாழ்த்துகின்ற நல்லகுடி மக்களியாமே
புலையரென் றெம்மைத் தள்ளுவீர்—கல்வி
புகட்டாது விட்டதனுற் புலையராஞேம்
உலைவிலாக் கல்விதந் தீரேல்—நாங்கள்
உங்களைப்போ லாசார முடையராகுவோம்.

**குடியானவன் :—** அடா அவன் கள்ளைக்குடித்து வெறியேறி ஞானம்பேசுகிறுன். அதுகிடக்க என்னடா பறை.

**பறையன் :—** நான் நயிந்தை வெறியிலே. என்னென்னவோ பேசுகிற னெண்ணுது. கிடக்கட்டும், பறையடிக்கிற சங்கதியைக் கேட்க :—

கருவி மாமுகில் பருவமழை பொழிக
மன்னவர் மன்னவன் செங்கோல் நீடுக
மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
தீதின் ருகத் திருவளர்ந் தோங்குக
பசியும் பிணியும் பகையும் நீங்குக
அசைவில் பெருவள மகனிலம் சுரக்க
இருநில மக்க ளியாவருங் கேண்மின் !

விரிபுகழ் வெள்ளி வியன்கிரி யாளும்
மன்னவர் மன்னன் வானவர் காவலன்
ஒன்னலர் கோளரி யுற்றவர் கற்பகம்
பொன்னொரு பாகன் தன்னிக ரேகன்
நீல கண்டன் பாலக னென
செயிர்தீ ருயிரிளங் குமரநா யகற்கும்
அழகினில் மலர்மா னறிவினிற் கலைமான்
நல்ல பேரின்ப வல்லி நாயகிக்கும்
ஆன்றவ ராய்ந்த வருந்தமிழ் முறைப்படி
ஏன்ற கடிமண மின்றெனக் கொட் டாநாள்
மேவரு மாதலின் யாவரும் வம்மின்!
விளவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின்! புதுமணல் பரப்புமின்!
நித்திலப் பந்தர்கள் பத்தியி னிடுமின்!
நீல விதானம் வாலிதி னமைமின்!
பூரண கும்பம் பொலிவுற வைமின்!
பாவை விளக்குப் பலவுடன் பரப்புமின்!
பொன்னம் பாலிகை மண்ணிடை நிரைமின்!
காய்க்குலைக் கமுகும் வாழையுங் கரும்பும்
பூக்கொடி வல்லியும் வஞ்சியு மமைமின்!
பத்தித் திண்ணையும் பசும்பொற் றாணத்துத்
தொத்துத் தாமம் துயல்வர நாற்றுமின்!
சீலைக் கொடிகளும் சித்திரத் துவசமும்
சாலையும் மாடமும் மேலுற வமைமின்!
அன்னச் சாலையும் தண்ணீர்ப் பந்தரும்
வன்ன மஞ்சனச் சாலையு மமைமின்!
அருந்தவர்க் கீமின்! ஆதுலர்க் கருத்துமின்!

பற்று மாக்க டம்முட னாயினும்
செற்றமுங் கலாமும் செய்யா தகனுடின் !
ஆணும் பெண்ணு மாமிரு திறத்தரும்
அணிவன வணிந்து புனைவன புனைந்து
முடிப்பன முடித்துப் பூசுவ பூசி
திருமணக் காட்சி காண
வருகுதிர் மன்னர் மன்னன்கட் டளையே.

இது தானுக்கும் பறை. நான் நயிந்தை நாலு தெருவுஞ்சுற்றி அடித்துக்கொண்டு வரவேணும். பின்னை நிக்க நயிந்தை வாறேன்.

[பறையன் போகிறான்]

## விருத்தம்

படிமிசைக் குமரன் வெள்ளிப் பரங்கிரி யெய்தி யாங்கே
கடிகமழ் முல்லைப் பைந்தார்க் கருங்குழ லின்ப வல்லி
துடியிடைவ துவையூர்க்குச்சொற்றனன் பறையனென்பர்
குடிமகள் பெருமை தன்னைக் கூறிடற் கெளிய தாமோ.

(ரு - ம் அங்கம், க - ம் களம் முற்றிற்று.)

ரு-ம் அங்கம்: உ-ம் களம்:

இடம்: வெள்ளியங்கிரி யரண்மனை.

காலம்: நடுப்பகல்.

நிகழ்ச்சி: திருமணம்.

சுப்பிரமணியமுனிவர் :- அரசர் பெருமானே! கடிமணத்திற்குக் குறித்த முகூர்த்தம் நெருங்கியது. இனி மணமகளை மஞ்சன நீராட்டி அலங்கரிப்பித்து மணவறைக் கழைத்துவரக் கட்டளையிட்டருள்க.

நீலகண்டமன்னன் :- (சிவகாமித் தாயாரைப்பார்த்து) பூங்கொடிபோல்வாய்! மணமகளை யலங்கரிப்பித்து மணவறைக் கழைத்து வருதற்குச் சேடியரிடம் கட்டளையிடுவாயாக.

சிவகாமித்தாயார் :- அடி ஞானப்பூங்கோதாய்! மணமகளுக்கு,

ஐந்து விரையினும் ஐயிரு துவரினும்
ஈரெட் டிரட்டி யோமாலி கையினும்
ஊறிய நந்நீர் உரைத்த வாசநெய்
நறுவார் குழற்கு நலம்பெற வாட்டி
புகையிற் புலர்த்தி வகைபெற முடிமின்!
களபச் சேறு வளமுற ஆட்டிப்
பஞ்சின்மெல் லடிக்குப் பஞ்சி யெழுதுமின்!
மகர வாழி பீலி காலாழி •

வகைபெறு விரலணி மெல்விரற் செறிமின் !
பாத சாலம் பாடகஞ் சிலம்பு
நாதக் கிண்கிணி நல்லடிக் கணிமின் !
தவாஅ மணிசேர் கவாஅனணி செறித்து
நீலப் பூந்துகில் நிறங்கிள ருடைமேல்
வாலிய விரிசிகை வளம்பெற வளைமின் !
கண்டார் விழையுங் கண்டிகை தன்னொடு
தண்டாத் தூமணித் தோள்வளை சார்த்துமின் !
சூடகங் கைவளை வால்வளை பரியகம்
பீடுறு முன்கை பிறங்கிட வணிமின் !
ஆய்ந்த மாணிக்க ஆழியும் பிறவும்
காந்தண் மெல்விரல் கரப்ப வணிமின் !
நலம்பெறு வீர சங்கிலி பூண்ஞாண்
வலம்புரிக் கழுத்தி லாரமோ டணிமின் !
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைமின் !
இந்திர நீலமும் வயிரமுங் குயிற்றிய
சுந்தரக் கடிப்பிணைக் காதினிற் றொடுமின் !
சீதேவி யென்னுந் தெய்வப் பணியுடன்
வலம்புரி பூரப் பாளை வடதென்
பல்லி வகையும் மென்குழற் கணிந்து
விதுப்புறை பழித்த கதிர்ப்புறு நெற்றியில்
சிந்துரத் திலகந் தீட்டிக் கொந்தவிழ்
கோதை வேய்ந்து குறைபல தீர
நெய்யோ டையவி யிட்டுப் பையென
அனிச்சம் பூமே லடியிணை பொருந்த
தனிப்பொலங் கொடியினைத் தம்மினோ வீண்டே.

(சேடியர்கள் பேரின்பவல்லியை மஞ்சனமாட்டி ஆடைபுனைந் தணியணிந்து மணப்பந்தரில் அழைத்துவந்து உயிரிளங்குமரனுக்கு அருகே நிறுத்த, அவள் தன் கையிலிருந்த மணமாலையை அவன் கழுத்திலிட்டாள். உயிரிளங்குமரனும் அவளுக்கு மணமாலை சூட்டிச் சுப்பிரமணியமுனிவர் மணவினைபுரிய மங்கலநாண் தரித்து எரிவலம் வந்து அருந்ததி கண்டிருந்தார்கள். அப்பொழுது பெரியோர் அறுகு மரிசியுங் கலந்து அடியிலும் முடியிலுமிட்டு வாழ்த்துகின்றார்கள்.)

வாழ்த்து

இன்பவல்லி குமரனோ டிரதியுமதனு மென்னவே
இன்றுபோல அன்புநீடி யினிதுவாழி வாழியே.

ஆலகால முண்டிருண்ட நீலகண்ட ராசபால
னைகுமர னின்பவல்லி அன்போடூழி வாழியே.

அறிவுமுயிரு மரியுமதியும் அலருமணமு மென்னவே
அன்புமருளு மின்புமகிழ்வு மாகவாழி யூழியே.

[குறத்தி வருகின்றாள்]

குறத்தி :— அம்மா! நானும் நல்லநேரத்தில் வந்தேன். நான் குறிசொன்னபொழுது அம்மா சிரித்தது நினைவிலிருக்கிறதா?

தோழி :- அம்மா! நீ சொன்னபடி எல்லாம் ஆய்விட்டது. நல்ல தருணத்தில் நீ வந்தாய். இப்பொழுது ஒரு சோபனம் படி.

[பாடுகிருள்]

சோபனஞ் சோபனஞ் சோபனமே சுப
சோபனஞ் சோபனஞ் சோபனமே

மாமண வாளற்கும் பேரின்ப வல்லிக்கும்
மன்னவர் மன்னற்குந் தேவியர்க்கும்
பூமலி மன்னுயிர் யாவுக்கும் பேரின்பம்
பொங்கிடச் சோபனஞ் சோபனமே.

கப்பற்பாட்டு

ஏலேலோ ஏலவலி—தத்தெய்யா
ஏலேலோ ஏலவலி
மாலான காயக்கப்பல்—வெகு
மாயமனே வேகக்கப்பல் .... (ஏலேலோ)

முடுகு

ஐம்பெரும் பூதத்தி னுருவ மாகி
அறுநாலு தத்துவப் பாய்மரம் நாட்டி
நம்புமறை யோரைந்தை யுள்ளே வகுத்து
நண்ணுகலை யாதியோ ரைவர்தொழில் புரிய
உம்பரோ ரைவர்நின் றுள்ளே யியக்க
உலகுவல மாயோடி வருகின்ற கப்பல் (ஏலேலோ)

மாறுத பிறவியெனும்—கொடிய
வாரிதியி லோடுங்கப்பல்

முடுகு

ஏறுவினை யெதிர்வினை யியற்றுவினை யாலே
இன்பதுன் பச்சரக் கேற்றிவரு கப்பல்
கூறுமிடை நடுநாடி பிங்கலைக ளென்ன
குலவுவளி யொருமூன்றி லேசுழலுங் கப்பல்
ஆதிபரா சத்தி சுக்கான் பிடிக்க
அவரின்கீ ழோரைவர் ஆஞ்சா ணிழுக்க
சோதியுள திருநீல கண்டமீ காமன்
சுற்றிவர வேவிட்ட வற்புதக் கப்பல் (ஏலேலோ)

**சுப்பிரமணியமுனிவர் :—**

ஆவன வுரைப்பன் யாவருங் கேண்மின் !
முந்நீர் வளைஇய விந்நெடும் புவியில்
எய்துதற் கரிய மக்கள் யாக்கையை
எய்தி நல்லுயி ரோன் றுகொண் டொழுகும்
அறமெனப்படுவ வோரிரண் டென்ப—அவைதாம்
இல்லறந் துறவற மென்றிசி னோரே
பின்னர்க் கூறிய பேரறங் கிளப்பின்
அகத்தி னசையும் புறத்தி னசையும்
ஐம்புலக் குறும்பும் வெம்பிட வாடி
சிந்தையுஞ் செல்லாச் சேணெடுந் தூரத்து
அந்தமி லின்ப மடையமோற் பதுவே
இல்லற வியல்பு சொல்லிய புகினே
துறந்தோர் தமக்கும் துவ்வா தோர்க்கும்
இறந்தவர் தமக்கும் இறையவர் தமக்கும்
அருந்தவர் தமக்கும் விருந்தினர் தமக்கும்
பற்றிய சுற்றத் தவர்க்கும் மற்றவர்க்கும்

அன்பு மருளுந் தாங்கி யின்புடன்
ஐம்புல நுகர்ச்சி மனையிடைப் பெற்று
பாலினுந் தேனினும் பழத்தினு மினிக்கும்
மழலைத் தீஞ்சொற் குறுகுறு தளர்நடை
கிண்கிணிச் சீறடி மைந்தரைத் தந்து
வாழுத லென்று வகுத்தனர் புலவர்
வாழுங் காலைத் தாழ்விலா தென்றுங்
காப்பன கேண்மின் ! கடிவன கேண்மின் !
" தெய்வந் தெளிமின் ! தெளிந்தோர்ப் பேணுமின் !
பொய்யுரை யஞ்சுமின் ! புறஞ்சொற் போற்றுமின் !
ஊனூண் டுறமின் ! உயிர்க்கொலை நீங்குமின் !
தானஞ் செய்மின் ! தவம்பல தாங்குமின் !
செய்நன்றி கொல்லன்மின் ! தீநட் பிகழ்மின் !
பொய்க்கரி போகன்மின் ! பொருண்மொழி நீங்கன்மின் !
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின் !
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின் !
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின் !
அறமனை காமின் ! அல்லவை கடிமின் !
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின் !
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின் !
மல்லல்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென."

மேற்கூறியபடி தீமையை விலக்கி நன்மை கடைப் பிடித்து என்றுமழியா வின்பமெய்தி வாழ்வீராக.

## வாழ்த்து.

மாதமும் மாரி பெய்க வளம்பல சுரக்க மன்னன்
நீதிலா தரசு செய்க செந்தமிழ் தழைத்து வாழ்க
ஏதமி லறங்க ளோங்க இறையரு ளோங்கு மல்க
ஓதுமைந் தெழுத்துநீறு மோங்குக வுலகமெல்லாம்.

வாழி திரு நீலகண்டன் வாழிசிவ காமியம்மை
வாழியுயி ரிளங்குமரன் வாழிபே ரின்பவல்லி
வாழிசுப் பிரமணிய மாமுனிவன் வாழியரோ
ஊழியவன் றொண்ட ருயர்ந்து.

(ரு - ம் அங்கம், உ - ம் களம் முற்றிற்று.)

# அனுபந்தம்

க-ம் அங்கம் : க-ம் களம் :

[பேரின்பவல்லியும் தோழியும் வனத்தின் அழகு காண்கின்றார்கள்]

இ-ம்—இந்-தோ. தா-ம்—ஆதி.

பே :—

இந்த வனத்தி னலங்காரம்—இதை
என்னினென் றுரைப்பே னிந்தநேரம்—நறு
முல்லை மலர்வண்டு ரீங்காரம்—மெச்சி
புல்லமயி லாடுஞ் சிங்காரம். .... இந்த

தோ :—

கார்வர விரிநறுங் கொன்றை—பசுங்
கனகஞ் சொரிவதுபா ரொன்றை—அதோ
சீர்பெறு பசுங்கிளி நின்றே—சுவை
தேன்மொழி பயில்வது நன்றே. .... கார்

பே :—

பாவலர் பகர்பாரி சாதம்—மறு
பூவி லுயர்ந்ததென் றன் வாதம்—மணம்
மேவும் மகிழ்ச்சியோ டொர்காதம்—தொட
மெய்யுங் குளிர்ந்து தரும்சீதம். .... பாவலர்

தோ :—

சண்பக மலரொடு முல்லை—பிற
சாதியி லுயர்ந்ததென் சொல்லை—எடு

பண்பொடு மூக்கிலே வல்லை—சொலும்
பாரி சாதமுள தொல்லை. .... .... சண்பக

(இதுவுமது)

இ—ம்—அமிர்தவாகினி. தா—ம்—ஆதி.

பே :-

மகிழ்ச்சி யுறுமனங் கவற்சி
கொள்வது மேனோ
கவற்சி கொள்வது மேனோ
காதல்மிகுந்த தோழி. .... .... மகிழ்

தோ :-

சந்தன விருட்சமதைத்
தழுவியின் புறுதல்போல்
தழுவியின் புறுதல்போல்
தலைவியின் புறுகதால். .... .... சந்தன

பே :-

கருங்குவளை மலரைக்
கண்டனையா எங்கேனும்
கண்டனையா எங்கேனும்
கண்களிரண்டை மானுங். .... .... கருங்

தோ :-

நீருள்ளோர் தாளில்நின்று
நிட்டைசெய்வதைக் கண்டேன்
நிட்டைசெய்வதைக் கண்டேன்
நினக்குத்தருவேன் தொண்டேன். .... நீருள்

[உயிரிளங்குமரன் வனத்தின் அழகுகண்டு கூறுவது]

இ-ம்—அரிகாம்போதி. தா-ம்—ஆதி.

உயிரி :—

பல்லவி

என்ன சிங்காரமே
வதழ காபுரி மீதினு மேமிகும் .... என்ன

மகுடங்கள்

எத்திக் கினுமழ கொத்துத் திகழ்தரு
முத்துப் புரிநிக ரொத்துத் துதைமலர் .... என்
என்னிரண்டு கண்டெருண்
டெழுந்தகங் குளிர்ந்திலங்க .... .... என்

சரணங்கள்

என்னஎன்ன பேரழகு
என்னஎன்ன கீதஇசை
வன்னமயி லாடுமெழில்
மாங்குயில்கள் கூவிமிசை
அன்னமிசை வாவியிடை
அங்கமல பீடமடை
துன்னுமலர்ப் பூகநிரை
சோதிவிரி சோலைவரை
சுந்தர மிகுந்திலங்குங் காட்சி—நாவால்
சொல்லமுடி யாதேவெகு மாட்சி—உயர்
அந்தரத் தவர்கள்புரியு மாட்சி—இதற்
காருமிலை நானேயொரு சாட்சி
ஆரமேவுவாச மீதுலாவுநேச
நீடுல்லாச மேவுதென்றல் வீச .... என்

[உயிரிளங்குமரன் பேரின்பவல்லியைக்கண்டு கூறுவது]

இ-ம்—பியாறு. தா-ம்—ஏகம்.

யாரோ தெரியவில்லையே—என்முன்நிற்பவள்—யாரோ
சீராரும் பாற்கடலில்—சேருந் திருமகளோ
ஏரா ரிசைத்தமிழை
எங்களுக்கீன்றருள் வெண்கமலப் பொன்னோ—யாரோ

[பேரின்பவல்லி உயிரிளங்குமரனைக் கண்டு கூறுவது]

**நீற்கநிற்கச்சோ.** (மெட்டு)

என்—உள்ளமெல்லாங் கொள்ளை கொள்ளும்
வள்ளலிவனோ—இவன்
கொள்ளுமருண் நோக்கமென்னை
மெள்ள மெள்ள உள்ளுருக்கும்—உள்ள

**க-ம் அங்கம்:** **உ-ம் களம்:**

[சிவகாமித்தாயார் திருநீலகண்டனை வணங்குவது]

மதியணிந்தசிவ (என்னும் சந்தப்படி)

அடிபணிந்தேன்—ஆருயிர்நாதனே
அம்புவியில் மன்னர்பணி
செம்பொற்பாதனே
ஆழிசூழுலகமதில்
வாழியூழி வளமுடனே
தாமரை யேபுரை தேமேவரு
சார்பாயே சீர்தாழ் வேயிலா .... .... அடி

நல்லது மாதவி (மெட்டு)

**திருநீலகண்டன் :-**

முன்னொரு நாளு மில்லாதே—யின்று
மூண்ட கவலையென் மாதே—யிஃ
தென்னுட னுள்ளதோர் சூதே—எனக்
கியம்புதிநீ வாய் கூசாதே .... .... முன்

நல்வாக்கு (மெட்டு)

**உயிரிளங்குமரன் :-**

நல்லாசி தாருமம்மா
நான்வேட்டை யாடிவர
நான்வேட்டை யாடியிவண்
நாடவரந் தாருமம்மா.

**சிவகாமித்தாய் :-**

உன்னை வனம்விடுக்க—மனம்
ஒப்புமோடா கண்மணியே
ஒப்புமோடா கண்மணியே—இந்த
ஒண்டொடிநான் என்னசெய்வேன்.

**தாய் :-**

ஆங்காரமான சிங்கம்—அங்கு
நீங்காத கோபப்புலி
ஆசைப்பேய் வாழும்வனம்—நீ
அங்குசெல்வதே கவனம்.

**குமரன் :-**

தந்தைதாய ருங்கள் துணை
சார்பிருக்க எந்தனுக்கு

எந்தவினை வந்துசேரும்—என்
தாயேயநீ யஞ்சாதிரும்.

*தாய் :—*

வஞ்சனை புரியும்மோக
வல்லி யெனுங்கொடியாள்
நஞ்சமிர்தந் தந்துபொல்லா—மாய
வஞ்சவலை வீசிவெல்வாள்.

*குமரன் :—*

அன்னையைப்போ லாதரிக்கும்
அறிவனென் னோடிருக்க
பின்னமென்ன வந்துசேரும்—என்னைப்
பெற்றதாய் விடையீகுவாய்.

*தாய் :—*

போய்வருவாய் சுகமே—இந்தப்
பூவைசொற்படி செயமே
நீவருவாய் மகனே—நின்
தந்தைநினைவாய்ச் சுதனே.

**க - ம் அங்கம் : ௩ - ம் களம் :**

[இருண்மலவேந்தன் மந்திரிமாருடன் வருதல்]

மானே வாடி (மெட்டு)

யாதுசெய்வ தோதுவீரே
நீதிமதி மந்திரிமாரே—யாது
ஞானநீல கண்டன்மகன்
இதோகானில் வேட்டையாடி

அங்குதிற்கி றனெனவே
யிங்கிவன் சொன்னான்
எனதாற்றலை யுன்னான்—வெகு
மாற்றல னன்னான்
மானமுடனேயிவனே .... .... யாது

சாலவபுரிது (மெட்டு)

**சிற்றின்பவல்லி :—**

வந்தனம் புரிந்தேனென் மாமாவே—உன்றன்
செந்தளிர்ப் பதவிணை சேர்ந்தேனே
எந்தனை யழைத்ததேது ளக்கருத்தோ
இன்புற உரைப்பீரென் கோமானே—யானை
யுன்புடை யாக்குவதென் சீமானே .... வந்

இ-ம்—சங்கராபரணம், தா-ம்—சாபு

**இருண்மலவேந்தன் :—**

காட்டிலே நின்று வேட்டை யாடுகிறான்
அவனைநீயும் மாட்டியே—மயல்
காட்டிக் கூட்டிடுவாய்
கூட்டு வாயெனில் வாட்டு மன்னனை
விட்டியே ஜெயங் காட்டுவேன் யான்
நாட்டி லுள்ளவர் கேட் டுளங்களி
யாட் டயர்ந்திட நீலன் மகனவன் .... காட்

சரசக்காற (மெட்டு)

**சிற்றின்பவல்லி :—**

ஆசையுள்ள மாமா—எந்தன்
அரியதந்திரம் பேரமா .... .... ஆசை

நேசமுள என் ஆசைவலையை
வீசி அவனை நேசித்திருப்பேன் .... ஆசை

கனம் சந்த்ர மோகன (மெட்டு)

**உயிரிளங்குமரன் :—**

பளிங்குக்கற் பதித்தபொற்
பசுமையிட்டிய மூன்று
பட்டின மெதுவெனப்
பகர்ந்திடுவாய்.

**அறிவன் :—**

விசும்பில் வெண்மதிபோன்ற
விந்துமா நகர் தன்னில்
விளங்கிடு மீசனரண்
தெரிந்திடுவாய்.

**உயிரிளங்குமரன் :—**

வெண்மையுடன் பொன்சேர்ந்து
விளங்கும் இராச்சியமேதென்
றுண்மையுட னெனக்கு
உணர்த்திடுவாய்.

**அறிவன் :—**

ஆண்மை மிகுத்துளவெம்
அரசற்கரசர் தம்மின்
தாழ்மைசெய் அநந்தரின்
தங்குமோ கனபுரி.

**உயிரிளங்குமரன் :—**

பரிதியி னொளிகாணாப்
பான்மைய னேகவில்லம்
தெரிகுதலை யேதெனச்
செப்பிடுவாய்.

**அறிவன் :—**

அரசனாணையை மீறி
அவத்தொழில் செய்துளோரை
அடைத்து வைத்திடுமரண்
அறிந்திடுவாய்.

**உயிரிளங்குமரன் :—**

சுற்றிவந்தேன் (மெட்டு)

கண்டங் கண்டமா யுடலைத்
துண்டந் துண்டமாக வெட்டி
காக்கை அருந்தஅவர் நாக்கை யறுப்பாரதை
கண்டே யச்சம்நான் கொண்டேனே—அலறியென்
விண்டே விம்மிதங் கொண்டேனே. [வாய்

செக்கி லுடலதை யிட்டு
நெக்க நெக்கவே நெரித்து
செக்கச் சிவந்த செம்மை
நக்க நலிசெய்து பின்னும்
செக்குலக்கையா லடிப்பாரே—நண்பா இதைநான்
செப்பவே இதாகாதாகாதே—ஐயையோ வேறு
தொக்கவிட மதனையார்க்கும்
மிக்க களிப்புடன் அருத்தும்

துட்ட ருடலதை வெட்டி
கிட்டி புனைந்து வேறு
தூக்கினிலே போட்டிடுவாரே—ஊசிமுனையை
நாட்டியதில் வாட்டிடுவாரே—இதிற்புகாது
தப்பிடவே வேறுவழி
அப்பனடி அர்ச்சனையே
செப்பமுடனே செய்வீரிச்
சிறைதனிலே சேர்த்திடிலோ .... கண்டங்

உ - ம் அங்கம் : உ - ம் களம் :

இ-ம்—தேசி. தா-ம்—ஆதி.

சிற்றின்பவல்லி :—

கோசிகப்பீதகமே கோதில் பச்சிலையாத்தம்
வாச நூண்டுகில் வடகம் வண்ணமிகு சுண்ணவுடை
நேசமுள்ள பஞ்சிரட்டு
நேர்மையுள்ள கவற்றுமடி இங்குமிகையே—எங்கள்
நகையே.

பொன்னெழுத்துக் குச்சரியே போற்றுபொங்கர் காளக
மென்மையுள்ள தேவகிரி வேறுமிந்திர கோபமுமே[மும்
வேணுலட்டுப் பாடகங்கள்
வேறுமுளசீலை வகையுமுடனே வளமுடனே திடமுடனே

காஸ்மீரமோடு குறுநாடு பறைஸ் பட்டுவகை
வீசுபுகழ் நார்மடியும் வேமாவொடு சீனவுடை
கோதையர்கட் காசையுள கோயம்புத்தூர்
சேலை வகையிலேயே எங்கள்கலையே எங்குமிலேயே

*வீரர் :—*

" அடிப்போ மடல்கெடுப்போம் — மூசத்
திடிப்போம் குடலெடுப்போம் — இடிப்
பொடிப்போம் வசைதுடைப்போம்—உயிர்
குடிப்போம் வழிதடுப்போம்—பழி
முடிப்போம் இனிநடப்போம்."

இ—ம்—சிறீரா. தா—ம்—ரூபகம்.

*உயிரிளங்குமரன் :—*

தினமேவன வேட்டை யாடிடுந்
தீர வீர சூரன் யானே .... .... தினமே

அநுபல்லவி

புனமே யழித்திடு மாமிர்கம்
தனையே வதை செயவே யிதோ
இனமான் மதகரி வேங்கையோ
டினதே மறைதனை நாடியே .... தினமே

சரணம்

எத்திக் கினுமுள யாளிசிங்
கத்தைச் சிதைசெய வேயிதோ
கத்தித் திரிந்திடுங் காண்டாமிர்
கத்தோ டருங்கடு வாவையே .... தினமே

*சிற்றின்பவல்லி :—*

காணக்காண என் கண்களுங் கூசுதே
கதிரொளிபோ லெங்கும் வீசுதே .... காணக்

நானே ஆதிசேட னாவேனென்றால்—அந்த
நான்முகப் பிரமன் தன்னால் ஆகுமோ
நாகரீகத் தொழிலே கற்றனர் சிற்பி
பூமிக்குள்–நாடிச்செய்–வேடிக்கை .... காணக்

என்ன சிங்காரம் இவன் ரூபமே—எனக்
கேற்ற எழிலாரிளம் பருவமே—இந்த
மன்னன் நடையுடை யொய்யாரமே—என்போல்
மாதர்மனம் வலிக்கும் மெய்யாரமே.

இ–ம்—காம்போதி. தா–ம்—ரூபகம்.

உயிரிளங்குமரன் :–

மானே மடமாமயிலோ குயிலோ—இந்த
மாதிவளுக் கேதுநிகர்
காதலுடனேதுமிவள் .... .... மானே

மழைகுழலோ விழிகயலோ
மதிநுதலோ வரிசிலையோ .... .... மானே

மன்னுந்துவ ரிதழேவகை
சின்னஞ்சிறு முகையேநகை .... மானே

மனத்திலா தரவேமிக
மலர்க்கணைவியுண்டீருக .... ... மானே

மதன்சரம் புகுந்தினம்
மதன்தருந் தினந்தினம் .... .... மானே

அநுபல்லவி

தேனே அவள் தேமலர்த் தூமொழி
தீமதுரப் பாகுவிதத் தோடளவு வாரமுனே-மானே

சரணம்

சாந்துணையுந் தவமே பெரிதே முயல்
வேந்தரையு மயலே வெறிதே புரி
வாய்ந்த செஞ்சரணக் கலசந் தோய்ந்த
வஞ்சிப் பூங்கொடி சீருடை
பஞ்சிற் சீறடி யேநடை
செஞ்சொற் றேமொழி தாவிடை
கஞ்சத் தேவளர் மாதிவள் .... மானே

இ-ம்—தேசிகம். தா-ம்—ஏகம்.

உயிரிளங்குமரன் :-

காட்டகத்தே யுலாவும் காரிகையே நீயார்? —யான்
கேட்டதிற்றுன் புரூது கிளத்துவாய்உன் ஊர்பேர்.

பேரின்பவல்லி :-

மாறுகொண்டெனை மறந்தால்
மன்னவா என் ஊர்பேர்
கூறுவதி லென்னபலன்?
கோவே நீர் புகல்வீர்.

உயிரிளங்குமரன் :-

என்னவென் றிசைத்திடு
என் மேற் பிணக்கைவிட்டு—ஆசை
மன்னுஉனை அன்றி சோலைகண்டனன் று தொட்டு.

௩ - ம் அங்கம் : க - ம் களம் :

என்ன பவஞ் செய்துள்ளேனோ என்ற மெட்டு

தோழி :—

அம்மனை கழங்கு பந்து
பொம்மைகள் புனைகிலாய் நீ—அம்மனை
நம்மோடு மொழி விளம்பி—நாடாததேதன் ?

பேரின்பவல்லி :—

உந்தனுக்கு நான்மறைத்து
எந்தனுளத் தோர்கருத்து—உந்
சுந்தரப்பொற்றோழி என்மனஞ்—சொல்லநாணுதே.

தோழி :—

என்னவென்று எந்தனுக்கு
வன்னமட மாமயிலே—என்ன
இங்கிமிடங் கூறிலுங்குறை—யீதோதீர்க்கிறேன்.

பேரின்பவல்லி :—

நெஞ்சையுருக்கிமனத்
தஞ்சுபுல னுங்கலங்தேன்—நெஞ்
வஞ்சிநான் மயங்கி நின்றேன்—வள்ளவிறைலே.

தோழி :—

நீலகண்ட வேந்தன்மகன்
நேரிளங் குமரன் அங்கே—நீல
சாலவன வேட்டையாட—சாமிவருவான்.

தோழி :—

காட்டிவைத்த தெய்வமும்மைக்
கூட்டிவைக்குமே கலங்கீர்—காட்டி
வாட்டமிக வேண்டாமினி—வாருமெம்மோடே.

மன்னவாநானிதற்கு (மெட்டு)

பேரின்பவல்லி :—

மனமது மிகவுருகுதே—மனமது
மாமதனுமே சினமா
யோதுமலர் வாளிவிட .... .... மனமது

அநுபல்லவி

வன்னப்பூஞ் சோலைதனில்
வந்துகண்ட என்னிறைவன்
பொன்னைப்போற் கருணைமுகம்
பொழிந்துவந்து காண்பதெப்போ
போதவிழிநீர் சொரிய
காதல்வெகு வாய்விரிய .... .... மனமது

எத்தனைதாமுறை (மெட்டு)

பேரின்பவல்லி :—

மண்ணினிலே யானிவனோர்
பெண்ணுரு வாய்ப்பிறக்க .... .... மண்

குறத்தி :—

கொஞ்சங் கஷ்டம் நோக்கிருக்கு
அஞ்சவேண்டா மம்மைநீ
நெஞ்சஎண்ணங் கொண்டமன்னன்
கொஞ்சிக் கூட்டிப்போகுவான்.

௩-ம் அங்கம் : உ-ம் களம் :

ஏழையென்போல் (மெட்டு)

*சிவகாமித்தாய் :—*

காலகண்டத் தெய்வமே
கலங்கிறேன் தியங்கிறேன் .... .... கால

காலாதி காலமாய்க் காணவில்லை
ஏலாதையாவினி யென்னசெய்வேன்
எந்தனைப்பார் என்வினைதீர் .... .... கால

காணேனே மைந்தனை என்னசெய்வேன்
வீணே கலங்கியா னெங்ஙன் உய்வேன்
காரிகையான் ஏதுசெய்வேன் ... .... கால

என்னவென் றெந்தனுக் கேயுரைப்பீர்
மன்னவா விப்பலனை யிசைப்பீர்
மாதுநானு மேதுசெய்வேன் .... கால

௪-ம் அங்கம் : க-ம் களம் :

கண்ணால் திரும்பி (மெட்டு)

*சிற்றின்பவல்லி :—*

ஐயாநான் செய்திட்ட தீங்கேதையா—இவ்
வடியாளைச் சற்றேறசண் பாருமையா .... ஐயா

*உயிரிளங்குமரன் :—*

பொய்யுரை நாடிப் புகல்வதேன்னேடி .... பொய்

**சிற்றின்பவல்லி :—**

பொன்னடி சூடிப் பணிந்தேன்—பொன்—ஐயா

முன்னொருநாளு மென்னுடனில்லா
வன்மமீதேதோ வல்வினைச்சூதோ
வாய்திறந்தே யென்னுரை
வழங்காத தேனோ

**உயிரிளங்குமரன் :—**

ஏதடி நீவெகு சூதாகவே—இங்குநீ பேசிடாதே போடி
விரைவாயோடி—இதுயார்மோடி .... .... ஏதடி

**சிற்றின்பவல்லி :—**

போடியென்றே நீர்புகல்வ தேனும்மை
நாடியே வந்த நாயகியென்னை
நான்புரி தீதேதையா
நாடியுரைப்பீரையா

தீதுருவாகியே வாதாடி—நீசேர்வதற்கே முயன்றாய்கஷ்
இதனால்நஷ்டம் இதுஎன்னிஷ்டம்—தீது [டம்

ஓ—ம்—பேலகிரி. தா—ம்—ரூபகம்.

**உயிரிளங்குமரன் :—**

கிட்ட வாராதே போடி—என்—கிட்ட
முட்டில் மாயத் தொட்டிட்டுத் தொட்டிட
மட்டில்லா விரகாய் .... .... கிட்ட

இன்ப மிருந்திடும் பேரின்ப வல்லிபோல்
முன்பு வனத்தினிற் றுன்புசெய் தாயேநீ
எத்தனை துயர் வைத்தனை யெனக்
கித்தனை சாலமாய்க் .... .... கிட்ட

இ-ம்—காம்போதி. தா-ம்—ஏகம்.

சிற்றின்பவல்லி :-

வேந்தனே—வேந்தனே
வெகுண்டேயெனை வெறுத்தனைபொல்லா .... வேந்
விரைவுடனென திருண்மலமன்னற்
கிதையுரைத்திவண் வருகுவேன்கூட்டி .... வேந்

சாந்தமாயெனை யணைந்திடுகெனத்
தடுத்துநீயெனை வெறுத்தனை
ஏந்தலேயென திருகரங்குவித்
திரந்துகேட்கவும் மறுத்தனை
ஏனிக்கோரமே—சென்றுகெடுப்
பேனுன்வீரமே
இதுவரையென துளமதையொரு
விதமமைதியோ டிருந்தேனே செல்வேன் .... வேந்

இ-ம்—தேசிகதோடி. தா-ம்—ஆதி.

பாங்கனைக் காணேன்—மன
தேங்கிடலானேன்
நீங்காதென் னுடனே—நின்றுவனவேட்டைவந்த
தீங்கானபோதுதவுஞ் சீரியவென்னுருயிர்போல்
திண்டிறற்றுங்கன்—என்னைத்
தேற்றிடுஞ்சிங்கன் .... .... பாங்கனைக்

காட்டிலெனைப்பிரிந்து கலங்கித்தவிக்கிருளோ
வாட்டமிகுந்திடவே வாடிவருந்திருளோ
காண்பதெப்போதோ—என்றன் கவலைதப்பாதோ
அறிவனெனும்பேர்கொண்ட அன்பான நண்பினனை
செறியும்மனங்குளிரத் தெரிசிப்பதென்றுகொலோ
சிந்தைசோருதே காணவென் புந்திகூருதே .... பாங்

திருமகளுலாவும் (மெட்டு)

அமரமுனிவோர்கள் திமிரமறநாடு
மரியகயிலாய முறவேண்டும்
அறிவுமிகுஞான பிரியமுறுநேச
அரியமதியாதோ வுரையாயே

மருவுதுணையூடு வெளிபுகவிடாது
மகிழ்வினுடனீடு மதியோடே
மனதுவிழிகாணு மரியவழிதோணு
மதுவழியிலேற வெளிகாணும்

எனதுயிரைமானு மரியவிழிமானை
இளநிலவுலாவு நகையாளை
வனமதனிலேசெ லனமதெனவேநில்
மடமயிலையேது புகல்வாயே

கருதரியகாத லுடனுனதுரூப
கமலமுகநாளு மறவாமல்
அரிதொருகமாக இரவுபகல்போக
அவளொர்குறிகூற •மனமாறி

தெள்ளமுதத் துடன்பிறந்தும்
சிவனடியி லேவளர்ந்தும்
எள்ளவிலாத் தண்கதிரென்
றிசைபடைத்து மெதிராக
உள்ளமெலாம் நைந்துருக
உடலெரிந்து கரியாக
அள்ளியழல் சொரிகுதியா
ஐயோ அவிர்மதியே

ஆழிவாய்ச் சத்த மடங்கிற்றோ எல்வாக்கூஉம்
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஊழி
திரண்டதோ இன்று தினகர னுந் தேனும்
உருண்டதோ பாதாளத் துள்.

அந்தமின் றியே சிவசிதம்பரன்—எங்கள்
அம்மைசிவ காமியொடு அங்குக் கூடவே
சிந்தையொ டெழுந்தந்த விந்துநாதமே—அதில்
வந்துதோன் றிய ஆதிப்பறையர் நாங்களே
பயின்றுநின்றே பருமுரசால் நாம்பாடியே நித்தம்
—எங்கள்

பரம்பொன்மன் றிலனு தினமே நாம்பாடியேநித்தம்
முயன் றிடுங்கா லருகினில்நின்றே
தாம் தரிகிட தத்தம்—என்று
முழங்குகின் ற பறையெமதென்றே
மோதிச் சேவித்தெம்
முன்னணி தன்னிலே நிற்கும்—நம
தின்னிலமக்க ளெவற்கும்—வேத

மன்னிடுவேதிய ரொக்கும்—எழில்
துன்னிடுபேரிகை கொட்டும்
மன்னவனும் ராசசேகரவெட்டியான்
துன்னியஇச்சபை மீதினிற்பேரிகை
டும்—டும்—டும்மென்று .... .... அந்தம்

ஆண்டை மார்களே நயிந்தை மார்களே
ஈண்டுக் கூறுதல் வேண்டிக் கேண்மினோ
மண் டிணிந்த கரும பூமியில்
வந் தெழுந்த மனித வுயிருக்
கின் றி யமையா விரண்டு காரியம்
உண்டி யொன்றே உடைமற் றொன்றே
ஏரி னுழுத லுண்டி யுதவும்
நூலி னெசவு சீலை உதவும்
ஏரி னுழவுஞ் சீலை நெசவுஞ்
ஒன் றுயர்ந்த தொன் ற தல்ல
ஈடு கூற வேறு முண்டோ
உடையை யுதவும் நெசவு தொழிலோ
மானங் காக்கும் வளங்க ளாக்கும்
ஈனம் போக்கும் எழிலைச் சேர்க்கும்
பொன்னைக் கொடுக்கும் புகழை யெடுக்கும்
அடிமை நீக்கும் மிடியைப் போக்கும்
அரசை மீட்கும் குடியைக் காக்கும்
சோம்பை வீக்குந் தொழிலை யாக்கும்
நெசவு தொழிலை இழிவு தொழிலாம்
ஆண்டை மார்களே நயிந்தை மார்களே

தெள்ளிய நீதி வள்ளுவன் செய்த
எள்ளலில் தொழிலும் நெசவு தொழிலை
ஏந்தும் புகழ்ச்சிக் காந்தி யடிகள்
தேர்ந்து கொண்டதும் நெசவு தொழிலை
ஆதி சிதம்பர நாத னெங்களுக்
கம்மை சுந்தரி யோடு தந்திடும்
நீதியான நெசவு தொழிலை
நீங்கள் விடுத்த நேரந் தொடங்கி
வறுமை வந்தது பெருமை நின்றது
அரசு போனது அடிமை யானது
பெண்கள் தந்தொழில் விட்டுக் கெட்டனர்
பேதை மார்கள் சோம்பிக் கெட்டனர்
பாவை யெடுங்கள் தறியை நடுங்கள்
காலை மாலை நூலை நூலுங்கள்
ஆடை நெய்யுங்கள் பீடை போய்விடும்
இழந்த வரசியல் பெற்று
வளம்பெற வாழலாம் வாய்மையீங் கிதுவே

முக்கோண மான நெடுந்தீ விலங்கு
முளைத் தெழுந்ததொர் தாலப்பனை
அக்கோண மாறையுந் தாண்டி நிமிர்ந்தெழுந்
தப்பாலும் போனதத் தாலப்பனை

அந்தப் பனையிலோர் வெள்ளைப் பாளைவந்து
அறிவன் தடியினாற் றட்டிவிட
முந்தி யொழுகிய வெள்ளைக்கள்ளைச் சப்பி
மூக்கு முட்டக் குடித்தேன் நயிந்தே

ஆறுதலுங் கண்டே னப்பால் வெளிகண்டேன்
அவ்வெளி யூடொரு சோதி கண்டேன்
ஏறு வெறிகொண்டே னந்த வெறியினால்
என்னையுங் கண்டில னென் நயிந்தே

சிந்து

தீண்டாத சாதி நாமென்றே—எம்மைச்
சேராது விடவேண்டாம் ஆண்டைமாரே
ஆண்டவ னார்படைப்பில்—நாங்கள்
அரிய படைப்பா மையே ஆண்டைமார்களே
அரசன் பணி புரிகுவோம்—கலி
யாண முரசூரினுக் கறைந் தறிவிப்போம்
உரிமை செசவு தொழிலால்—உங்கட்
கோதுமுடை தந்துமது மானங் காப்போம்
சாவுக் குரிமை யுடனே—வந்து
தக்கபறை கொட்டு குடிமக்க ளியாமே
வாழ்வுக்கு முங்கள் முன்றினில்—வந்து
வாழ்த்துகின்ற நல்லகுடி மக்க ளியாமே
புலையரென் றெம்மைத் தள்ளுவீர்—கல்வி
புகட்டாது விட்டதனாற் புலைய ராஞேம்
உலகிலாக் கல்விதந் தீரேல்—நாங்கள்
உங்களைப்போ லாசார முடைய ராகுவோம்.

சீட்டாஞ் சீட்டாஞ் (மெட்டு)

வீதியிலுள்ள ஆண்டை மார்களே—இதோ
விள்வேஞோர் வார்த்தை கேளும் நீங்களே
வீரதீரமான நீலபாலராசன் தேவி .... வீதி

கேட்ட வூர்க்கு முரசறைய வேண்டுமாம்—சோழ
நாட்டோர்க்குச் சீட்டனுப்ப வேண்டுமாம்
காட்டுப் பாதையில் றோட்டுக் கடுத்த
நாட்டி லாண்டைமார் கேட்டுக் கொள்ளுங்கள்

பால னுயிரிளங் குமார மன்னனும்—அவற்கும்
பாவை யின்ப வல்லிக்குங் கல்யாணமாம்—அதற்கு
பாக்குத் தோரணம் மாட்டி வாழை
றோட்டிற் கரும்பு நாட்டி விடுங்கள் .... வீதி

பிரபவ வருஷம் வைகாசி மாதமாம்—வருமி
ரண்டாந் திகதி சனி வாரமாம்
அதுவு மிரா ரெண்டரை மணியாமா
மதிலியியைந்த திதி யோதிர யோதசியாம் வீதி

புத்தூரில் மூன்று வண்டில் பூசினிக்காயா—மதற்
கொத்த எழுவண்டி மரவள்ளி மூலமாம்
சித்தங் கேணி வயலிலுள—எள்
முத்தற் பயறு மூணு பாரம் .... வீதி

ஆயிரத் தெண்ணூ றவிட்டு வாணமாம்—மெற்றுசி
லேயிருந் தெடுத்திருக் கின்றார்களாம்—அதுவும்
அடுக்குச் சக்கரந் தோடுஞ் சிலையும்
நடிக்குங் காவடி வெடிக்குஞ் சீனடி .... வீதி

50600

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1